www.padippakam.com

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# புதிய பூமி

පුදිය පූමි

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

PUTHIYA POOMI

சுற்று 09 | ஒக்ரோபர் 2002 | பக்கம் 12 | விலை 10/- | சுழற்றி 51

# இந்தியா குழப்ப முயல்கிறது அமெரிக்கா உட்புக நிற்கிறது

தாய்லாந்து பேச்சுவார்த்தையின் முதலாவது கட்டம் முடிவடைந்து விட்டது. கடந்த 16ம் 17ம் 18ம் திகதிகளில் நடைபெற்ற ஆரம்பப் பேச்சுவார்த்தை சரியான திசையில் செல்லக்கூடிய அறிகுறிகளை வெளிக் காட்டியிருந்தது. அரசாங்கம், விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்புமே தத்தமது விடாப்பிடியான நிலைப்பாட்டை முன் நிறுத்தவோ வற்புறுத்தவோ இல்லை. இத்தகைய அணுகுமுறை பேச்சு வார்த்தையின் நீடிப்பிற்கு அவசியமான அடிப்படையை வழங்கியுள்ளது.

இவ் ஆரம்பப் பேச்சுவார்த்தையில் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சில முக்கிய முடிவுகள் மேற் கொள்ளப்பட்டன. வடக்கு, கிழக்கில் இரு தரப்பாலும் புதைக்கப்பட்ட நிலையி லிருந்து வரும் லட்சக்கணக்கான கண்ணிவெடிகளை அகற்றுதல். புனரமைப்பு, புனர்வாழ்வு, பொருளாதார மீள் கட்டமைப்பு என்பனவற்றை மேற் கொள்ளுதல். இதற்கான செயலணி ஒன்றினை இருதரப்பும் இணைந்து செயல்படுத்த இணக்கம் காணப்பட்டது.

மேலும் இப் பேச்சுவார்த்தை முடிவில் அமைச்சர் ஜி.எல்.பீரிசும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் ஊடகவியலாளர் சந்திப்பின்போது வெளியிட்ட கருத்துக்கள் வரவேற்பைப் பெற்றதுடன் நம்பிக்கை தருவதாகவும் அமைந் திருந்தது. அவற்றில் நிதானமும், புரிந்துணர்வும், விட்டுக்கொடுப்பும் காணப்பட்டன. இத்தகைய பரஸ்பர அணுகுமுறை அடுத்தடுத்த கட்டப் பேச்சுவார்த்தைகளின் போது கடைப் பிடிக்கப்பட்டு நியாயமானதும் உறுதி யானதுமான தீர்வு காணப்படவேண்டும் என்பதே அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பும் விருப்பமுமாகும்.

நாடு பிரிவினைக்கு உட்படாத வகையில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வை நடைமுறைக்கு கொண்டுவரத் தாம் தயாராக இருப்பதாக அரசாங்கத்தின் சார்பில் அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார். அதேவேளை தமிழீழக் கோரிக்கைக்குப் பதிலாக சுயநிர்ணய உரிமை அடிப்படையில் பிரதேச சுயாட்சியை ஏற்கத் தயாராக இருப்பதாக விடுதலை ப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறினார். அது சாத்தியமாக்கப்படாது போனால் தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறு வழி புலிகளுக்கு இல்லை என்பதையும் அவர் வெளிப்படுத்தி யிருந்தார்.

மேற்படி ஆரம்ப நிலைப் பேச்சுவார்த்தை யின் உள்ளடக்கத்தை சமாதானம், அரசியல் தீர்வு என்பனவற்றை விரும்பும் யுத்தத்தை வெறுத்து எதிர்க்கும் அனைவரும் வரவேற்கின்றனர். ஆனால் பேரினவாத வெறி கிளப்பி நிற்போரும் அதன் மூலம் அரசியல் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற நிற்கும் சக்திகள் தமது எதிர்ப்பைத் தெரிவித்தே வருகின்றன. இருப்பினும் மக்கள் மத்தியில் பேரினவாத வெறி நிலையை எதிர்பார்த்தளவுக்கு கிளப்பிவிட முடியவில்லை. யுத்தத்தின் பன்முகப் பாதிப்புக்களைப் பெற்று அனுபவித்த மக்கள் மீண்டும் அதற்குள் வீழ்ந்து கொள்ள விரும்பவில்லை என்பதையே காணமுடிகின்றது.

நோர்வேயின் மூன்றாம் தரப்பு அனுசரணையுடன் நடைபெற்று வரும் இப்பேச்சு வார்த்தையை இப் பிராந்தியத்தின் பெரிய அண்ணன் ஆதிக்கம் செலுத்த நிற்கும் இந்திய ஆளும் வர்க்கத்தினரால் உள்வாங்கிக் கொள்ள இயலவில்லை. இந்தியா இப்பேச்சுவார்த்தை பற்றி விழுங்கவும் முடியாது கக்கவும் முடியாது என்ற ஒரு சங்கடமான நிலையிலேயே இருந்து வருவதைக் காணமுடிகின்றது.

இந்தியா தனது இராஜதந்திர மொழியில் பேச்சுவார்த்தையை வரவேற்று ஆதரிப்பது போன்றே அறிக்கைகள் வெளியிடுகின்றது. ஆனால் உள்ளார்ந்த ரீதியில் பேச்சுவார்த்தை குழம்பிப் போவதையே விரும்புகிறது. அதற்கான முயற்சிகளில் மறைமுகமாக ஈடுபட்டும் வருகின்றது. இலங்கைக் கான தமது தூதுவரை மாற்றிக் கொண்டது முதல் தமிழ் நாட்டில் ஜெயலலிதா மூலமாக வை.கோ., நெடுமாறன் மற்றும் இருவரைப் புலிகளின் முகவர்கள் எனக்கூறி பொடா சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்ததுவரை பேச்சுவார்த்தைக்கு குழிபறிக்கும் முயற்சியேயாகும். இந்தியக் கொள்கை வகுப்போரினதும் ஆளும் வர்க்கத்தினரதும் உண்மையான எண்ணங்களை இந்துப் பத்திரிகையும் அதன் சகோதர சஞ்சிகைகளும் வெளிப்படுத்துகின்றன. மேலும் இந்திய தேசிய அகங்காரத்தை வெளிப்படுத்தும் சில அரசியல் ஆய்வாளர்களும் பேச்சு வார்த்தை விரைவில் முறிந்துகொள்ளும் என்ற எதிர்வுகூறலையே எழுதி வருகின்றனர். இத்தகையவர்களது கூற்று உழைக்கும் இந்திய மக்களது விருப்பமாகவோ அபிலாஷைகளாகவோ இருக்க முடியாது. இந்திய ஆளும் வர்க்கமும் அவர்களது உளவு நிறுவனமான 'றோ'வும் திரும்பத் திரும்ப இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் "அகண்டபாரதம்" என்ற பிராந்திய மேலாதிக்கத்தை மையமாகக் கொண்ட தீர்மானங்களையே எடுத்து வருகிறார் கள். இந்நிலைப்பாடு அடிப்படையில் இந்தியாவின் பல்தேசிய இனங்களைக் கொண்ட நூறுகோடி இந்திய மக்களுக்கு எவ்வகையிலும் உதவமாட்டாது.

இந்திய மேலாதிக்க சக்திகள் இவ்வாறு இலங்கையின் இனப்பிரச்சினையைத் தவறாகக் கையாண்டுவந்த சூழலைப் பயன்படுத்தி அமெரிக்க ஏகாதிபத்தியம் தருணம் பார்த்து உட்புகுந்து வருகிறது. நோர்வேயின் மூன்றாம் தரப்பு அனுசரணை என்பது தவிர்க்கமுடியாத நிர்பந்த சூழலில் ஏற்பட்டதாகும். அதனாலேயே நாம் நோர்வேயின் பங்களிப்பை நிபந்தனையுடன் ஏற்க வேண்டும் எனக் கூறினோம். இதுவரை அதன் செயற்பாடு சரியாகவே அமைந்து வந்திருக்கிறது. தொடர்ந்து அவ்வாறு இருக்க வேண்டும் என்பது வற்புறுத்தப்பட வேண்டியதாகும். ஏனெனில் அமெரிக்காவின் நலன் களுக்கான தேவைகள் நோர்வேயின் ஊடாகப் பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்லாதிருப்பதை உறுதி செய்து கொள்வது அவசியம்.

அமெரிக்காவின் நிலைப்பாடு அரசாங்கத்தோடு

12ம் பக்கம் பார்க்க..

## 19வது திருத்தத்தின் ஊடாக அரசின் உள்நோக்கம் என்ன?

பாராளுமன்றம் கலைக்கப்படுவதை ஐ.தே.மு தலைமை விரும்புவதாகவே தெரிகிறது. ஜனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத்தை கலைப்பதற்கு முன்னதாக ஐ.தே.மு அரசாங்கமே பாராளுமன்றத்தை கலைத்துவிட முடியுமா என்பது பற்றி ஐ.தே.மு வட்டாரங்களில் ஆராயப்பட்டதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத்தை கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரங்களை பறிக்கும் 19வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் ஐ.தே.கட்சி விடாப்பிடியாக இருப்பதன் மூலம் ஜனாதிபதியை நிர்பந்தத்திற்குள்ளாக்கி, முதலில் பாராளுமன்றத்தை ஒத்திவைக் கும் பின்னர் கலைக்கும் அதிகாரத்தை யும் பிரயோகிக்க வேண்டும் என்று ஐ.தே.மு தலைமை விரும்புவதாகவே தெரிகிறது.

பாராளுமன்றத்தை உரியகாலத்திற்கு கலைக்க மாட்டேன் என்று எழுத்துமூலம் ஜனாதிபதி சந்திரிகா உறுதியளித்திருந்தபோதும் அதனை பொறுத்திருந்து பார்க்காமல் 19வது திருத்தச்சட்டத்தை விடாப்பிடியாக நிறைவேற்ற முயற்சிப்பதன் பின்னணியில் ஐ.தே.முன்னணிக்கு உள்நோக்கம் இருக்கிறது.

ஐ.தே.முன்னணிக்கு பெரும்பான்மை பலம் இருக்கும்வரை தான் பாராளு மன்றத்தை கலைக்கப்போவதில்லை என்று சபாநாயகருக்கு ஜனாதிபதி சந்திரிகா கடிதமொன்றை எழுதி யிருந்தார். அவ்வாக்குறுதியை மீறியும் அவர் பாராளுமன்றத்தைக் கலைக்க லாம் என்றாலும் ஐ.தே.மு தலைமை ஜனாதிபதிக்கு கால அவகாசத்தை கொடுத்திருக்கலாம்.

ஐ.தே.மு அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளை குழப்பாமல் இருப்பதற்கு 19வது திருத்தச்சட்டத்தை மட்டும் நிறைவேற்றுவது போதாது. முழு நிறைவேற்று அதிகாரங்களும் ஜனாதிபதியிடம் இருக்கும்வரை அவர் அவற்றைப் பயன்படுத்தி இடையூறு செய்யலாம்.

எனவே தற்போதைய பொருளாதார நெருக்கடிகளிலும், வடக்கு கிழக்கு புனரமைப்புக்களை செய்ய முடியாத நிலையிலிருந்து மீள்வதற்கு முடியாத ஐ.தே.மு அரசாங்கம் முழுப்பொறுப்பை யும் ஜனாதிபதி யின் தலையில்

12ம் பக்கம் பார்க்க..

## மேல்கொத்மலைத் திட்டமும் இ.தொ.கா.வும்

## இறுதிவரை ஆறுமுகம் தொண்டமான் நிற்பாரா?

மேல்கொத்மலைத் திட்டத்தை எப்படியும் நடைமுறைப்படுத்துவதென அமைச் சரவை முடிவெடுத்துவிட்டதாக செய்தி கள் வெளியாகியுள்ளன. தன்னுடைய எதிர்ப்பை கவனத்தில் எடுக்காது ஐ.தே.மு. அரசாங்கம் முடிவெடுத்து விட்டதாக இ.தொ.கா. அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் அவரது நெருங்கிய சகாக்களுக்கு தெரிவித் துள்ளார். அதனாலேயே அவர் மன முடைந்து போய் இந்தியாவுக்கு சென்ற தாகவும் கூறப்படுகிறது. காலஞ்சென்ற தொண்டமானும் மனமுடைந்து போனால் இந்தியாவுக்குச் செல்வது வழக்கம் தானே! அதனை பேரன் தொண்டமானும் பின்பற்றுகிறார் போல் தெரிகிறது!

ஆனால் இ.தொ.கா. தெரிவித்த கருத்துக்களையும் கணக்கில் எடுத்து சூழலுக்குப் பாதிப்பில்லாமல் மேல் கொத்மலைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக இ.தொ.கா.வின் தேசிய அமைப்பாளரும் தேசிய

12ம் பக்கம் பார்க்க..

## சிறையில் உள்ளோரை விடுதலை செய்! பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு!!

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைகளில் அடைக்கப்பட்டிருந்த பதின்மூன்று விடுதலைப் புலிகள் கைதிகள் பரிமாற்றத்தின் கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். பதிலுக்கு ஏழு படையினர் விடுவிக்கப்பட்டுள்ளனர். பேச்சுவார்த்தையின் நடுவே இடம்பெற்ற இந்நிகழ்வு வரவேற்கப்பட வேண்டியதே. ஆனால் இதற்கும் அப்பால் பொது வானதும் ஆழமானதுமான கவலை யாதெனில் பல ஆண்டுகளாக இரண் டாயிரம் பேர்வரையிலான தமிழர்கள் விசாரணையின்றி சிறைகளில் இருந்து வருவதுதான். இவர்களில் முதியவர்கள், இளம் பெண்கள், குழந்தைகளுடன் தாய்மார் அடங்குவர். இவர்கள் மீதான குற்றச்சாட்டு விடுதலைப் புலிகளுக்கு உதவியது என்பதே பொதுவானதாகும். ஆதாரம், சித்திவதைகள் மூலம் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் மட்டுமே. பல வருடங்களாக மோசமான சிறைச்சாலைகள், ராணுவமுகாம்கள், பொலிஸ் தடுப்பகங்கள் என்பனவற்றில் சிறைவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளான இவர்களை விடுவிப்பதில் அரசாங்கம் அக்கறை காட்டாது இருந்து வருகின்றமை மர்மம் அல்ல. தமிழர் அரசியல் போராட்டத்தை நசுக்க வேண்டும் என்பதற்காகவேயாகும். இதன் மூலம் பேரினவாத ஒடுக்கு முறையின் வீரியம் இந்தத் தமிழ் அரசியல் கைதிகள் மீதே பாய்ச்சப்பட்டு வந்துள்ளது. இதன் விளைவானதே அடிக்கடி சிறைச்சாலைகளில் இடம் பெறும் மோதல்களும் உண்ணாவிரதங் களுமாகும்.

இன்று விடுதலைப் புலிகள் விடுவிக்கப் பட்டுவரும் சுமுகமான சூழலில் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் சிறைகளில் அடைத்து வைக்கப்படுவதில் துளியளவுகூட நியாயம் இருக்க முடியாது. அவர்கள் உடன் விடுவிக்கப் படல் வேண்டும். அத்துடன் இதுபோன்ற கொடிய சிறைவாசத்திற்கு

தொடர்ச்சி 12ம் பக்கம்

## நவீன ஹிட்லராக டபிள்யூ புஷ்! அமெரிக்க ஆதிக்கமே நோக்கம்

அண்மையில் ஜேர்மனியின் அமைச்சர் ஒருவர் டபிள்யூ புஷ்சை ஹிட்லருக்கு ஒப்பிட்டுப் பேசினார். அவரது பேச்சு அமெரிக்க ஜேர்மன் உறவில் விரிசலைக் கொண்டு வந்தது. ஆனால் மேற்படி கூற்று முற்றிலும் ஆதாரம் கொண்ட கூற்றாகும். அதனை உறுதிப்படுத்தும் வகையில் வெள்ளை மாளிகையின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண் டொலிஸாரைஸ் வெளிப்படை யாகவே பேசியிருக்கிறார். "அமெரிக்கா உலகில் ஒரு விஷேசமான நாடு. அதன் ராணுவ மேலாண்மையை வேறு எவரும் விஞ்சக்கூடாது. மீண்டும் முன்னைய சோவியத் யூனியன் போன்றொரு போட்டி நாடு உருவாகக் கூடாது. உலகின் சுதந்திரத்திற்கு அமெரிக்கா வின் வல்லரசு ஆதிக்கமே தேவை யானது. அதற்கு உலக நாடுகள் ஒத் துழைப்பு வழங்க வேண்டும்" இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இது ஒரு தனிநபரின் கருத்தல்ல. அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக ஆதிக்கம் பற்றிய நோக்கு. வெள்ளை மாளிகையின் கொள்கை வகுப்பாளர் களின் நிலைப்பாடு- அன்று ஹிட்லர் யூதர்களுக்கு எதிராகத் தொடங்கியே இரண்டாவது உலக யுத்தத்திற்குள் உலகை இழுத்துச் சென்றான். இன்று ஜோர்ஜ் டபிள்யூ புஷ் இஸ்லாமியர் களுக்கு எதிராக யுத்தம் தொடுத்து நிற்கிறார். அல்ஹைடாவையும் பின் லாடனையும் அழிக்கவெனக் கூறி ஆப்கானிஸ்தானில் புகுந்து கொலை வெறி நடாத்தப்பட்டது. இப்போது ஈராக் மீது போர் தொடுக்க காரணங்கள் தேடி நிற்கிறார் புஷ். தனது அழிவு தரும் ஆயுதங்கள் பற்றி கதைக்க மறுத்து ஈராக்கிடம் மட்டும் ஆயுதம் தேடிக் கண்டுபிடிக்க நிற்கிறது அமெரிக்கக் கழுகு. பாலஸ்தீனத்தில் நடாத்தி வரும் இஸ்ரேலிய சியோனி சவாதிகளின் கேடுகெட்ட மனித விரோதப் படுகொலைகளுக்கு பச்சைக் கொடி காட்டி நிற்பவரும் அதே புஷ்தான். இத்தகைய உலகக் கொலை வெறிப் பயங்கரவாதியை நவீன ஹிட்லர் என்று அழைப்பதில் என்ன தவறு இருக்கிறது. எனவே அமெரிக்காவின் உலக வல்லாதிக்க விரிவுபடுத்தலுக்கும் அதன் கொடிய மனித விரோத ராணுவ நடவடிக்கைகளுக்கும் எதிராக உலக மக்களோடு நாமும் கைகோர்த்து நிற்பதே நியாயமான நிலைப்பாடாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# திருகோணமலையில் அனல் மின் நிலையம்
# தடுத்து நிறுத்தப்பட வேண்டும்!

நிலக்கரி அனல் மின் நிலையத்தை திருகோணமலையில் துறைமுகத்தை அண்டிய பிரதேசத்தில் நிறுவுவதற்கு அரசு முடிவு செய்துள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் பகிரங்கப்படுத்தியுள்ளன. ஆனால், இது பற்றி திருகோணமலை மாவட்ட மக்களுக்கு தெளிவான முடிவுகள் கிடைக்கவில்லை என்பது துயரமாகும். இது விடயத்தில் அரசாங்கம் எதுவித ஆரவாரமுமின்றி இரகசியமாகவே செயற்படுத்தத் துணிகின்றது போல் தெரிகின்றது.

இதற்கு முன்பும் ஒருமுறை திருகோணமலை சீனன் குடாப் பிரதேசத்தில் அனல் மின் நிலையத்தை நிறுவ அரசு யோசித்த போதும், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்கு அது பாதகமாக அமைந்துவிடுமென சுற்றுப்புறச் சூழல் நிபுணர்கள் அச்சம் தெரிவித்த காரணத்தினால் மின் நிலையத் திட்டம் கைவிடப்பட்டு, நுரைச்சோலைக்கு மாற்றும் யோசனை தெரிவிக்கப்பட்டது.

ஆனால், நுரைச்சோலையில் அனல் மின் நிலையம் அமைக்கப்படுவதற்கு புத்தளம் மாவட்ட மக்கள் பெரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். மக்களின் இந்த கிளர்ச்சி நடவடிக்கைகளில் மனித உயிர் ஒன்றும் பலியானது. மக்களின் தொடர்ச்சியான போராட்டங்களுக்கு வலுவூட்டக் கூடியதாக சிலாபம் மேற்றிராணியாரும் அனல் மின் நிலையம் நுரைச்சோலையில் அமைவதை கடுமையாக எதிர்த்தார். மக்கள் கிளர்ச்சிகளும், அரசியல் சமூக அமைப்புகளின் எதிர்ப்பும் வலுவடைந்து வருவதைக் கண்ட அரசு நுரைச்சோலையில் அனல் மின் நிலையம் நிறுவும் திட்டத்தை கைவிட்டது.

சிறிது காலம் அமைதி காணப்பட்டது. தேர்தல் நடைபெற்றதால் மக்களின் வெறுப்புக்கு ஆளாகாமல் இருப்பதற்காக இந்த அமைதி பேணப்பட்டது என எண்ணலாம். எந்த அரசாங்கம் வந்தாலும் மக்களின் விருப்பு வெறுப்புக்களை நோக்காது தாங்கள் நினைத்ததை சாதிக்கவே முனைப்புடன் செயல்படுகின்றன. அந்நிய ஆதிக்க சக்திகளின் வேண்டுகோள்களையும் திட்டங்களையும் தலைமேற்கொண்டு, சொந்த நாட்டு நலன், மக்கள் நலன் என்பவற்றை புறக்கணித்து செயற்படுத்த தலைகீழாக நிற்கின்றன என்பது வெளிப்படையானது. இதற்கு மேல் கொத்மலை நீர் மின் திட்டமும் ஒரு உதாரணமாகும்.

அனல் மின் நிலையத் திட்டத்தை செயற்படுத்தவென இதுவரை முப்பத்திரண்டு பிரதேசங்கள் தெரிவு செய்யப்பட்டதாக ஒரு பாரளுமன்ற உறுப்பினர் கூறியிருக்கின்றார். எதுவும் சரிவராத நிலையில்தான் நுரைச்சோலையில் அனல் மின் நிலையம் அமைக்க துடியாய் துடித்தது அரசு. ஆனால், அதுவும் மக்கள் கிளர்ச்சிகளால் தவிடு பொடியானதால் திரும்பவும் திருகோணமலை பிரதேசத்தில் அரசின் கண்கள் விழுந்து இருக்கின்றன. இது தொடர்பாக பிரதமர் தலைமையில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெற்று, திருகோணமலையில் நிலக்கரி அனல் மின் நிலையத்தை நிறுவும் திட்டத்தை தீவிர கவனத்துக்கு எடுத்து இருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள சீனன் குடாவை அண்டிய துறைமுகப் பகுதியில் அனல் மின் நிலையம் வருவதை இலங்கை விமானப் படையினர் விரும்பவில்லையென தெரிய வருகின்றது. இதனால் துறைமுகத்தை அண்டிய வேறு பகுதியில் நிறுவுவதற்கு அரசு யோசிக்கின்றது.

இதற்கிடையில் திருகோணமலை மாவட்டத்தில் அனல் மின் நிலையம் வருவதை பல்வேறு அமைப்புகள் விரும்பவில்லை. இதற்காக பல அமைப்புகள் ஒன்று சேர்ந்து திருகோணமலை சுற்றுச் சூழல் விழிப்புணர்வு அமைப்பு ஒன்றை கூட்டிணைத்து உள்ளவர்கள்: இதன் மூலம் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றார்கள். துண்டறிக்கை ஒன்றையும் மக்கள் மத்தியில் உலாவ விட்டுள்ளார்கள். இதன் எதிர்ப்புக் கூட்டத்தில் பொறியியல்துறைப் பேராசிரியர் சி. சிவசேகரம் அவர்கள் பங்கு கொண்டு பல விடயங்களையும் கூறியுள்ளார்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் மற்றும் தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரெட்ணசிங்கம் என்போர்களும் கலந்து கொண்டு இதனை எதிர்ப்பதாகக் கூறியுள்ளார்கள். ஆனால், பாராளுமன்றத்தில் அல்லது அரசு உயர் மட்டத்திலோ இவர்கள் எப்படி

**தமிழர் தலைமைகள் மௌனம் ஏன்?**

செயல்படுவார்களோ தெரியவில்லை. ஏனெனில் இது விடயமாக பாராளுமன்றத்திலோ, உயர் மட்டத்திலோ இவர்கள் எதிர் கருத்து தெரிவித்ததாக இதுவரை செய்திகள் இல்லை!

திருகோணமலையில் அனல் மின் நிலையம் அமைக்கப்பட்டால், திருகோணமலையில் இயல்பாகவே உள்ள கூடிய வெப்பம் மேலும் உயர்வடையக் கூடிய அபாயம் உள்ளது. உயிரினங்களுக்கும் ஆபத்தான சுற்றுச் சூழல் உருவாகும். மக்களுக்கும் பல்வேறுபட்ட நோய்கள் உண்டாகும் என திருகோணமலை சுற்றுச் சூழல் விழிப்புணர்வு அமைப்பினர் எச்சரித்து உள்ளனர்.

அனல் மின் நிலையத்தில் நிலக்கரி எரிக்கப்படுவதால் சுவாசிக்கும் காற்றுக் கூட மாசுபடும். கிணறு, குளம், ஆறு, கடல் என நீர் நிலைகள் மாசுபடும். நீரில் விஷத்தன்மை உருவாகும். விளைநிலங்கள், பயிர்கள் நாசமடையும். கடற்றொழில் பாதிப்படையும். கடல் உயிரினங்களும் பாதிக்கப்படும் என்றெல்லாம் கூறப்படுகின்றன. நிலக்கரிக் கழிவு, எரியும் போது உருவாகும் சாம்பல் இவற்றால் ஏற்படும் அழிவுகள் சொல்லும் தரமல்ல. மிகவும் மோசமாக இருக்கும் என சுற்றுச் சூழல் விழிப்புணர்வு அமைப்பினர் மக்களை எச்சரித்து வருகின்றனர்.

திருகோணமலை வட-கிழக்கு மாகாணங்களின் அதாவது ஈழத்தின் தலைநகரமாக விளங்கும் பூமியாகும்! இதன் சுற்றுச் சூழல் ஆரோக்கியமாக இருந்தால்தான் திருகோணமலையும் மக்களும் நாளைக்கு நிலைத்து இருக்க முடியும். திருகோணமலை சகல வளங்களையும் கொண்ட பூமியாகும். சிறந்த கடல் வளம், நில வளம் மற்றும்

**திரிகோணன்**

இயற்கைத் துறைமுக வசதி என்று அதன் பெறுமதி மிகவும் மதிப்பு வாய்ந்தது ஆகும். அதனால்தான் அந்நிய சக்திகள் இங்கு கண் பதிக்கின்றன. ஏற்கனவே, இங்கு நன்கு திட்டமிடப்படாது சில தொழிற்சாலைகள் நிறுவப்பட்டதால் சுற்றுச் சூழல் மாசுபடுவதுடன், அங்கு வாழும் மக்களுக்கு பலவித நோய்கள் உருவாவதும் கவனிக்கப்பட்டுள்ளன. இது ஒரு ஆரம்ப எச்சரிக்கை அறிகுறியாகும்.

மறுபுறம் அந்நிய சக்திகள் நுழைய ஆயத்தமாக உள்ளன. பாரிய எண்ணெய் குதங்கள் இந்தியாவிற்கு கொடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவுக்கு நுழையும் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் யார் யார் எல்லாம் உள் நுழைவார்களோ தெரியாது. இதற்கு எல்லாம் அத்திவாரமாக அனல் மின் நிலையம் வரவுள்ளது. இங்கே உற்பத்தியாகும் மின்சாரம் யாருக்காக பயன்படப் போகின்றது என்பதும் முக்கிய கேள்வியாகும்? அமையப்போகும் அனல் மின் நிலையத்தால் மக்களும் இடம் பெயர்ந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம் என்பதும் மறுக்கக் கூடியது அல்ல!

இதுவரையும் நாட்டிலே எத்தனையோ மின் சக்தி நிலையங்கள் உருவாக்கியாயிற்று. இதனால் மக்களுக்கு என்ன பலன் கிடைத்துள்ளன? யாருக்கு இதன் பலன் எல்லாம் போய் சேருகின்றது?

நாட்டையும், மக்கள் நலனையும் கவனியாது உருவாகும் திட்டங்களால் பெறப்படும் மின்சாரம் நாளைக்கு யாருக்கு பயயன்படப் போகின்றது?

மின்சாரம் தேவைதான். அதற்காக அழிவை உண்டாக்கும் அனல் மின் நிலையங்கள் மற்றும் மக்களின் வாழ்வாதாரங்களை அழித்து உருவாக்கும் மேல்கொத்மலை நீர் மின் திட்டம் போன்றவற்றை உருவாக்கியா மின்சாரம் பெற வேண்டும்? இதைவிட்டால் வேறு வழிகள் இல்லையா? என மக்கள் கேட்பதில் என்ன தவறு உள்ளது?

முக்கியமாக அனல் மின் நிலையம் இயங்குவதற்குத் தேவையான நிலக்கரி எம்மிடம் உள்ளதா? இல்லை. அதையும் நாம் மிகக் கூடிய விலை கொடுத்தே வாங்க வேண்டும்! இந்த நிலையில் நிலக்கரி கிடைப்பது தடைப்பட்டு போனால் அனல் மின் நிலையத்தின் கதி என்னவாகும்? எமது நாட்டின் நிலை என்னாகும்?

எமது நாட்டில் சூழலியல் ரீதியாக ஆபத்தற்ற, மாறுபாடு அதிகமற்ற மாற்று முறைகள் மூலம் மின்சாரம் பெற முடியாதா? வேறு நாடுகளில் இப்படியான முயற்சிகள் மூலம் மின்சாரம் பெறுவதை எமது தலைவர்கள் அறியமாட்டார்களா? எமது நாட்டின் விஞ்ஞானிகளுக்கும், திட்ட அறிஞர்களுக்கும் புதிய கண்டுபிடிப்புகள் உதிப்பதே இல்லையா? புத்தகத்தில் உள்ளதும், அந்நியன் ஓதுவதும்தான் வேத வாக்கா? இவ்வாறு சாதாரண மக்கள் கேட்பதில் என்ன தவறுள்ளது. மக்கள் சிந்திக்கும் அளவுக்கு எமது உயர் மட்டத்தினர் சிந்திக்க மறுப்பதேன்?

பல நாடுகளில் இன்று மாற்று சக்திகள் மூலம் மின்சாரம் பெறப்பட்டு தொழிற்சாலைகள் இயங்குகின்றன. அதன் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட சாதனங்கள் ஏராளம் வெளி வருகின்றன. இவற்றை ஏன் நாம் உற்று நோக்குவதும் இல்லை? பின்பற்றுவதும் இல்லை?

எமது பிரதேசம் எத்தனையோ வழிகளில் பாழாக்கப்படப் போகின்றது. இது பற்றி நாம் தாம் உரத்து சிந்திக்க வேண்டும். எமது நாட்டின் நலம், மக்களின் நலம் புறக்கணிக்கப்படுகின்றது. இந்த நிலையில் எமது அரசியல் தலைவர்கள் என்ன செய்யப் போகின்றார்கள்? அவர்களுக்குப் பணம், பதவி, அந்தஸ்து, ஆடம்பர வாழ்வு என்பன கிடைத்தால் அவையே அவர்களது சொர்க்கமாகும்.

தேர்தல் காலங்களில் எட்டுக்கால் ஊன்றி வட்டக் குடை பிடித்து எடுபிடிகள் ஊர்வலம் வர ஏதோ ஏதோ எல்லாம் உளறினார்கள். தேர்தல் முடிந்தவுடன் பறந்து சென்று விட்டார்கள். மறு தேர்தலுக்கு வருவார்கள். அது மட்டும் கார்களுடன் நின்று படமும் போடுவார்கள், மந்திரிமார்களுடன் குடித்துக் கூத்துமடிப்பார்கள்?

மக்கள் எதற்குப் போனாலும் "பேசாமல் இரு. சமாதானம் வருகின்றது நாடு செழிக்கப் போகின்றது அமெரிக்கா வருகின்றது இந்தியா அணைக்கின்றது ஓம் சூம் மந்திர காளி" என மந்திரம் உச்சாடிக்கின்றனர். மக்களுக்கு என்ன குறை எனவும் கேட்கின்றனர்?

அனல் மின் நிலையம் வந்தால் என்ன? நீர் மின் நிலையம் வந்தால் என்ன? மறு தேர்தல் மட்டும் பேசா மடந்தைகளாக இருப்பார்கள். ஏனெனில் மக்கள் சார்பாகப் பேசி அரசாங்கத்தையும் அமைச்சர்களையும் ஏன் தான் பகைத்துக் கொள்ள வேண்டும். அடுத்த தேர்தல் வரை தங்கள் தங்கள் பைகளை நிரப்புவதில் கவனம் காட்டினால் அவர்களுக்குப் போதுமான தாகும். இந்த தலைவர்களை நம்பி மோசம் போகாது மக்கள் எதிர்ப்பு இயக்கங்களைக் கட்டுவதே சரியான வழி முறையாகும்.

# நாலு நடக்கும் நற்குணம் உலகிலே

## தொப்பியை மேலும் பொருத்தமாக்குவது பற்றி

சென்ற புதிய பூமியில் "வீரகேசரி" எவ்வளவு நடுநிலையான பத்திரிகை என்று அலசப்பட்டிருந்தது. அதன் ஆசிரியர்களில் ஒருவர் புதிய பூமியைப் பார்த்து கொதித்துப் போய் "இனிமேற் தொட்டு புதிய-ஜனநாயகக் கட்சி அறிக்கை ஒன்றையும் வீரகேசரியில் வெளிவர விடமாட்டேன்" என்று சூளுரைத்தாராம். அவர் அப்படிச் செய்வது புதிய-ஜனநாயகக் கட்சிக்கு இதுவரை வீரகேசரி காட்டி வந்த 'பரிவை' எவ்வகையிலும் குறைக்காது என்பது அவருக்கே தெரிய வேண்டும். அவருடைய புதிய இருட்டடிப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்துவது, புதிய பூமி கட்டுரையில் சொன்னவற்றை மேலும் உறுதி செய்யும் என்பதும் அவருக்குத் தெரியாததா?

பாவம். என்ன செய்வது! ஒரு குற்றச் சாட்டையும் மறுக்க வழியில்லை. சோறு போடும் எசமான விசுவாசம் எல்லாவற்றிலும் பெரிதல்லவா! இதையாவது செய்யாவிட்டால் செஞ்சோற்றுக் கடன் கழியுமா?

## அட ராமா!

இந்து பத்திரிகையின் இந்திய மேலாதிக்க முகங்களில் ஒன்று ராம். "மார்க்ஸிஸ்ட்" கம்யூனிஸ்ட் கட்சியுடன் ஏதோ வகை உறவு வைத்துக் கொண்டு ஆங்கிலத்தில் அக்கட்சிக்கு அனுதாபமான ஆங்கில சஞ்சிகை நடத்துகிற ராமின் அரசியல் என்றுமே மேலாதிக்க அரசியலே தான். நெடுங்காலமாகவே இந்திய மேலாதிக்கத்தின் குரலாகவே ராம் இருந்து வருகிறார். இலங்கைத் தமிழருக்கு அனுதாபமாக இந்தியா இனி எதுவுமே செய்யாது என்று அண்மையில் மிரட்டியுள்ள ராம், சந்திரிகா பண்டாரநாயக்க விடுதலைப் புலிகள் தொடர்பாகக் கடைப்பிடிக்கிற கொள்கையே சரியானது என்றும் சொல்லியிருக்கிறார்.

கதிர்காமர் கெட்டார். போங்கள்!

## நேற்று தோழர் சண்ணுக்கு இன்று தோழர் கார்த்திகேசனுக்கு

கார்ல் மார்க்சுக்கு ஜோஜ் புஷ் விழா எடுத்தால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்ய முடியாவிட்டால் தோழர் கார்த்திகேசனுக்கு என்.ஜி.ஓ. உதிரிகள் செம்ரெம்பர் மாதம் நடத்திய நினைவுக் கூட்டத்தைப் பற்றி விசாரித்தறியலாம். இடதுசாரி இயக்கத்தைக் கைவிட்டு என்.ஜி.ஓ. பணத்தில் இலக்கியக் குதிரையோட்டுகிற ஒரு கூட்டம் இடதுசாரி இயக்கத்தோடு ஒட்டும் உறவும் இல்லாத இன்னொரு என்.ஜி.ஓ. நபரைக் கூப்பிட்டு "இடதுசாரி இயக்கம் எங்கே தோற்றது" என்ற தலைப்பில் பேச அழைத்தது போல தோழர் கார்த்திகேசனுக்கு அவமரியாதை கிடையாது.

கூட்டம் பற்றிய அறிவித்தல் தோழர் கார்த்திகேசனுடைய அரசியல் நண்பர்கள் எவருக்குமே அனுப்பப்படவில்லை. அது மட்டுமன்றிக் கூட்டத்திற்கு நியமிக்கப்பட்ட நாளில் இன்னொரு முக்கியமான கலந்துரையாடல் தோழர் சண்முகதாசன் மாக்ஸிய கற்கை நிலையத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது பற்றியும் தோழர் கார்த்திகேசனுக்கு இழுக்கு ஏற்படுத்த முயன்ற இந்த உதிரிகள் நன்கு அறிவார்கள்.

இதற்கு ஒரு மாதம் முன்னர், ஹற்றனில், செங்கொடிச் சங்கத்தை தோழர் சண்ணிடமிருந்து வஞ்சனையால் கைப்பற்றிய ஒ.ஏ.ராமையா, தோழர் சண் பின்னர் நிறுவிய புதிய செங்கொடிச் சங்கத்தின் பேர்ப்பலகையைக் களவாடி உரிமை கொண்டாடும் உதிரிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட சண்முகதாசன் நினைவுக் கூட்டத்திற் பேசியது பலருக்கு நினைவிருக்கும். அங்கு அவர் தனது துரோகங்களை மறைக்க மாக்ஸிய-லெனினிச வாதிகளுக்கு மாசு கற்பித்துப் பேசியவை பல ஏடுகளிலும் பிரசுரமாயின.

"ஒற்றைச் சிறையினிலே உங்கள் எல்லாரையுமே வைச்சு எரிச்சாலும் வயித்தெரிச்சல் தீராது" என்ற புதுமைப் பித்தனின் வரிகள் இந்த மாதிரி உதிரிகள் பற்றியதாகவே இருக்க முடியும்!

## ஒரே குரலில் பேசச் சொல்வதிலுள்ள வில்லங்கம்

பேராசிரியர் சிவத்தம்பி இருக்கிறாரே, அவர் உண்மையாக என்ன நினைக்கிறார் என்று அவர் சொன்னதை வைத்து யாரும் முடிவு செய்ய முடியாது என்பது பழைய கதை. அதுதான் புதிய கதையுங் கூட. இப்போதும் பேராசிரியப் பெருந்தகை முன்போல தெளிவாகவே இருக்கிறார். விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக "நோத் ஈஸ்ற் ஹெரல்ட்" என்ற புதிய வார ஏட்டில் அவர் இப்போது எழுதத் தொடங்கியுள்ளார். தமிழர் தேசிய முன்னணியிலுள்ள தமிழ்க்கட்சிகள் நாலும் ஒரே குரலில் பேச வேண்டும் என்பது அவரது பரிந்துரை. அது எந்த விதமான குரல் என்று அவர் சொல்லமாட்டார். ஆனாலும் அவர்கள் ஒரே குரலில் பேசினால் போதுமானது.

இந்திய மேலாதிக்கம் பற்றியோ அமெரிக்க ஏகாதிபத்தியம் பற்றியோ யூஎன்.பி. அரசாங்கத்தின் அயற் கொள்கை பற்றியோ அவர்கள் என்ன பேச வேண்டும் என்றெல்லாம் பேராசிரியர் சொல்லமாட்டார்.

அவர் நாடகத்துறை பற்றிய ஆய்வாளர் என்று நாம் அறிவோம். வேஷம் போடுவதில் அவரது தேர்ச்சி கடந்த பத்தாண்டுகளில் நன்றாகவே புலனாகியுள்ளது. இப்போது ரஷ்யச் சிவப்பு முற்றாகவே கழன்றுவிட்டது. என்றாலும் புதுவேடம் எடுபடுமா என்பதுதான் பிரச்சனை.

நாலு கட்சிக் கூட்டணி சொன்னது என்ன? விடுதலைப் புலிகள் ஒருதரம் சொன்னால் நாங்கள் நூறு தரம் சொன்ன மாதிரி என்று எப்போதோ சொல்லி விட்டார்களே! இதற்கு மேல், பேராசிரியர் ஒருவர் அவர்களுக்கு எதுவும் சொல்ல வேண்டுமா? அல்லது பேராசிரியர் விடுதலைப் புலிகள் ஒருதரம் பேசவேண்டும் என்று சொல்கிறாரா?

## அண்ணன் நினைவாகத் தம்பிமார்

காலஞ்சென்ற அமிர்தலிங்கத்தின் 75வது பிறந்த நாளை முன்னிட்டுப் பத்திரிகை தவறாமல் அவரது த.வி.கூ. தம்பிமார் அவரது மாசற்ற புகழ் பாடிக் களித்துள்ளார்கள். இதன் நோக்கம் என்ன? விடுதலைப் புலிகளின் அடியார்க்கும் அடியேன் என்று பாடி சா விமோசனம் பெற்ற சிவசிதம்பரத்துக்குக் கிடைத்த முத்தியை அண்ணன் அமிருக்கும் பெற்றுத் தருகிற நப்பாசையா?

சென்ற தேர்தலில் அமிர்தலிங்கத்தின் படத்தைக் கூடப் பிரசாரக் கூட்டங்களில் வைக்கத் துணியாத தமிழர் விடுதலைக் கூத்தணிக்கு அண்ணன் மேல் எவ்வாறு பாசம் பிறந்தது?

விடுதலைப் புலிகளுக்கு "கூய் கூய்" காட்டுவதற்கு கூத்தணித் தலைமையின் 'இரவல் தாய் நாட்டின்' எசமானர்களது ஆணையின் பேரில் இது நடக்கிறதாகச் சொல்கிறார்களே. உண்மையா? அது பற்றி ஆனந்த சங்கதி என்னவாம்?

படிப்பகம்

www.padippakam.com



# பொறிக்குள் அகப்பட்ட தமிழர் தேசிய கூட்டமைப்பு

கடந்த தேர்தலில் தமிழர் கூட்டமைப்பு ஆரவாரமாக வெற்றியடைந்த வேளை சரியான ஒரு பொறிக்குள் அகப்பட்டிருப்பதை உணர்ந்து கொள்ளவில்லை. வழமைபோன்று தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வீசி வெற்றி பெற்றபின் தமது வழியில் செயற்படலாம் என்றே நம்பியிருந்தனர். அவர்களது எதிர்பார்ப்பில் மண்தான் விழுந்து கொண்டது. அரசாங்கம்-புலிகள் இயக்கப் புரிந்துணர்வு ஒப்பந்தம், பிரபாகரன் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பு என்பன இவர்களைச் செல்லாக் காசாக்கிக் கொண்டன. அத்துடன் கூட்டமைப்பினரை வன்னிக்கு அழைத்து வழிகாட்டல் வழங்கியதுடன் இனிமேல் தாம் நினைத்தபடி ஆடமுடியாது என்பதை முற்றாகப் புரிந்துகொள்ள வேண்டியதாயிற்று. பொறியின் வில்லு சரியான இடத்தில் வீழ்ந்துள்ளதை அப்போதுதான் அவர்களால் உணர முடிந்தது.

தான் நினைத்தபடி தேசியப்பட்டியல் உறுப்பினரை நியமிக்க முடியாது போனமை ஆனந்தசங்கரியாருக்கு பலத்த ஏமாற்றமாகும். அத்துடன் தமிழ் மக்கள் சார்பாக அப்படி இப்படி என வாய்ச்சவடால் அறிக்கைவிட்டு தனது தலைமையை விளம்பரப்படுத்த முடியவில்லையே என்றும் அவருக்கு மன உழைச்சலாகும். அதேவேளை மாவை சேனாதிராசாவோடு உருவாகிய முறுகல் நிலையும் தணியவில்லை.

முக்கிய விடயம் என்னவெனில் கூட்டமைப்பின் மூன்று கட்சிகள் இந்திய எசமானர்களின் விசுவாசிகள். இந்தியாவில் அக்கட்சிகளின் தலைவர்களுக்கு சொத்து சுகம் தாராளமாக உண்டு. அதனாலேயே ஜெயலலிதாவையோ இந்தியத் தலைவர்களையோ தாக்கிப் பேசக்கூடாது எனச் சங்கரியார் அறிக்கை விட்டார். இத்தகைய கூட்டமைப்பினர் இப்போது பொறிக்குள்-பூட்டுக்குள் அகப்பட்டு நிற்பதால் தமது இந்திய விசுவாசத்தை வெளிக்காட்ட முடியாது அவஸ்தைப்படுகிறார்கள். அவர்கள் தூதரகப் படிகளில் ஏறமுடியாமலும் டெல்லிக்கு போகமுடியாமலும் சங்கடப்பட்டு நிற்கின்றனர். இந்தியாவும் இவர்களால் பிரயோசனம் பெற இயலாது என்ற நிலைக்கு வந்துள்ளது. தங்களுக்குள் ஒற்றுமை இல்லாது ஒன்றை ஒன்று கடித்து நிற்கும் கூட்டமைப்புக் கட்சிகள் இப்போது மாட்டிக் கொண்ட பொறிதான் சரியான பொறியாகும்.

# தந்தையின் வழியில் மைந்தன்

பெருந்தோட்டப் பிரதியமைச்சராக இருப்பவர் நவீன் திசநாயக்கா. இவர் மறைந்த காமினி திசநாயக்காவின் புத்திரன். பரம்பரை யூஎன்.பி. தடித்த இனவாதி. ஆதிக்க அரசியல் குடும்பத்திலிருந்து வந்த இவர் தந்தையிடம் இருந்து வாரிசு உரிமையாகப் பலவற்றைப் பெற்றுக் கொண்டவர். அதில் ஒன்று இனவாதம். மலையகத்தில் இனவாதத்தை நடைமுறைப் படுத்தியவர். காமினி திசநாயக்கா திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை தோட்டங்கள் மத்தியில் உருவாக்குவதில் முன்னின்றவர். மலையகத்தின் ஒவ்வொரு பெரிய சிறிய நகரங்களையும் சிங்களப் பேரினவாத ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்பது அவரது நீண்டகாலத் திட்டம். அதற்கு ஒரே வழி தோட்டக் காணிகளை சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளித்து குடியேற்றுவதாகும். அதன் ஊடாக இனவாதத்தைப் பரப்பி இரு இன மக்களையும் மோதல் நிலையில் வைத்திருப்பதாகும். இத்தகைய ஒருவரின் மகன்தான் நவீன் திசநாயக்கா. மேல் கொத்மலைநீர் மின்சாரத்திட்டத்தை நிறைவேற்றியே தீருவேன் எனச் சபதம் எடுத்து நிற்கிறார். அவரது சபதத்திற்கு காரணம் உள்ளார்ந்த இனக் குரோதமேயாகும். மேற்படி திட்டத்தால் மலையகத் தமிழர் குடும்பங்கள் வெளியேறும் வேலைவாய்ப்பு என்ற பெயரில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் அதிகரிக்கும். தலவாக் கொல்லையில் சிங்கள இனவாதிகளின் கைகள் ஓங்கும் நிலை உருவாகும் என்பதே கணக்கு. அதனாலேயே மேல் கொத்மலைத் திட்டத்தை எதிர்க்கும் அமைச்சர் ஆறுமுகத்தை ராஜினாமாச் செய்யும்படி நவீன் கோரிக்கை விடுத்துள்ளார். யூஎன்.பி.யை கண்மண் தெரியாது ஆதரிக்கும் மலையகப் பிரமுகர்கள் இதனை உணர்வார்களா? மக்களுக்கு இதுபற்றி என்ன கூறப் போகிறார்கள்.

# மாணவர்களின் மறியல் போராட்டம்

கடந்த 18-09-2002 அன்று இராகலை சிங்கள, தமிழ் மாணவர்கள் ஒன்றிணைந்து புருக்சைட் சந்தியில் உடப்புசல்லாவ-நுவரெலியா பிரதான வீதியை மறித்து மறியல் போராட்டம் செய்ததால் பல மணிநேரம் போக்குவரத்து தடைப்பட்டது. பல மாதங்களாக ஹபொரஸ்ட் பகுதிக்கான போக்குவரத்து பஸ். சேவையில் ஈடுபடாததன் காரணத்தினால் மாணவர்கள் ஆத்திரமடைந்து வீதிக்கு இறங்கும் நிலையேற்பட்டது.

ஹபொரஸ்ட் வீதி உடைந்து பாதாளம் போல் உள்ளது. பஸ்சேவை சீராக இல்லை. கல்வி அமைச்சர் உட்பட மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைவருக்கும் இதுபற்றி அறிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தனியார் வாகனங்களில் ஹபொரஸ்ட்டில் இருந்து இராகலைக்கு 17.50/- அறவிடப்படுகின்றது. இந்நிலையில் ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என எல்லோரும் பாதிப்புற்றுள்ளனர்.

இதன் காரணமாகவே மாணவர்கள் மறியலில் ஈடுபட்டனர். ஸ்தலத்திற்கு விஜயம் செய்த இராகலை பொலிஸ் நிலைய அதிகாரி அங்கிருந்த ஆசிரியர்களுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்ததன் பேரில் மறியல் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது. எவ்வாறாயினும் உரியவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் மீண்டும் போராட்டத்தில் இறங்குவோம் என மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

# குடாநாட்டில் வரியும் விலையும்

குடாநாட்டிற்கு ஏ9 பாதை திறந்தாச்சு. பொருட்களுக்கு இருந்த கட்டுப்பாடுகளும் நீக்கப்பட்டு விட்டன. தரை வழியாகப் பொருட்கள் தாராளமாக எடுத்துச் செல்லப்படுகின்றன. தட்டுப்பாடும். கட்டுப்பாடும் கிடையாது. ஆனால் பொருட்களின் கொழும்பு விலையை விடக் கூடுதலாகவே அங்கு விற்கப்படுகின்றன. ஒரு நடுத்தர வர்த்தகரிடம் நட்பு ரீதியில் இதன் சூக்குமம் என்ன என்று கேட்டேன். அவர் கூறினார் இதில் ஒன்றும் இரகசியம் கிடையாது. பொருட்கள் ஏற்றி வர கூலி அதிகம் ஒன்று. புலிகள் வரி அறவிடுகிறார்கள் இரண்டு. எங்களுக்கு லாபம் வேண்டும் மூன்று. புலிகள் பெரும் தொகையில் நன்கொடை அறவிடுகிறார்கள் நான்கு. மின்சாரம். தொலைபேசி. கட்டிட வாடகை யாவும் கொழும்பை விட அதிகம் ஐந்து. இந்த ஐந்து வகைக் கொடுப்பனவையும் நாங்கள் எங்கிருந்து பெறுவது. எனவேதான் பொருட்களில் அதிக விலை வைத்து சகலதையும் மக்களிடமிருந்து மொத்தமாகப் பெற்று விடுகிறோம் என்றார் அந்த வர்த்தகர். அத்துடன் யாழ்ப்பாணத்தில் மிக முக்கிய பொருட்களின் விலைகளை மூன்று. நான்கு பெருமுதலாளிகளே தீர்மானிக்கிறார்கள். அவர்களில் மகேஸ்வரன் (தமிழ் அமைச்சர்) குடும்பமும் ஒன்று என்ற விபரத்தையும் அந்த வர்த்தக அன்பர் ஒளிவு மறைவின்றி எடுத்துக் கூறினார். புலிகள் தமக்கு வரி தேவை என்று கூறி பத்தடி பாய்ந்தால் பெரும் வர்த்தகர்களோ அதனைச் சாட்டாக வைத்து நூறடி பாய்ந்து கொள்கிறார்கள். நாட்டுக்கு ஒரு மழை நமக்கு இரண்டு மழை என மக்கள் நனைந்து நடுங்க வேண்டியதுதான்.

# சினிமாக் கொள்ளையர்கள்

வர்த்தக சினிமா என்ற பெயரில் தமிழ் நாட்டில் இருந்து நாளாந்தம் குப்பைத்தனமான படங்கள் வெளி வந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் பழமைவாதக் கருத்துக்கள், பாலியல் ஆபாசங்கள், வன்முறை வக்கிரங்கள், மூட நம்பிக்கைகள் தாராளமாகக் காட்டப்படுகின்றன. இந்த வகைச் சினிமாவின் நோக்கமே மக்களிடமிருந்து பணத்தைக் கொள்ளையிடுவது தான். இவற்றோடு பல்தேசியக் கம்பெனிகள் தமது விளம்பரத்தைப் புகுத்தியும் வருகின்றன. அதில் முன் நிற்பது கொக்கா கோலா பன்னாட்டு இராட்சத மென்பான நிறுவனமாகும். அதன் விளம்பரம் வராத சினிமாவே இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது. ஒரு வருடத்திற்கு முன்பு விஜேய் என்ற சினிமா நடிகருக்கு கொக்கா கோலா நிறுவனம் ஒரு கோடி ரூபா வழங்கி ஒரு வருட விளம்பரக் குத்தகையைப் பெற்றது. ஒரு வருடத்திற்கு அந்த நடிகர் வேறு மென்பானங்களைக் கையில் வைத்திருக்கக் கூடாது. அதேவேளை எங்கும் எப்போதும் கொக்கா கோலாவையே வைத்து விளம்பரம் செய்ய வேண்டும் என்பதாகும். இதே இராட்சத நிறுவனம் அண்மையில் வெளிவந்த பிற்போக்குப் படமான பாபா படத்தில் விளம்பரம் செய்ய ரஜனிகாந் நடிகருக்கு நான்கு கோடி ரூபா கொடுத்திருக்கிறது. கேடுகெட்ட படங்கள் மூலம் மக்களிடமிருந்து ரூபாய்களில் லட்ச லட்சமாகக் கொள்ளையிடும் தயாரிப்பாளர்களும் நடிகர்களும் கொக்கா கோலா போன்ற பல்தேசிய நிறுவனங்களிடமிருந்து கோடி கோடியாகப் பெற்றுக் கொள்கிறார்கள். தமிழ் நாட்டு சினிமாவும் நடிக சிகாமணிகளும் எவ்வளவிற்கு தாழ்ந்து போய்க் கிடக்கிறார்கள். இதனை உணர்வார்களா இரசிகர் பெரும் கூட்டம்.

# கிராமசேவை உத்தியோகத்தர்களின் அடாவடித்தனம்

வடபுலத்தில் கிராமசேவை உத்தியோகத்தர்கள் சிலர் மிக அடாவடித் தனமாக நடந்து கொள்வதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர். ஆனால் அதுபற்றி மேலிட அதிகாரிகள் கண்டும் காணாது போன்று இருந்து வருகிறார்களாம். முன்பு இருந்த தலைமைக் காரன்-விதானை முறை ஒழிக்கப்பட்டே கிராமசேவையாளர் முறை கொண்டு வரப்பட்டது. ஆனால் இந்த சேவையாளர்கள் சிலர் முன்னைய விதானைமாரை விட மோசமான திமிருடன் நடந்து கொள்கிறார்கள். அத்துடன் மக்களுக்கு சேர வேண்டியவற்றில் கூச்சநாச்சமின்றி கைகளை விட்டுத் தமது பைகளையும் நிரப்பிக் கொள்கிறார்கள். நிவாரண உலர் உணவு முதல் வீட்டு அழிவுகள், கொல்லப்பட்டவர்களுக்கான நட்ட உதவித் தொகை போன்றவற்றில் இந்த கிராம சேவையாளர்களின் திருகு தாளங்கள் பல வகைப்பட்டதாகும். சில கிராம சேவையாளர்கள் மிக கண்ணியத்துடன் நேர்மையாக மக்களுக்கு சேவை செய்து வருகிறார்கள். ஆனால் வேறு சிலரோ மிக அடாவடித்தனமாகவும் அற்பத்தனமாகவும் சாதிய வெறியுடனும் நடந்து கொள்கிறார்கள். இவர்கள் எந்த இயக்கம், எந்தக் கட்சி. எந்த அதிகாரியைக் காக்கா பிடிப்பது என்பதைக் கற்றுக் கொண்டே 'சேவை' ஆற்றுவார்கள். முன்பு ஈ.பி.டி.பி.க்கு அரோகராப் போட்டுக் கொண்ட சில கிராமசேவையாளர் புலிகளின் ஆதரவாளர்களாக காட்டி முன் நிற்பது மட்டுமன்றி மக்களை வெருட்டவும் செய்கிறார்கள்.

# செம்மணிப் புதைகுழிகள் மீது உப்பு விளைவிப்பா?

செம்மணி என்றால் உலகெங்கும் அறியப்பட்ட பெயர். இங்குதான் 1996ல் வடபுலத்தில் ராணுவத்தால் பிடிக்கப்பட்டுக் காணாமல் போனவர்கள் அறுநூறு பேர்களின் உடல்கள் புதைக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அதற்கு ஆதாரமாக நீதிமன்ற உத்தரவுப்படி சிலரது உடல்கள் தோண்டி எடுக்கப்பட்டன. பின்பு யாவும் நிறுத்தப்பட்டு கிடப்பில் போடப்பட்டன. காணாமல் போனோர் பற்றிய முடிபும் இல்லை. புதைகுழிகளும் தோண்டப்படவில்லை. செம்மணி பாராளுமன்ற படியேறியோருக்குப் பயன்பட்டது தான் மிச்சம். இப்போது அதே செம்மணியைப் பயன்படுத்த முதலாளிகள் முன்வந்திருப்பதாக செய்தி கசிந்திருக்கிறது. செம்மணியில் உப்பு விளைவித்து அதனை நீர்வேலியில் கட்டப்பட உள்ள தொழிற்சாலை மூலம் பொதிகளில் அடைத்து பலத்த விளம்பரத்துடன் விற்பனைக்கு விட உரிய அலுவல்கள் நடைபெறுகின்றனவாம். செம்மணிப் பிரச்சினை முடிவின்றி இருக்க அப் புதைகுழிகளின் மீது உப்பு விளைவித்து லாபம் பெற நிற்கிற முதலாளியக் கூட்டத்தை என்னவென்று அழைப்பது. அதற்கும் மேலாக செம்மணியில் உப்பு விளைவித்தால் உவர்த்தன்மை நீங்கிய வயல் நிலங்களும் உப்பு நீராக மாறி நன்னீராகிய கிணறுகளும் மீண்டும் உவர்-உப்பாக மாறிக் கொள்ளவே செய்யும். ஏற்கனவே குடாநாட்டு நன்னீர் உவர் நீராக மாறி வரும் ஆபத்தை எதிர் நோக்கி நிற்கிறது. இவற்றைக் கவனத்தில் கொள்ளாது வெறும் லாப நோக்கிற்காக உப்பு விளைவிக்க முயல்வது மக்களுக்கும் மண்ணுக்கும் நீருக்கும் சூழலுக்கும் செய்யும் மாபெரும் துரோகமாகும். இவ்வாறுதான் வடக்கு-கிழக்கில் தூர நோக்கற்ற உடனடிப் பண லாபத்திற்காக முதலீடுகள் வரப் போகிறதா? மக்களும் மக்கள் சார்பான அமைப்புகளும் விழிப்பாக இருப்பது அவசியம்.

# மாணிக்கக்கல் வியாபாரிகளின் வழக்கு

3-3/4 ஏக்கர் பரப்பு தேயிலைக் காணி மாணிக்கக்கல் அகழ்விற்காக ஏலம் விடப்படுவதை எதிர்த்து சென்-லெனாட்ஸ் தோட்டப் பொதுமக்கள் வெகுஜனப்போராட்டம் நடாத்தி வந்த நிலையில் தோட்ட முகாமையாளர் மக்களின் எதிர்ப்பை உதாசீனம் செய்து தோட்டக் காணியை ஏலத்திற்கு அனுமதித்தார். ஏலத்தில் நிலத்துண்டுகளை எடுத்தவர்கள் தங்கள் நிலங்களைப் பார்க்க வந்தபோது விரட்டியடிக்கப்பட்டனர்.

இவ்வாறு விரட்டப்பட்டவர்களின் முறைபாட்டினால் நுவரேலியா நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்களை தாக்கியதாக சந்தேகத்தின் பேரில் இராயப்பன் தேவகடாட்சம் என்னும் இரண்டு பிள்ளைகளின் தந்தை கைது செய்யப்பட்டு 13ம் திகதி பதுளை சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டார்.

2002-09-16ம் திகதி நுவரேலியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு அடையாள அணிவகுப்பும் நடைபெற்றது. அடையாள அணிவகுப்பில் முறைப்பாட்டாளர்களினால் சந்தேக நபர் அடையாளம் காணப்படவில்லை. இதனால் நீதவானால் ரூபா 20.000.-சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

# சாதியும் கோவிலும்

அண்மையில் வடபுலத்து சாதியப் பிரச்சினை எந்த அளவில் இருக்கிறது என ஒரு ஓய்வுபெற்ற ஆசிரியரிடம் கேட்டேன். அவர் மிகுந்த உணர்ச்சி வசப்பட்ட நிலையில் யாழ் நகர முதல்வர் செல்லன் கந்தையனுக்கு விழுந்த அடியும் உதையும் வடபுலத்து சாதியத்தின் நிலையை விளங்க வைக்கும் பதச் சோறு என்றார். அவர் மேலும் பல விடயங்களை ஆதாரங்கள் உதாரணங்களுடன் கூறிக் கொண்டதுடன் குடாநாட்டில் 48 நடுத்தர சைவக் கோவில்களும் 103 சாதாரண கோவில்களும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னும் திறந்து விடப்படவில்லை என்ற தகவலையும் தெரிவித்தார். இந்த நடுத்தரக் கோவில்களில் அதிகமானவை வடமராட்சியில் இருப்பதாகவும் தமிழ்த் தலைவர்களின் கோவில்களும் அவற்றில் உள்ளடங்கும் என்ற விபரத்தையும் கூறினார். தமிழர் தேசியப் போராட்டத்தில் சாதியம் ஒழிந்து விட்டதாகக் கூறுவோருக்கு இத் தகவல் சமர்ப்பணம்.

# வலப்பனை பிரதேச சபையால் தட்டச்சு இயந்திரம் வழங்கப்பட்டதா?

கடந்த 2001ம் வருடத்திற்கான வலப்பனை பிரதேச சபையின் நிதி அறிக்கை 2002-07-08 அன்று வெளியிடப்பட்டுள்ளது. அவ்வறிக்கையின்படி சென்டலெனாட்ஸ் தோட்ட தொழிற் பயிற்சி நிலையம் ஒன்றிற்கு ரூபா 25.000/- பெறுமதியான தமிழ் தட்டச்சு இயந்திரம் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான பயிற்சி நிலையம் ஒன்று இத்தோட்டத்தில் இல்லையென்றும் தட்டச்சு இயந்திரம் எதுவும் யாருக்கும் வழங்கப்படவில்லையென்றும் தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். அவ்வாறெனில் தட்டச்சு இயந்திரத்திற்காக ஒதுக்கப்பட்ட பணத்திற்கு என்ன நடந்தது? அரசாங்க அதிபர். பிரதேச சபைத் தலைவர் ஆகியோரே பணத்திற்குப் பொறுப்பானவர்கள். கடந்த முறையும் தலைவராக இருந்த ஜகத் அவர்களே இம்முறையும் பிரதேசசபை தலைவராக இருப்பதால் அவர் இதற்கு பதில் கூற வேண்டியது அவரது கடமையாகும்.

www.padippakam.com



# மலையகத் தமிழ்த் தேசிய இனமும் அவர்களது பொருளாதாரமும்

ம. அழகேசன்.

மலையகத்தமிழ் மக்களின் எண்ணிக்கையில் பெரும்பாலானோர் தோட்டத் தொழிலாளர்கள் ஆவதுடன் தோட்டத் தொழிலையே நம்பியே அதிகப் பெரும்பான்மையான மலையகத்தமிழ் மக்கள் வாழ்கின்றனர். இலங்கைக்கு பிரிட்டிஷ் காலத்தில் வந்த இந்தியர்களில் 85 சதவீதமானவர்கள் தோட்டத் தொழிலாளர்களாக வேலைக் கமர்த்தப் பட்டனர். நிலச்சொந்தக்காரர்களாகவும் பெருந்தோட்டச் சொந்தக்காரர்களாகவும் வர்த்தகர்களாகவும் அடைவு - வட்டி வியாபாரம் செய்பவர்களாகவும் சிறுகடைச் சொந்தக்காரர்களாகவும் அரசாங்க அலுவலர்களாகவும் துறைமுக. ரயில்வே தொழிலாளர்களாகவும் இருந்த இந்தியர்களின் எண்ணிக்கை 15 சதவீதமாகும். இன்று முழு இந்தியத் தமிழர்களும் மலையகத்தமிழ்மக்கள் என்ற அடையாளத்துடனேயே இருக்கின்றனர்.

15 லட்சம் என்று கூறப்படுகின்ற மலையகத்தமிழ்மக்களில் இன்று 85 சதவீதமானோர் பெருந்தோட்டப் பகுதிகளிலேயே வாழ்கின்றனர். அவர்களில் ஆசிரியர்கள். அரசாங்க அலுவலர்கள் சிறியளவில் புலமைசார்ந்தோரும், வியாபாரிகளாகவும் கணிசமானோர் இருக்கின்றனர். இதைத்தவிர சிலர் ஆடைஉற்பத்தி தொழிற்சாலைகளில் தொழிலாளர்களாகவும் இருக்கின்றனர்.

இலங்கையின் ஆக்கத்திற்கான பிரதான பொருளாதாரமாக இருந்ததும் இருந்து வருவதும் பெருந்தோட்டப் பொருளாதாரமாகும். இலங்கையின் தேசியவருமானத்தில் 66 சதவீதம் பெருந்தோட்டங்களிலிருந்தே பெறப்படுகின்றது. இத்தோட்டங்கள் பிரிட்டிஷ் கம்பனிகளுக்கும் பின்னர் பெரும்பாலும் இலங்கையர்களுக்கு சொந்தமாக இருந்தன. 1970-77 காலகட்டத்தில் தேசியமயமாக்கப்பட்டு அரசாங்க சபைகளால் நடத்தப்பட்டன. 1991இற்கு பின்னர் 22 பெருந்தோட்டக் கம்பனிகளுக்கு தோட்டங்கள் குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளன. அக்கம்பனிகளே இன்று ஆகப்பெரும்பான்மையான பெருந்தோட்டங்களை நடத்துகின்றன. அவற்றுக்கு உழைப்பை வழங்குபவர்கள் மலையகத் தமிழர்களாவர். ஏனைய துறைகளில் குறிப்பாக வர்த்தகத்துறையில் 1930களில் 60 சதவீதமான கட்டுப்பாட்டை இந்தியத் தமிழர்கள் கொண்டிருந்தனர். இன்று கொழும்பு இரண்டாம் சந்தை என்று சொல்லப்படுகின்ற மரபுரீதியான வியாபாரத்தில் அவர்களின் கட்டுப்பாடு ஓரளவாவது இருப்பதை அவதானிக்க முடிகிறது. படிப்படியாக சிங்கள தேசியவாதத்தினால் அவர்களுக்கு வர்த்தகத் துறையில் இடமில்லாது போனது. 1930களுக்குப் பிறகு அரசதுறையிலும், துறைமுகம், ரயில்வே ஆகிய துறைகளில் வேலை செய்த இந்தியர்களுக்கு வேலையில்லாமல் போனது. அவர்கள் உடைமை செய்த நிலங்கள் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டன.

மலையகத் தமிழ் மக்கள் உயிர்வாழ்வதற்கான பொருளாதாரத்தில் ஆரம்ப அடிப்படைகளைக் கூட கொண்டிருக்கவில்லை. அவர்கள் மீதான இன, வர்க்க பாரபட்சங்களும் தொடர்ச்சியான ஒடுக்குமுறைகளும் தன்னிறைவான பொருளாதாரத்தை கொண்டிருக்க இடம் பொடுக்கவில்லை இன்றும்கூட வீடில்லா காணியில்லாதவர்களாக நிரந்தர முகவரியற்றவர்களாகவே இருக்கின்றனர்.

இருப்பினும் முழு இலங்கையின் உழைப்போர் படையில் (Labour Force) இல் அதிகமானவர்களாக இருப்போர் பெருந்தோட்டத் துறையை சேர்ந்த தொழிலாளர்களே ஆவர். இலங்கையின் உருவாக்கத்திற்கு பொருளாதார ரீதியாக முக்கிய பங்கை வகித்தது போன்று இன்றும் வகித்து வருகின்றார்கள்.

எனவே அவர்களின் பொருளாதாரம் பெருந்தோட்டப் பொருளாதாரம்தான். தற்போதும் அதனை பாதுகாத்து கட்டுப்பாட்டை செலுத்துபவர்கள் தோட்டத் தொழிலாளர்களே.

இன்றைய உலக சூழலில்

**தூர நோக்கில் மாற்றுப் பொருளாதார திட்டம் பற்றிய சிந்தனை அவசியம்**

நாடொன்றிற்கே தன்னிறைவான பொருளாதாரம் என்பது அவசியமற்ற தாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் ஒரு நாட்டிற்குள் தனி ஒரு தேசமாவதற்கான தொடர்ச்சியான நிலப்பரப்பற்றவர்களாக்கப்பட்டு, இன ரீதியாகவும். வர்க்க ரீதியாகவும் மிகவும் மோசமாக ஒடுக்கப்பட்டுள்ள மலையகத்தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாகக் கொள்வதற்கு தன்னிறைவான பொருளாதாரம் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பொருத்தமற்றது. வடக்கு கிழக்கு தமிழ்மக்களுக்கும். முஸ்லிம் மக்களுக்கும் கூட தன்னிறைவான பொருளாதாரம் இருப்பதாகக் கொள்ள முடியாது.

மலையக மக்கள் உழைப்போர் என்ற ரீதியில் கட்டுப்பாடு செலுத்துகின்ற பெருந்தோட்டப் பொருளாதாரத்தை பாதுகாத்து நிலைநிறுத்த வேண்டியவர்களாக இருக்கின்றனர். பெருந்தோட்டப் பொருளாதாரம் போன்ற பரந்த பொருளாதார கட்டமைப்புடைய பொருளாதாரத்திற்கு மாற்று பொருளாதாரத்தை கட்டியமைக்கும்வரை அதனையே ஜீவாதாரமானதாகக் கொண்டு அதனைப் பாதுகாக்க வேண்டியவர்களாகவும் மலையக மக்கள் இருக்கின்றனர்.

உலகமயமாதலின் கீழ் உழைப்பு ஒழுங்கமைக்கப் படாததாக்கப்படுகின்றது. பொருளாதாரக் கட்டமைப்பும் சிதறடிக்கப்படுகின்றது. இலங்கையின் முதலாளித்துவம் இனவாதத்துடனேயே சக ஜீவனம் செய்வதால் மலையகத் தமிழர்கள் கட்டுப்பாட்டை செலுத்தும் பெருந் தோட்டப் பொருளாதாரத்தை சீரழிப்பதை மிக இலகுவாக அனுமதிக்கும்.

அதனால் ஒரு தேசிய இனம் என்ற ரீதியிலும், வர்க்க ரீதியிலும் மலையகத் தமிழ் மக்கள் முதலாளி வர்க்கத்திற்கும் அதன் பேரினவாதத்திற்கும் எதிராக, உலகமயமாதலுக்கு எதிராக அணித்திரள்வதன் மூலமே அவர்களின் வாழ்விற்கு ஆதாரமாக்கப்பட்டுள்ள பெருந்தோட்டப் பொருளாதாரத்தை பாதுகாக்க முடியும். அதனை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளினூடாகவே இலங்கையின் முதலாளித்துவத்தினதும் பேரினவாதத்தினதும் ஏகாதிபத்திய உலகமயமாக்கலினதும் சவால்களுக்கு முகம் கொடுக்க முடியும். அதிலிருந்தே வேறு வேறு உற்பத்திகளுக்கு அடியெடுத்து வைக்க முடியும். அடக்கு முறைகளையும். ஒடுக்கு முறைகளையும் மீறி சொந்தக்காலில் நிற்பதற்கான பொருளாதார அடிப்படை களை தேடிக்கொள்ள வேண்டிய நிலையில் மலையகத் தமிழ்மக்கள் இருக்கின்றனர். அதற்கு முக்கியமானதாகத் தேவைப் படுவது நிலமாகும். தோட்ட நிலங்கள் மக்களுக்குப் போதியளவு வழங்கப்படல் வேண்டும். அதில் வீடும் விளைபொருள் உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அவசியம். அதன் மூலம் கிராமிய முறைமை தோன்ற முடியும். இவை தூரநோக்கில் செய்யப்படுவதற்குரிய திட்டங்கள் அவசியமாகும்.

ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப இயங்கும் இலங்கை அரசாங்கங்கள் மலையகத் தமிழ் மக்களுக்கு தனியான பொருளாதாரத்தை அனுமதிக்கப் போவதில்லை. அடக்குமுறையாளர்கள் அடக்கப்படுபவர்களுக்கான சொந்தப் பொருளாதார வளர்ச்சி அடிப்படைகள் அமைவதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

ஆகவே தற்போது மலையகத் தமிழ் மக்கள் கட்டுப்பாடு செலுத்து கின்றதாக அடையாளம் காணப்பட் டுள்ள பெருந் தோட்டப் பொருளா தாரத்தை பூரணமாக அவர்களின் நலன்களுக்கு அடிப் படையாக்கிக் கொண்டு அதிலிருந்து தன்னிறைவுப் பொருளாதாரத்திற்கான பயணத்தை தொடர்வது சிறந்த வழிமுறையாகும். அதேவேளை தூரநோக்கில் மாற்றுப் பொருளாதாரத்திற்கான திட்டங்களும் செயற்பாடுகளும் முன்வைக்கப்பட வேண்டும்.

---

**'கம்பவாரி'**

11ம் பக்க தொடர்ச்ச..

இருந்தால் அதை நான் திருத்திக் கொள்கிறேன்? என்று தொலைபேசியில் ஜெயராஜ் பாலகுமாரனிடம் கூறியதாக எழுதியிருப்பதுடன் அதன் மூலம் ஜெயராஜின் எழுத்து அடக்கம் தெரிவதாகவும் பாலகுமாரன் எழுதியுள்ளார்.

ஜெயராஜின் பழம் பண்டிதரின் பகிரங்க கடிதங்கள் தினக்குரல் பத்திரிகையில் வெளியாகிய போது அக்கடிதங்களில் அவர் வெளிப்படுத்தியிருந்த பிற்போக்கு. சாதிய. பெண்ணடிமை. இனத்துவேச கருத்துக்களுக்கு பலரும் பல விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

அவ்விமர்சனங்களை கணக்கிலே எடுக்காமல் அவரின் கருத்துக்களில் எவ்வித மாற்றங்களையும் செய்யாமல் அக்கடிதங்களை அப்படியே நூலாக்கி வெளியிட்டுள்ளார் என்பது பாலகுமாரனுக்குத் தெரியாமல் இருக்கலாம். குறிப்பாக 'யாழ்ப்பாண இஸ்லாமிய நண்பர்களுக்கு' என்ற கடிதத்தில் துவேசமாகவும். முஸ்லீம்களை ,மேலும் புண்படுத்தும் விதமாகவும் எழுதியிருந்த வரிகளில் எவ்வித மாற்றத்தையும் செய்யவில்லை. 'வேலை நிறுத்தம் செய்யும் தோட்டத்தொழிலாளர்களுக்கு' என்ற கடிதத்தில் தோட்டத் தொழிலாளர்கள் அனைவரையும் தீராத குடிகாரர்களாக எழுதியிருந்த வரிகளையும் மாற்றவில்லை. பெண்களை இழிவு படுத்தும் சொற்களும் மாற்றப்படவில்லை.

இது ஜெயராஜின் எழுத்தடக்கத்தையா காட்டுகிறது? அவரின் மேலாதிக்க மனோ பாவத்தையே காட்டுகிறது. சைவவேளாளர் ஆதிக்கம். சாதியம். பெண்ணடிமை. பிரதேசவாதம் என்பவற்றை கொண்ட ஜனநாயகப் பண்பாடற்ற பிற்போக்குத்தனமானது தான் யாழ்ப்பாண பழமைவாதம் . அதன் இன்னொரு சின்னமாகவும், வார்ப் பாகவுமே ஜெயராஜ் செயற்பட்டு வருகிறார்.

அந்நூலுக்கு அணிந்துரை எழுதியுள்ள செங்கையாழியான் ஜெயராஜின் எழுத்தில் பல கண்டுபிடிப்புக்களை செய்துள்ளார். அந்நூல் வெளியீட்டு விழாவில் பேசிய கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் மூக்கையா அமெரிக்க ஜனாதிபதி ஏனைய நாட்டு தலைவர்களை அடக்கி ஆளும் வல்லமையை கொண்டுள்ளார் என்றும் அதனை எல்லோரும் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும் என்றும் தெரிவித்தார். ஜெயராஜிற்கு சப்பை கட்டப் போய் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை வாழ்த்தினார். இப்படி ஜெயராஜின் பழமைவாத கருத்துக்களுடன் ஒத்துப் போக சிலர் இப்போதும் இருக்கிறார்கள்.

டொமினிக் ஜீவாவைப் புகழ்வதாலும், பேசும் போது சிரைத்தல். சவரம் என்று கூறுவதை எழுதும்போது சிகையலங்காரம் என்று கூறுவதாலும் ஜெயராஜின் சாதியக் கருத்துக்கள் மாறிவிட்டதாக கூற முடியாது.

எனவே பழம் பண்டிதரின் பகிரங்க கடிதங்களை வாசிப்பதன் மூலம், சேடமிழுத்த யாழ்ப்பாண பழமைவாதத்திற்கு ஒக்சிஜன் கொடுக்கும் முயற்சிகளும். பழமைவாதத்தின் வேறு வகையான வார்ப்புகளும் பல முனைகளில் நடைபெறுவதையும் அறிய முடிகிறது. அதனால் ஜெயராஜிற்கு மக்கள் இலக்கியம் சிம்ம சொப்பனமாகவே இருக்கும்.

---

# கல்விப்பணிப்பாளர் ஜோசப்பிற்கு பகிரங்கக் கடிதம்

**மத்திய மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஜோசப் அவர்களுக்கு,**

மத்திய மாகாண தமிழ்த் தினப் போட்டியில் ஏற்பட்ட சர்ச்சையே இக்கடிதத்தை எழுதத் தூண்டியது. வழமையாக வருகின்ற ரோசத்துடன் இதனை வாசிக்காது மிக நிதானமாய் தாங்கள் வாசிக்க வேண்டும் என்பதே எனது பணிவான விருப்பம்.

கடந்த 07-09-2002 அன்று மத்திய மாகாண தமிழ் தினப் போட்டி கண்டி கலைமகள் தமிழ் வித்தியாலயத்தில்நடைபெற்றது. நாடகம். வில்லுப்பாட்டு ஆகிய இரு நிகழ்ச்சிகளுக்கும் பங்கு பற்றுநர்களோடு இருநூறுக்கும் அதிகமானோர் சமூகந்தந்திருந்தனர். இவர்களுக்கு ஒப்பனை செய்யவும் உடை உடுத்தவும் ஒரு மண்டபத்தை மட்டுமே ஒதுக்கி இருந்தமையால் கொண்டு வந்த பொருட்களைக்கூட வைக்க இடமில்லாது திண்டாடியதை நீங்கள் அறிந்திருக்க மாட்டீர்கள்.

துரைமனோகரன் தலைமையிலான மூவரடங்கிய குழு நாடகப் போட்டிக்கான நடுவர் குழுவாக இருந்தது. பலராலும் எதிர்பார்க்கப்பட்ட நாடகம் பின் தள்ளப்பட்டு எதிர்பாராத ஒரு நாடகத்திற்கு முதலாம் இடம் வழங்கப்பட்டமை முழுமையான பக்கச்சார்பான நடவடிக்கை என அறிந்த ஆசிரியர்கள் சிலர் துரைமனோகரனிடம் முடிவு தொடர்பான தமது கருத்தினை தெரிவித்தனர். அவரிடம் கேள்வி கேட்கக் கூடாது; உங்களுக்கு உரிமை இல்லை என சத்தம் போட்டீர்கள். ஒரு ஆசிரியரைப் பார்த்து நீங்கள் வா, போ என ஆராதித்தமையால் பிற ஆசிரியர்கள் ஆத்திரம் கொண்டனர்.

"ஒருவரிடம் இந்த இடத்திலிருந்து என் வேலையைச் செய்துபார் உனக்கெல்லாம் கஸ்டம் விளங்கும்" என நீங்கள் கூற "ஒரு நாள் அந்த இடத்திற்கு வருவோம்" என அவர் கூற உங்கள் முகம் போன போக்கைப்பார்த்து நான் பரிதாபப்பட்டேன்.

நுவரெலியா மாவட்ட கோட்டமட்ட தமிழ் நிலைப் போட்டியொன்றிற்குமுடிவினை நடுவர் குழு அறிவித்து விட்டனர். அதில் இரண்டு நடுவர்கள் ஒரு மாணவிக்கு கூடுதலான புள்ளியை வழங்கியிருந்தனர். முடிவின்படி அவரே முதலாம் இடத்திற்கு வந்திருக்க வேண்டும். மாறாக காரியாலயத்தில் இருந்து இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டபோது முடிவு இன்னொருவருக்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. அந்நிகழ்ச்சிக்கு நடுவர்களாக இருந்த இருவரும் காரியாலய முடிவு கண்டு வேதனைப்பட்டனர். எனக்கு பழிவாங்கப்பட்ட மாணவியையும் பாடசாலையையும் தெரியும். இந்த போட்டியை ஒழுங்கு செய்து தவறான முடிவை வழங்கிய அதிகாரிகளையும். பொறுப்பானவர்களையும் தெரியும். இத்தகைய செயலை செய்பவர்களுக்கு எதிராக பேசக்கூடாது என்கிறது உங்களது திணைக்கள நடைமுறை.

நாங்கள் பார்த்துக் கொண்டிருக்கவே இவ்வாறான பல சம்பவங்கள் நடந்துள்ளன. மாறாக மாகாணப் போட்டிகளுக்கு நடுவர்களாக வழமையாகவே கண்டியை சூழவுள்ளவர்களையே நியமித்து விடுவதால் அவர்கள் கண்டியிலுள்ள ஜனரஞ்சக பாடசாலைகளுக்கு சார்பான தீர்ப்பினை வழங்கி விடுகின்ற உண்மையை கண்டியிலுள்ள நேர்மையான பாடசாலை அதிபர்களே ஒப்புக் கொள்கின்றனர். நீங்கள் அழைத்து வந்தீர்கள் என்பதற்காக துரைமனோகரனிடம் கேள்வி கேட்கக் கூடாது என எதிர்பார்ப்பது எந்த வகையில் நியாயம் எனக் கேட்டால் பண்பற்றவன் என உடனே பட்டம் தந்து விடுவீர்கள்.

நடுவர் குழுவால் 1ம் இடம் வழங்கப்பட்ட பாடசாலையைப் போல வசதிப் படைத்தவர்களின் பிள்ளைகள் படிக்கும் பாடசாலை எங்களது அல்ல. எங்களது பாடசாலை. சம்பள உயர்வு இன்றி வறுமையால் வாடும் சாதாரண தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள் படிக்கும் ஒரு சாதாரண பாடசாலை. அதிலுள்ள மாணவர்களை பயிற்றுவிப்பதும் அங்கு அழைத்து வருவதும் இலகுவான விடயமல்ல. வெகு சிரமங்களுக்கும் கஸ்டங்களுக்கும் மத்தியில் பிள்ளைகளை அழைத்து வருகின்றவர்களைப் பார்த்து நீங்கள் பேசுகின்ற மொழி வழக்கு வெறுப்பினை ஏற்படுத்துகின்றது. இதிலும் பக்கச்சார்பான தீர்ப்புக்களைக் கண்டு கோபமும் வருகின்றது. பாரதியின் 'ரௌத்திரம் பழகு' என்பதற்கு என்ன அர்த்தம்? அநியாயம் நடக்கும் போதும் பார்த்துக்கொண்டிரு என்பதா! இல்லை தார்மீகக் கோபங் கொள் என்பதா?

உங்களிடம் கேள்வி கேட்பவர்கள், உங்களது கட்டளைகளுக்கு பணியாதவர்கள், உங்களது சிந்தனைக்கு மாற்று சிந்தனை கொண்டோர் இன்னும்...... இவ்வாறு ஏதேனும் ஒரு வகையினர் உங்களது முடிவுப்படி பண்பாடற்றவர்களாகின்றனர்.

மத்திய மாகாணத்தின் சில கல்வி அதிகாரிகள் மீது கல்விக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை கையாடியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளதே. அவர்கள் பண்பாடானவர்களா?

கடந்த வருடம் நுவரேலியா திருத்துவக் கல்லூரியில் நடந்த கருத்தரங்கிற்கு சமூகமளித்த ஆசிரியர்களிடம் பணம் பெற்றுக் கொண்டமைக்காக முத்திரையில் ஒப்பம் பெறப்பட்டு பின் பணம் வழங்கப்படும் எனக் கூறி வழங்காது விட்டார்களே அவர்கள் யார்?

ஆசிரியர்கள் பயிற்சி பெறும் ஒரு கல்லூரியில் மாணவர்களுக்கென ஒதுக்கப்படும் பணம் ரகசியமாய் கையகப்படுத்திக் கொள்பவராக நம்பத்தகுந்தவர்கள் கூறுகிறார்களே நிதி மோசடி செய்யும் அவர்கள் யார்?

மத்திய மாகாணத்தில் சில பாடசாலைகளிலுமுள்ள அதிபர்கள் ஒதுக்கப்பட்ட பணத்தையும், பாடசாலை பொருட்களையும் கையாடுவதாக கதைகள் நூறு உண்டு. அவர்கள் யார்?

'வெளிச்சம் வெளியே இல்லை' எனும் நாடகம் அரங்கேற்றப்பட்டு பல ஆண்டுகளாகியும் இன்னும் பரிசு வழங்கப்படவில்லையே; அதனை தடுத்து நிறுத்தியவர்கள் யார்? லட்சக்கணக்கான ரூபாய் பணத்தில் தரமில்லாப் பொருட்களை பாடசாலைகளுக்கு பெற்றுக் கொடுத்துவிட்டு மிகுதிப் பணத்தை வீட்டுக்கு எடுத்துச் சென்றார்களே அவர்கள் யார்?

ஒருவரிடம் ஒருவரைப் பற்றி பைத்தியக்காரன் என்று கூறிவிட்டு உங்களிடம் கதை கேட்டவரை இன்னொருவரிடம் பைத்தியக்காரன் என்பீர்களே நீங்கள் யார்?

இடமாற்றம், பதவி உயர்வு வழங்குவதில் சாதி, கட்சி, பிரதேசம் பார்க்கும் உங்களுக்கு மேலுள்ளவர்களினதும் உங்களதும் அதிகாரத்திற்கு பெயரென்ன? தன்மதி அதிகாரமா?

மலையகத்தின் வரலாறு எங்களுக்கும் தெரியும். நாடகம் பற்றியும் இலக்கியம் பற்றியும் பல்கலைக் கழகங்களுக்கு வெளியிலுள்ளவர்கள் சாதித்தவை அதிகம். பேராசிரியர் மூக்கையா 'தோட்டங்களை தனியார்மயமாக்கினால் மக்களுக்கு விடிவு கிட்டும்' என வீரகேசரியில் கட்டுரை எழுதினார். உரிய சன்மானமும் பெற்றிருப்பார். இன்று சம்பள உயர்வுக்காக தொழிற்சங்கத் தலைவர்கள் தோப்புக்கரணம் போட்டுக் கொண்ருக்கிறார்கள். மூக்கையா கிழக்குப் பல்கலைக்கழக வேந்தராவார். புத்திஜீவிகளின் கைங்கரியம் பற்றி வரலாற்றில் இருந்து படித்தறிய வேண்டும். இதற்கு துரைமனோகரன் விதிவிலக்கென்று நீங்கள் கூறினால் நாங்கள் நம்பவா? இல்லை பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் முடிவு தவறானதாகா எனக் கூறும் உங்கள் முடிவுதான் முடிவென்றால் இனவாத பிரதேசவாத கலாநிதிகள், பேராசிரியர்கள்எல்லோரும் சான்றோர்களாகி விடமாட்டார்களா?

முதலில் ஆசிரியர்களின் பிரச்சினைகளை அமைதியாகக் கேட்பது. பின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பது என்றில்லாமல் பரமசிவன் கழுத்திலிருக்கும் பாம்பு போல அதிகாரம் இருக்கின்றதென்பதற்காக எல்லோரையும் திட்டித் தீர்ப்பது எவ்வகையில் சரியானதாகும்.

தொடர்ச்சி 11ம் பக்கம்...

படிப்பகம்

www.padippakam.com



புதியபூமி
புதிய பூமி REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA PUTHIYA POOMI
சுற்று 09 ஒக்ரோபர் 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 51
எஸ்.47. 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி. கொழும்பு 11. இலங்கை. தொ.பே.: 435117, 335844 பாக்ஸ்: 01-473757

# சமாதான சூழல் குலையக் கூடாது

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டையாகவே இருந்து வருகிறார். அவரின் பொதுசன ஐக்கிய முன்னணியும் சமாதான பேச்சுவார்த்தைக்கு எதிராகவே இருந்து வருகிறது.

அவர் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தாலோ, கலைத்தாலோ தற்போது தொடங்கப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுவார்த்தையை தொடர முடியாமல் போகலாம். அதனால் அவரின் பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்பது நியாயமாகத் தோன்றலாம்.

நடைபெறும் சமாதான பேச்சுவார்த்தையின் விளைவாக வடக்கு-கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த இணக்கம் காணப்பட்டால் 1978 அரசியலமைப்பின் 13வது திருத்தச் சட்ட ஏற்பாடுகளுக்கமைய அவ்விடைக்கால நிர்வாகத்தை ஜனாதிபதியே பிரகடனம் செய்ய வேண்டும். அந் நிர்வாகத்திற்கு தேவையான நிதியை ஜனாதிபதியே ஒதுக்க வேண்டும். அத்துடன் அமைச்சரவையின் தலைவர் என்ற ரீதியில் வடக்கு-கிழக்கு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு அவரின் ஒப்புதல் அவசியமாகும். இவ்வதிகாரங்கள் அனைத்தையும் 1978ம் ஆண்டு அரசியலமைப்பு ஏற்பாடுகள் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளது.

தேர்தல் நடைபெற்று ஒரு வருடமாகிவிட்டால் எந்நேரமும் பாராளுமன்றத்தை எவ்வித காரணமுமின்றி கலைக்கும் அதிகாரமும். அமைச்சரவையை தனக்கு வேண்டியவாறு நடத்தும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு இருக்கிறது. அவரின் அதிகாரங்களை பறிக்கும் நோக்கத்திலேயே 19வது திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக ஐ.தே.மு. அரசாங்கம் கூறுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் வாக்களித்தால்தான் அத் திருத்தத்தை சட்டமாக்க முடியும். அதாவது 150 பாராளுமன்ற உறுப்பினர்கள் அச் சட்டத் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டும். அதற்காக பொதுசன ஐக்கிய முன்னணியிலிருந்து 20 உறுப்பினர்களை அத் திருத்தத்திற்கு ஆதரவாக வாக்களிக்கச் செய்ய ஐ.தே. மு. தீவிரமான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

அத்துடன் இச் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களிக்க நினைப்பவர்கள் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி மனச்சாட்சிப்படி வாக்களிக்கலாம் என்ற ஏற்பாடும் அதில் இருக்கிறது. அதாவது அச் சட்டமூலத்திற்கு வாக்களிக்க கூடாதென பொதுசன ஐக்கிய முன்னணி முடிவெடுத்திருந்த போதும் அம்முடிவுக்கு மாறாக அதன் எம்.பி.க்கள் வாக்களிக்கலாம். அவ்வாறு திருத்த சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களிக்கும் பொதுசன ஐக்கிய முன்னணி உறுப்பினர்களுக்கு எதிராக அக்கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எதனையும் எடுக்க முடியாது என்பதே அதன் பொருளாகும்.

நிறைவேற்று அதிகாரங்கள் எல்லாமே மக்கள் நலனுக்கு எதிரானவையே. அதில் ஒரு அதிகாரம் நல்லது என்றும் இன்னொரு அதிகாரம் கூடாது என்றும் பகுப்பாய்வதற்கில்லை. சமாதான நடவடிக்கைகளை தடையேதுமில்லாது முன்னெடுத்துச் செல்வதற்கு தடையாக அவ்அதிகாரங்களைப் பயன்படுத்த முடியும். அதனால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள சகல நிறைவேற்று அதிகாரங்களும் பறிக்கப்பட வேண்டும்.

ஐ.தே. மு. அரசாங்கம் தனது 6 வருட பாராளுமன்ற ஆட்சிக் காலத்தை உறுதி செய்து கொள்வதே அதன் அடிப்படை நோக்கமாகும். ஐ.தே. மு. அரசாங்கம் அதனை பிரதான நோக்கமாக் கொண்டே 19வது திருத்தச் சட்டமூலத்தை சமர்ப்பித்துள்ளது. அத்துடன் அமைச்சரவையை ஜனாதிபதி கட்டுப்படுத்தாமல் இருந்தால் போதும் என்பதும் ஐ.தே. மு. அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

நாட்டில் நிரந்தர அமைதியை ஏற்படுத்த வேண்டுமாயின் சமாதான நடவடிக்கைகள் தொடர்ந்து எவ்வித தடையுமின்றி முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்காக பொதுசன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் ஐ.தே. மு.வின் பாராளுமன்றமும் ஒத்துச் செயற்பட வேண்டியது அவசியம். 19வது திருத்தச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததன் மூலம் ஜனாதிபதியா ஐ.தே. மு.வின் பாராளுமன்றமா என்ற பலப்பரீட்சை தொடக்கப்பட்டுள்ளது.

அதனால் ஜனாதிபதியின் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும் கலைக்கும் அதிகாரங்களைப் பயன்படுத்தி 19வது திருத்தச் சட்டத்தை ஜனாதிபதி செயலிழக்க வைக்கலாம். அதாவது ஒக்டோபர் நடுப்பகுதியில் அத் திருத்தச் சட்டம் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளும் போது பாராளுமன்றத்தை இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்கலாம். டிசெம்பர் மாதத்துடன் இப் பாராளுமன்றம் தெரிவு செய்யப்பட்டு ஒரு வருடமாகி விடுமாதலால் டிசெம்பர் மாதத்தில் பாராளுமன்றத்தைக் கலைத்து விடலாம். அதன் பின்னர் இன்னொரு தேர்தல் நடத்தப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

திருத்தச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க விரும்பும் எம்.பி.க்களுக்கு மட்டுமே மனச்சாட்சிப்படி வாக்களிக்க முடியும். 19வது திருத்தச் சட்டத்திற்கு மட்டுமே எம்.பி.க்களுக்கு மனச்சாட்சிப்படி வாக்களிக்கும் உரிமை இருக்கும். அதில் கட்சியின் முடிவுக்கு மாறாக பொதுசன ஐக்கிய முன்னணி எம்.பி.க்களை வாக்களிக்கத் தூண்டுவதே அதன் நோக்கமாகும்.

இத் திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் பாராளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்க முடியாது என்ற நோக்கம் நிறைவேற்றப்படலாம். அதைத்தவிர ஜனாதிபதியின் ஏனைய நிறைவேற்று அதிகாரங்கள் அப்படியே இருக்கும். அவற்றை சமாதான முயற்சிகளை தடுக்கவும் பிரயோகிக்கலாம். அவற்றைப் பற்றியெல்லாம் கவனத்தில் எடுக்காமல் ஐ.தே.மு.யின் பாராளுமன்ற ஆட்சிக் காலத்தை உறுதி செய்து கொள்ளவே இந்த 19வது திருத்தம் கொண்டு வரப்படுகிறது. அதுவும் பொதுசன ஐக்கிய முன்னணியின் 20 எம்.பி.க்கள் திருத்தத்திற்கு ஆதரவளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவை ஓரங்கட்டுவதற்காகவும், ஐ.தே.மு.யின் இயலாமைகள் அனைத்தையும் ஜனாதிபதியின் மீது சாட்டுவதுமாகவும் இருக்கலாம். ஜனாதிபதிக்கு ஆத்திரமூட்டி அவரது நிறைவேற்று அதிகாரங்களை குறிப்பாக பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதையும் கலைப்பதை செய்யத்தூண்டி அதன் விளைவுகளுக்கு பின்னால் ஐ.தே.மு.யின் இயலாமைகளை மறைத்துக் கொள்வது பிரதான நோக்கமாக இருக்கலாம்.

ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் அனைத்தும் ஒழிக்கப்பட வேண்டும் என்பதில் இரண்டு நிலைப்பாடு இருக்க முடியாது. ஆனால் தற்போதைய நிலைமையில் ஜனாதிபதியின் அதிகாரங்களை பறிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையால் அரசியல் யாப்பு நெருக்கடி வலுவடைந்து சமாதான சூழ்நிலையும் பேச்சுவார்த்தையும் குழப்பமடைந்து கொள்ளக் கூடாது என்பதே முக்கியமானதாகும்.

- ஆசிரியர் குழு-

# யுத்தத்தின் ஊடாக திறந்த பொருளாதாரம்

## சமாதானத்தின் வாயிலாக தனியார்மயம்

கடந்த பத்தொன்பது வருடகால யுத்தத்தின் மூலம் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து நாசமடைந்து கொண்டது என்னும் கணிப்பு சரியான தொன்றாகும். ஆனால் இவ்விடயம் நாணயத்தின் ஒரு பக்கம் மட்டுமேயாகும். அதன் மறுபக்கம் நாட்டின் பொருளாதாரத்தை திறந்த பொருளாதாரமாக மாற்றியமைத்துக் கொண்டதன் விளைவுமாகும். எனவே யுத்தமும் திறந்த பொருளாதாரமும் ஒன்றையொன்று வளர்ப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன என்பதே முழுமையான சாராம்சமாகும்.

இதன் சூத்திரதாரியாக இருந்து திட்டமிட்டு செயல்படுத்தியவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா என்பதைப் பலர் இலகுவாகவே மறந்து விடுகின்றனர். 1977ல் பதவிக்கு வந்த ஜே.ஆர். தனக்கு அன்று கிடைத்திருந்த ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பாராளுமன்றப் பலத்தைக் கொண்டு செய்ய வேண்டிய அனைத்து அழிவுகரமான வேலைகளுக்கு சட்டங்களையும் நடைமுறைகளையும் உருவாக்கிக் கொண்டார். அதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் அதனோடு இணைந்து நின்ற மலையக. முஸ்லீம் தலைவர்களும் ஒப்புதல் வழங்கிக் கொண்டனர். தமிழ்த் தலைமைகளுக்கு எதிராக ஜே.ஆர். அடுத்தடுத்து செயல்பட்டிருந்த போதிலும் வர்க்க நிலை காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் காலடிகளையே சுற்றிச் சுற்றி வந்தனர். அதன் தொடர்ச்சிதான் இன்றும் தொடர்கிறது.

தமிழர்களுக்கு எதிராக மீண்டும் மீண்டும் இனவன்முறைகளை நடாத்தி யுத்தத்திற்கான பொறிகளைப் பெரு நெருப்பாக எரிய வைத்தவர்கள் ஜே.ஆர்.ரும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் என்பதை வரலாறு ஏற்கனவே தெளிவாகப் பதிந்து வைத்திருக்கிறது. 1977-83 காலப் பகுதியில் நான்கு இனவன்முறைகளை ஆயுதப்படைகள் - இனவாதக் குண்டர்கள் மூலம் நடாத்திக் கொண்டனர். அதன் பின் 83ல் இருந்து ராணுவ ஒடுக்குமுறையை ஏவி யுத்தமாக வளர்த்து நின்றனர்.

1978ல் புதிய அரசியல் யாப்பினை நடைமுறைக்கு கொண்டு வந்து தன்னைத் தானே ஜே.ஆர். ஜனாதிபதியாக்கிக் கொண்டார். இன்று மிகப் பெரும் சர்ச்சைக்கும் நெருக்கடிக்கும் உள்ளாகி நிற்கும் நிறைவேற்று அதிகாரங் கொண்ட ஜனாதிபதி முறையை பாராளுமன்ற அதிகாரத்திற்கும் மேலாக நிறுவிக் கொள்ள முடிந்தது. அத்தகைய அதிகாரங்களைப் பயன்படுத்தி தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் முன்னெடுக்கப்பட்டது. அதேவேளை அதற்குச் சமாந்திரமாக திறந்த பொருளாதாரக் கொள்கையை நடைமுறைப்படுத்த சகல வாய்ப்பு வசதிகள் வழங்கும் முகமாக நாட்டின் கதவுகள் திறந்து விடப்பட்டன. அன்றுவரை இருந்து வந்த கட்டுப்பாடுகள், தடைகள் யாவும் தூக்கி வீசப்பட்டு அந்நியப் பொருட்களின் தங்கு தடையற்ற சந்தையாக நாடு மாற்றப் பட்டது. தேசிய பொருளாதாரத்தின் அடிப்படையாக இருந்துவந்த உள்ளூர் விவசாய கைத்தொழில் உற்பத்திகள் யாவும் செத்து மடிய விடப்பட்டன. உற்பத்திக்குப் பதிலாக அந்நியப் பொருட்களின் நுகர்வுக்கே வழி காட்டப்பட்டது.

உலக வங்கி. சர்வதேச நாணய நிதியம் ஆகியன திட்டமிட்டு வழங்கிய ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் அப்படியே பின்பற்றப்பட்டன. அந்நிய பல்தேசியக் கம்பெனிகளும் அவற்றின் உற்பத்திகளும் நமது வளங்கள் அனைத்தையும் திறந்த தாராள பொருளாதாரக் கொள்கை என்பதன் மூலம் உறிஞ்சிக் கொள்வதற்கு களம் அமைத்துக் கொடுக்கப்பட்டது.

குறிப்பாக நமது பெறுமதிமிக்க மனித வளம் பல்தேசியக் கம்பெனிகளுக்கு உள்நாட்டிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் மிக மலிந்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டது. நமது உடல் உழைப்பாளர்களும் மூளை உழைப்பாளர்களும் வெளிநாடுகளுக்கு வேலை தேடிச் செல்லத் தொடங்கினர்.

அதேவேளை யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டு அதன் மறைவில் மக்களது கவனம் திசை திருப்பி வைக்கப்பட்டது. வேலை நிறுத்தங்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளும் ஒடுக்கப்பட்டன. வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள், அரசாங்க ஊழியர்கள் 1980ம் ஆண்டில் பல்லாயிரக் கணக்கில் பழிவாங்கப்பட்டு

- வெகுஜனன் -

நடுவீதியில் விடப்பட்டனர். இவை யாவும் திறந்த பொருளாதாரக் கொள்கையையும் தனியார் மயத்தையும் நடைமுறைப்படுத்திக் கொள்வதற்கேயாகும். 1977ன் தேர்தல் வாக்குறுதியாக ஜே.ஆர். 'எட்டு இறாத்தல் உணவு தருவேன்' எனக் கூறியிருந்தார். பதவிக்கு வந்து திறந்த பொருளாதாரத்தின் கீழ் அந்நியப் பொருட்கள் வந்து குவிந்ததும் அதே ஜே.ஆர். கூறினார் 'எட்டு இறாத்தல் மட்டுமல்ல எண்பது இறாத்தல்கள் வாங்கக் கூடிய அளவுக்கு தாராளமாகச் சந்தையில் பொருட்கள் உண்டு எவரும் வாங்கிக் கொள்ளலாம்' என்றார். ஆனால் மக்களிடம் அரை இறாத்தல் தானும் வாங்கக் கூடிய அளவுக்கு சக்தி இருக்கவில்லை. இது திறந்த பொருளாதாரத்திற்கு ஆரம்ப உதாரணமாகும்.

ஏகாதிபத்திய உலக மயமாதலின் கீழ் மூன்றாம் உலக நாடுகளின் தேசிய உற்பத்தி, தேசிய பொருளாதாரம். தேசியக் கல்வி, தேசிய கலாச்சாரம்

**வடக்கு கிழக்கில் இதுவரை கால் பதிக்காது இருந்து வந்த தனியார் கம்பனிகளும் பல்தேசிய நிறுவனங்களும் நில நீர் கடல் வளங்களைக் கொள்ளையிடத் தயாராகிவருகின்றன.**

போன்ற சகலவற்றையும் உடைத்து நாசமாக்கி அந் நாடுகளின் வளங்களைக் கொள்ளையிட்டுச் செல்வதே ஏகாதிபத்தியத்தின் மூல நோக்காகும். அதற்கான ஏகாதிபத்திய சார்பு அரசியல் தலைமைத்துவத்தை தக்க வைத்துக் கொள்வது அவர்களுக்கு அவசியமாகின்றது. இவற்றை சாத்தியமாக்குவதற்குத் தடையாக மக்கள் இருந்து விடக் கூடாது என்பதை முன் உணர்ந்தே உள்நாட்டு யுத்தங்களில் அவர்களின் கவனங்களைத் திருப்பி விடுகிறார்கள். இதனை ஏகாதிபத்திய சக்திகளும் அவர்களது உள்ளூர் ஆளும் வர்க்க அடிவருடிகளும் இணைந்து நின்று செயலாக்கி வந்துள்ள வரலாறு தான் கடந்த கால் நூற்றாண்டு கால இலங்கை வரலாறாகக் காணப்படுகின்றது.

இன்று மேற்கூறிய நிலைகளில் அவர்களுக்கு மேலும் மாற்றங்கள் தேவைப்படுகின்றன. யுத்தமும் பொருளாதாரக் கொள்கையும்-தனியார் மயமும் இதுவரை சமாந்தரமாக முன்னெடுக்கப்பட்டு வந்தன. இப்போது யுத்தத்தின் தேவை முடிவடைந்து விட்டது. அவர்களது பொருளாதார நிலை நிறுத்தம் உறுதியாக்கப்பட்டு விட்டது. மக்கள் யுத்தத்தால் களைப்படைந்து காணப்படுகின்றனர். அவர்களிடம் உடனடியாக ஏகாதிபத்தியத் திட்டங்களை எதிர்த்துப் போராடக் கூடிய வலிமை இல்லை. எங்கும் பொருளாதார நெருக்கடி. விலை உயர்வுகள், வாழ்க்கைச் சுமை, சம்பள உயர்வு இல்லாமை போன்றவற்றால் விரக்தியும் வெறுப்பும் அடைந்து நிற்கின்றனர். இவற்றுக்கு திறந்த பொருளாதாரக் கொள்கையும் தனியார் மயமும் தான் காரணம் என்பது மறைக்கப்பட்டு தனியே யுத்தத்தை மட்டும் காரண காரியமாகப் பேசுகிறார்கள். ஒரு பகுதியை மறைத்து மறு பகுதியையே காட்டி நிற்கின்றனர்.

எனவே யுத்தம் நிறுத்தப்பட்டு சமாதானம் வந்தால் சகல பொருளாதார நலிவுகளும் நாசங்களும் நிவர்த்தி செய்யப்பட்டு விடும் என்ற பரப்புரை சகல ஊடகங்களிலும் உரத்துக் கூறப்படுகின்றது. ஆனால் சமாதானத்தின் மூலம் என்ன நடைபெற உள்ளன என்பதே கவனத்திற்குரியதாகும். தற்போதைய சமாதான சூழலில் ஒரு விடயம் பலத்த விளம்பரத்தைப் பெற்று நிற்கிறது. அது தனியார் மயமாக்கலைத் துரிதப்படுத்தி எஞ்சி நிற்கும் அரசாங்க பொதுத் துறைகளை தனியார் வசம் ஒப்படைத்துக் கொள்வதேயாகும்.

வடக்கு கிழக்கில் சமாதான சூழலில் ஊடாக தனியார் கம்பெனிகளும் பல்தேசிய நிறுவனங்களும் தமது முதலீடுகளைக் கொண்டு செல்லத் தயாராகி வருகின்றன. அங்குள்ள நில நீர் கடல் வளங்களைக் கொள்ளையிட அவை திட்டமிட்டு நிற்கின்றன. அவ்வாறே அங்குள்ள மனித உழைப்பை மிகக் குறைந்த ஊதியத்தில் திருடிக் கொள்ளவும் தயாராகி வருகின்றன.

அதேவேளை இலங்கையில் இதுவரை அரசாங்க பொதுத் துறைகளாக இருந்து வந்த பிரதான வங்கிகள், தபால், பெற்றோலியம், புகையிரதப் போக்குவரத்து, மின்சாரம், சுகாதாரம், கல்வி போன்றன விரைவான தனியார் மயத்தைப் பெற உள்ளன. இவற்றை மிகவும் நாகரீகமான வார்த்தைகளில் பொருளாதார மறு சீரமைப்பு, முகாமைத்துவ சீர்திருத்தம், ஊழலற்ற நிர்வாகம், விரயமற்ற நடைமுறை, மக்களுக்கு அர்ப்பணிப்புடனான சேவைஎன்றெல்லாம் விளம்பரங்களில் ஓதப்படுகின்றன.

இவற்றையெல்லாம் மேலேழுந்த வண்ணம் நோக்காது கடந்த கால் நூற்றாண்டு காலத்தின் தொடர் நிகழ்வுகளோடும் திட்டங்களோடும் நடைமுறையாக்கங்களோடும் பொருத்திப் பார்க்கின்ற போதே முழுமையான விடயம் வெளிப்படையாகின்றது. இதுவரை யுத்தத்தின் மூலம் திறந்த தாராள பொருளாதாரம், தனியார் மயம் என்பவற்றை செயலாக்கிக் கொண்டார்கள். இப்போது சமாதானத்தினூடாக எஞ்சியுள்ள பொதுத்துறைகளைத் தனியார் மயப்படுத்தப் போகிறார்கள். அத்துடன் இதுவரை தனியார் மயம் கால் பதிக்காத வடக்கு-கிழக்கில் புனரமைப்பு. புனர்வாழ்வு. பொரளாதார அபிவிருத்தி என்பவற்றினூடாக பெரும் சுரண்டல் களம் திறக்கப்படப் போகின்றது. வடக்கு-கிழக்கு அழிந்துள்ள சூழலைப் பயன்படுத்தி எதிர்ப்புகள் எழ முடியாத இக்கட்டான நிலைக் கூடாக தனியார் மயம் கொண்டு செல்லப்படுகிறது. ஆனால் உடனடியாக இல்லாதுவிடினும் வடக்கு-கிழக்கு மக்கள் தனியார் மயத்தின் எதிர் விளைவுகளை விரைவாக உணர்ந்து கொள்ளவே செய்வர். அப்போது எதிர்ப்பு பரந்து வலிமை பெறவே செய்யும். ●

படிப்பகம்

www.padippakam.com



# போரும் அமைதியும் தீர்வு பற்றிய நம்பிக்கைகளும்

தாய்லாந்துப் பேச்சுவார்த்தைகளின் முதற்கட்ட முடிவுகள் வரவேற்கத்தக்க முறையில் அமைந்துள்ளதாகவே ஜே.வி.பி. தவிர்ந்த அனைத்து முக்கிய அரசியற் கட்சிகளும் கூறுகின்றன. விடுதலைப் புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம், விடுதலைப் புலிகள் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் தீர்வை ஏற்கத் தயாரென்றும் தமது பிரிவினைக் கோரிக்கையைக் கைவிடத் தயாரென்றும் கூறியுள்ளது யாரும் எதிர்பார்த்திருக்கக் கூடியதே எனினும் அது இவ்வளவு விரைவில் நிகழும் என்று எதிர்பார்த்திருக்கவில்லை.

மறுபுறம் அரசாங்கத் தரப்பில் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் களைந்த பின்னரே பேச முடியும் என்ற நிலைப்பாட்டைப் புறமொதுக்கியுள்ளதாகப் பகிரங்கமாகக் கூறியுள்ளதும் வரவேற்கத்தக்க ஒரு விடயமாகும்.

இவற்றிடையே கூத்துக்கு நடுவே கோமாளி போல அமெரிக்க அரசாங்கம் பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு எதிர்காலத்தில் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கலாம் என்றும் அமெரிக்க அரசாங்கத் தரப்பில் அதிகார பூர்வமற்ற அறிவித்தலும் விடுக்கப்பட்டுள்ளது. இது 'அமெரிக்காவின் உற்சாகப்படுத்தலின்' முக்கியத்துவத்தை வலியுறுத்தும் நோக்கிலான ஒரு புலுடாவேயொழிய வேறு எதுவுமில்லை. ஏனெனில் சமாதான பேச்சுக்கான முடிவை விடுதலைப் புலிகள் 'அமெரிக்காவின் ஆசி' கிடைக்கும் முன்னரே (இரண்டு ஆண்டுகட்கு முன்னரே) எடுத்துள்ளனர்.

உண்மையில் மிகவும் குறிப்பிடத்தக்க வெளியார் பங்களிப்பு ஏதெனில் இலங்கையின் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரண வேலைகளைத் தொடங்கப் பேச்சுவார்த்தைகளில் மேலும் முன்னேற்றம் வரும் வரை காத்திருக்க வேண்டியதில்லை என்ற நோர்வீஜியப் பேச்சாளரது பரிந்துரையே தான்.

மேற்குறிப்பிட்டவற்றின் அரசியல் முக்கியத்துவம் என்ன என்பது பற்றி இனிக் கவனிப்போம்.

விடுதலைப் புலிகள் தனி நாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டது தங்களுடைய நிலைப்பாட்டையே விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொண்டு விட்டதையே குறிக்கிறது என்று சொல்வதற்கான அத்திவாரத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்கனவே இட்டாயிற்று. இது போலவே முன்பு பிரிவினை பேசிப் பத்துப் பதினைந்து வருடங்களாக ஒரு அரசாங்கத்துக்கோ அல்லது இன்னொரு அரசாங்கத்துக்கோ ஆதரவு கொடுப்பதன் மூலம் தம் வசதியான இருப்பை உறுதிப்படுத்திக் கொண்ட முன்னாள் போராட்ட இயக்கத் தலைமைகளும் தாங்கள் தேர்ந்தெடுத்த பாதையையே விடுதலைப் புலிகளும் தேர்ந்தெடுத்துள்ளதாகப் பெருமைப் பட்டுக் கொள்ள முயலலாம். எனினும் அடிப்படையான சில வேறுபாடுகளை நாம் கவனித்தாக வேண்டும்.



தமிழர் விடுதலைக் கூட்டணி அந்தரங்க சுத்தியுடன் தமிழீழக் கோரிக்கையை முன்வைக்கவில்லை என்பது ஒரு விடயம். அது யூ.என்.பி.யுடன் ஒரு இரகசிய உடன்பாட்டைச் செய்து கொண்டே 1977 தேர்தலில் தனித் தமிழீழம் என்ற கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்டது. அதன் பின் அதனால் தமிழ் மக்களின் மீது அரச அடக்குமுறை. இனப்படுகொலை வரை வளர்வதையிட்டு எதுவுமே செய்ய முடியவில்லை.

முக்கிய இயக்கங்களில் விடுதலைப் புலிகள் போக யாவுமே தனித் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைக் கைவிட்டது மட்டுமன்றி. இன ஒடுக்கு முறைப் போரில் சிங்களப் பேரினவாத அரசுகளுடன் நெருக்கமாக ஒத்துழைத்தவை. அதற்கும் மேலாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இந்த இயக்கங்களும் புலிகள் இயக்கத்தைக் கடுமையாக எதிர்த்ததுடன் இந்திய அரசாங்கத்துடன் வெவ்வேறு அளவுகளில் ஒத்துழைத்து வந்தவையாகும். அத்தோடு, இன்றுவரை அமெரிக்காவையோ இந்தியாவையோ தமிழர் நலன்கட்கு விரோதமான எந்தக் காரியத்திற்கும் கண்டிக்க மறுத்து வருபவை.

விடுதலைப் புலிகள் பிரிவினைக் கோரிக்கையைக் கைவிட்டமை. போராட்ட மூலம் ஒரு நியாயமான தீர்வுக்கான வாய்ப்பு கைக்கெட்டக் கூடிய நிலையிலேயே என்பதைக் கருத்திற் கொண்டால், தமிழர் விடுதலைக் கூட்டணியும் முன்னாள் விடுதலை இயக்கங்களும் தம் இயலாமை காரணமாகவும் தமது கொள்கையையும் மக்கள் நலனையும் கைகழுவி விட்டதன் காரணமாகவும் தமிழீழ கோரிக்கையைக் கைவிட்டதுடன் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை ஒப்பிட முடியாது என்பது தெளிவாகும்.

உண்மையிலேயே. பிரிவினையை நிராகரித்துத் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் இலக்கு பிரிந்து போகும் உரிமையை உள்ளடக்குவதான சுயநிர்ணயமும் தமிழர் வாழும்

**(நமது அரசியல் நிருபர்)**

பாரம்பரியப் பிரதேசத்தில் சுயாட்சியும் என்ற விடயத்தில் கடந்த இருபது ஆண்டுகளாகத் தெளிவாகவும் உறுதியாகவும் கூறி வந்துள்ள ஒரே சக்தி தமிழர் நடுவே உள்ள ஒரே மாக்ஸிய லெனினியக் கட்சியான, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என முன்பு அறியப்பட்ட புதிய ஜனநாயகக் கட்சியாகும். எனினும் அவர்கள் விடுதலைப் புலிகள். தங்கள் கட்சியின் சுயநிர்ணம், சுயாட்சி, போர்நிறுத்தம். பேச்சுவார்த்தை. அமைதியான முறையிலான நியாயமான தீர்வு என்ற நிலைப்பாடுகளை ஏற்றுள்ளதாகக் கூற முற்படவில்லை. விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்தை அவர்கள் நியாயமானதென ஏற்றார்கள். அதை விமர்சிக்க வேண்டிய இடங்களில் விமர்சித்த போதும். அடிப்படையில் அது சரியானது என்பதை அவர்கள் மறுக்கவில்லை. புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கம் எனக் கூறவுமில்லை. அது போக. தேசிய இன ஒடுக்கலின் கீழ் நாட்டின் கடந்த கால அரசியல் நிலவரங்களையும் 1976ல் தமிழர்கள் மிகப்பெரிய அரசியற் கட்சி பிரிவினைக் கொள்கையை ஏற்று அடுத்த ஆண்டு அந்த அடிப்படையில் தேர்தலில் நின்று வென்றதையும். விடுதலைப் புலிகள் ஒரு தமிழ்த் தேசிய அரசியல் நிறுவனம் என்பதையும் கருத்திற் கொள்ளும் போது அவர்களது கோரிக்கை பிரிவினைக் கோரிக்கையாகவே எழுந்திருக்க முடியும் என்ற வரலாற்று யதார்த்தத்தையும் ஏற்கிறார்கள்.

இதனாலேயே, விடுதலைப் புலிகள் தனி நாட்டுக் கோரிக்கையை ஒதுக்கி வைத்துச் சுயநிர்ணயத்தைக் கோருவதை அவர்கள் தவறாகவே பிற தமிழ்த் தேசியவாதிகளது பின் வாங்கலுடனோ ஒப்பிட மறுக்கின்றனர். தமிழ் மக்களுக்கு ஒரு நியாயமான தீர்வுக்குச் சாதகமான நிலைமையை உருவாக்கியது விடுதலைப் புலிகளின் தலைமையிலான தளராத ஆயுதப் போராட்டமே என்ற வரலாற்று உண்மையை எவருமே மறுக்க முடியாது. அது மட்டுமன்றி, எந்த அயற் குறுக்கீடு காரணமாகவும், எந்த விஷமத்தின் விளைவாகவும் அமைதியான தீர்வுக்கான முயற்சிகள் முறியடிக்கப்பட்டு இலங்கை அரசாங்கம் பழைய இன ஒடுக்குமுறைக் கொள்கையைக் கடைப்பிடிக்கத் தொடங்கினால், தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துப் போராடுகிற சூழல் ஏற்பட முடியும். அதற்கும் விடுதலைப் புலிகள் ஆயத்தமாகவே இருக்க வேண்டும்.

மேற்கூறிய நிலைமைகளின் கீழேயே. விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டமை. அமைதிக்கான ஒரு நல்லெண்ணச் செயல் என்று கூற முடிகிறது. எனவே ஆயுதங்களைக் கீழே போடுவது என்பது பேச்சுவார்த்தைகட்கு அவசியமான முன் நிபந்தனையாகுமா என்ற கேள்வியை எழுப்பு முன். விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போடுவதற்கு ஏதுவான சூழ்நிலை உருவாகிவிட்டதா என்று கவனித்தாக வேண்டும். இன்னமும், 1983 முதல் வடக்கு-கிழக்கில் நிறுவப்பட்ட ராணுவத் தளங்கள் அப்படியே உள்ளன. நாட்டின் ஆயுதப்படைகளின் பெரும் பகுதி இன்னமும் வடக்கு-கிழக்கிலே நிலை கொண்டுள்ளது. அப் பிரதேச மக்களின் வழமையான வாழ்க்கை நிலை திரும்ப இயலாதபடி கடலிலும் தரையிலும் அரசின் ஆயுதப்படைகளின் நடமாட்டம் தடையாக உள்ளது. எந்த விதமாக வட அயர்லாந்திலிருந்து பிரித்தானியப் படைகள் வெளியேறாமல் ஐ.ஆர்.ஏ. தன் ஆயுதங்களைக் களைவது அசாத்தியமோ. அவ்வாறே, இலங்கை அரசின் ஆயுதப்படைகள் வடக்கு-கிழக்கினின்று வெளியேறாமல் அல்லது போருக்கு முந்திய மட்டத்துக்குக் குறைக்கப்படாமல் விடுதலைப் புலிகளிடம் ஆயுதங்களைக் கீழே போடுமாறு யாரும் வற்புறுத்த முடியாது.

எனவே தான். அரசாங்கத் தரப்பு இவ்விடயத்தில் எடுத்துள்ள முடிவு சரியானதும் நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதுமாகிறது. இதையும் விடுதலைப் புலிகள் பிரிவினைக் கோரிக்கையை ஒதுக்கி வைத்ததையும் சேர்த்து நோக்கினால். இது தமிழ் மக்களின் சார்பில் நடந்த நியாயமான. தளராத. உறுதியான ஆயுதமேந்திய போராட்டத்தின் ஒரு வெற்றியே எனலாம்.

அமெரிக்கா தனது பங்கை வலியுறுத்துகிற நோக்கிற் செய்கிற பலவேறு காரியங்களையும் இந்திய அரசாங்கம் முன்பு நேரடியாகவும் இன்று மறைமுகமாகவும் சமாதானத் தீர்வுக்கு ஆப்பு வைக்க எடுக்கிற முயற்சிகளையும் பற்றி யாரும் அசட்டையாக இருக்க முடியாது. இலங்கையின் பிரதமர் இரு நாடுகளையும் மகிழ்விக்க எடுக்கிற முயற்சிகள். இந்த நாட்டில் அமைதி ஏற்படுத்துவதைத் தடுக்காம விருக்க தங்களுக்கு இலங்கையின் இறைமையில் ஒரு பகுதியைத் தாரை வார்த்தாக வேண்டுமென்ற நிலைப் பாட்டுக்கு வழி செய்யப்பட்டது.

சனாதிபதியும் பொது சன முன்னணியும் தலைமையில் உள்ள பலரும் அவர்களை விட மோசமாக ஜே.வி.பி.யும் அமைதிக்

11ம் பக்கம் பார்க்க..

# புரட்சிகர இயக்கமும் புத்திஜீவிகளும்

பொதுவாக, எந்த நாட்டினதும் புத்திஜீவிகள் எனப்படுகிறவர்கள், நடுத்தர அல்லது உயர் நடுத்தர வகுப்பினராகவே இருக்கக் காணலாம். தொழிலாள, விவசாயப் பின்னணியிலிருந்து உருவான புத்திஜீவிகள் கூடத் தமது அறிவு சார்ந்த தொழில் காரணமாக உயர் நிலைக்கு வந்து தமது பழைய வர்க்க அடையாளத்தை மறைக்க முயல்வதை நாம் காணலாம்.

சமூக ஏற்றத்தாழ்வுகள் மிக்க சமுதாயங்கள் அனைத்திலும் உழைக்காத சுரண்டும் வர்க்கம் உச்சத்திலும் உடல் உழைத்து நலியும் ஒரு சுரண்டப்படும் வர்க்கம் அடி நிலையிலும் இருக்கும் போது. சமூக மேம்பாடு என்பது உடல் உழையாமையே என்ற கருத்து முழுச் சமூகத்தையும் பீடித்து விடுகிறது. இதன் விளைவாகப். புத்திஜீவிகள் எனப்படுவோர் நடுவே உடலால் உழைப்பைக் கேவலமாக நோக்குகிற ஒரு தன்மையை நாம் காணலாம். உடலால் உழைப்பை விட்டு ஒதுக்குவதால் சமூக மேம்பாடு பெறலாம் என்ற சிந்தனை. ஏகாதிபத்தியம் ஊக்குவிக்கிற நடுத்தர வர்க்கச் சிந்தனைப் போக்கிற்கு மிக உடன்பாடானது.

மறுபுறம் மூன்றாமுலக நாடுகளின் சமூக விடுதலைக்குப் புத்திஜீவிகள் ஆற்றக்கூடிய பணிகள் பல உள்ளன. கொலனிய யுகத்திினின்றே புத்திஜீவிகள் பலர் இவ்வாறான பணிகளை ஆற்றியும் உள்ளனர். இதை இயலுமாக்கியது எது? தொழிலாளி வர்க்கத்தைச் சேராத மாக்ஸ். ஏங்கல்ஸ் இருவருமே தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக் கான சிந்தனை மார்க்கத்தைக் கண்டறிந்து ஒரு புதிய உலக நோக்கை காட்டி நின்றனர். தொழிலாளி வர்க்கத் தைச் சேராத புத்திஜீவி லெனினால் அதை உலகளாவிய முறையில் மனித விடுதலைக்கான ஒரு நடைமுறை இயக்கமாக மேலும் வளர்க்க முடிந்தது. இந்தியாவின் அதி உன்னதமான விடுதலைப் போராளி பகத் சிங்கும் சீனாவின் ஜோ என்லாயும் புத்திஜீவிகள் தாம். இவர்களுடைய மனதில் பாட்டாளி வர்க்கச்

**புரட்சிகர இயக்கத்தால் புத்திஜீவிகள் வழிநடத்தப்பட வேண்டும். புத்திஜீவிகளால் புரட்சிகர இயக்கம் வழிநடத்தப்படக் கூடாது. உதிரிப் புத்திஜீவிகள்சுயநலத்தையே முதன்மைப்படுத்துவார்கள்.**

சிந்தனையும் புரட்சியின் வித்துக்களும் வேர் விட்டுத் தழைத்தது எப்படி?

படித்த உயர் வர்க்கமான மன்டரின் வர்க்கத்தைச் சேர்ந்தவரான ஜோ என்லாயிடம் தன்னுடைய விவசாயி வர்க்கப் பின்னணி பற்றிப் பேசி மட்டந்தட்டக் குருஷ் சொவ் ஒரு முறை முயன்றாராம். அப்போது ஜோ என்லாய் அவரிடம் "தோழரே. நாம் இருவருமே நமது சொந்த வர்க்கங்கட்குத் துரோகம் செய்து விட்டோம்" என்று உறைப்பாகப் பதிலளித்தாராம். இந்தக் கதை மூலம் ஒரு ஆழமான உண்மை உணர்த்தப் படுகிறது.

**விமலன்**

ஒருவர் எந்த வர்க்கத்திற் பிறந்தவர் என்பதை விட அவர் எந்த வர்க்கத்தின் நலன்களுடன் தன்னைப் பிணைத்துக் கொள்கிறார் என்பதுதான் முக்கியமானது.

புத்திஜீவிகளைப் பொறுத்தவரை. அவர்கட்குக் கிடைத்த கல்வி அறிவும் விடயங்களைப் படித்து அறியவும் ஆராயவும் விவாதிக்கவும் உள்ள வசதிகளும் கால அவகாசமும் தம்மைச் சுழ உள்ள சமுதாயத்தையும் உலகையும் பற்றி அறிய வாய்ப்பை அளிக்கின்றன. இதன் விளைவாகப். பெரும்பாலானவர்கட்கு, மாணவப் பருவத்திலும் இளம் வயதிலும் ஆழமான சமூக அக்கறை ஏற்படுகிறது.

குறிப்பாக ஒரு நாடு அந்நிய ஆதிக்கத்திற்கு உட்பட்டுள்ள போதோ. போர்ச் சூழலிலோ, சமூக நெருக்கடிகளின் போதோ இளம் புத்திஜீவிகள் எளிதாகவே விடுதலை சார்ந்த சிந்தனைகளாலும் கொடுமைகளை எதிர்த்துப் போராடும் இலட்சியங்களாலும் ஈர்க்கப்படுகின்றனர். இவ்வாறு உருவாகும் ஈடுபாடு ஒருவரை முற்போக்குச் சிந்தனையுள்ளவராகவோ சமூக விடுதலைக்கான போராளியாகவோ வளர வழி வகுக்கலாம். அதே வேளை. ஒருவரது வர்க்கப் பின்னணி. குறிப்பாக, நடைமுறையில் உள்ள சமுதாய அமைப்பில் ஒருவர் எவ்வாறு தன்னை மேம்படுத்திக் கொள்வது என்ற அக்கறை மிகுந்த நடுத்தர வர்க்கப் பின்னணி. இத்தகைய சமூக ஈடுபாட்டுக்கு எதிராக இயங்குகிறது. எனவே பெரும்பாலான இளம் புத்திஜீவிகள் நிலைப்பாடு குறுகிய கால நோக்கிலான தமது சொந்த நலனுக்கும் நீண்டகால நோக்குடைய. சமூக நலன் சார்ந்த செயற்பாட்டுக்கும் நடுவே ஊசலாடுவது இயல்பானது.

ஒருவரை முற்போக்கான திசையில் தொடர்ந்தும் பயணஞ் செய்யவும் பாட்டாளி வர்க்கக் கண்ணோட்டத்திற் சிந்திக்கவும் செயற்படவும் இயலுமாக்குவனவற்றுள் ஒருவரது சமூகச் செயற்பாடு தீர்மானகரமானது. ஒருவர் பிறவியிலேயே முற்போக்காளராக இருப்பதில்லை. ஒருவர் சரிக்கும் தவறுக்கும் வேறுபாடு கண்ட மாத்திரத்திலேயே சரியான பாதையைத் தேர்ந்தெடுப்பதில்லை. சரியான பாதையை ஏற்ற எவருமே சரியான பாதையிலேயே பயணத்தைத் தொடருவதும் இல்லை.

ஏனெனில். மனித வாழ்வு ஒற்றையடிப் பாதையல்ல. சமூக விருத்தியும் ஒற்றையடிப் பாதையயல்ல. சமூக வாழ்விற் திரும்ப திரும்ப நெருக்கடிகள் வருகின்றன. தனிமனித நெருக்கடிகளும் சமூக நெருக்கடிகளும் ஒருவரைத் திரும்பத் திரும்பச் சோதனைகட்கு உள்ளாக்குகின்றன. இங்கே ஒருவரை உறுதியாக நிற்க உதவுவது அவரது தனிப்பட்ட மன வலிமைக்கும் மேலாக. நடைமுறை அரசியலில் அவரது ஆழமான ஈடுபாடும் அயராத செயற்பாடுமே. அந்த அனுபவம் மட்டுமே செயலுக்கும் சிந்தனைக்கும் உள்ள உறவை வலுப்படுத்துகிறது. அது மட்டுமே. தவறுகளைக் காணும் போது ஏற்கவும் திருத்தவும் போதுமான மனப்பக்குவத்தையும் நெஞ்சுறுதியையும் தருகிறது. அது மட்டுமே குழப்பத்தினூடு தெளிவைக் கண்டு முன்னோக்கிய பாதையில் வழி வடத்துகிறது.

இந்த நாட்டில் 1940கள் தொட்டு 1970கள் வரை உருவாகி வளர்ந்த முற்போக்குப் புத்திஜீவிகள் பலர் இன்று

11ம் பக்கம் பார்க்க..

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ் ஊடகங்கள் பற்றி (6)

## தினக்குரல் ஒரு மாற்றுப் பத்திரிகையா?

**ஊழல் அரசியல் வாதிகளுக்கும் வேஷம் போடும் ஆன்மீக வாதிகளுக்கும் பணிந்து தலை சொறிந்தால் பத்திரிகையின் தரம் சீரழிந்துவிடும்!**

வீரகேசரி நிர்வாகத்தின் லாப நோக்கம் காரணமாக வீரகேசரி ஆசிரியபீடம் செய்திகளைத் துணிந்து வெளியிடத் தயங்கியே வந்தது. தமிழ் மக்களுடைய தேவைகளையோ உணர்வுகளையோ பிரதிபலிக்க ஒரு பத்திரிகை இல்லாத சூழ்நிலையிலேயே 'தினக்குரல்' ஐந்தரை ஆண்டுகட்கு முன்பு உருவானது. முற்றிலும் வீரகேசரியிலிருந்து முறித்துக் கொண்டு வெளியேறிய ஒரு குழுவினரால் வெகு விரைவிலேயே வீரகேசரிக்குச் சவாலான ஒரு நாளேடாக தினக்குரலை வளர்க்க முடிந்ததற்கு ஒரு சிலரது கடுமையான உழைப்பும் பத்திரிகைச் செய்திகள் பற்றிய பார்வை வீரகேசரியில் இருந்ததை விடச் சிறிது நியாயமானதாக இருந்ததுமே முக்கிய காரணங்கள்.

தமிழ் மக்களைப் பாதிக்கின்ற விடயங்கள் பற்றிய கூடிய கவனம் தினக்குரலில் காட்டப்பட்டதன் பின் விளைவாகவே வீரகேசரி தனக்கு ஒரு தேசியவாத அடையாளத்தையும் தேட முன்வந்தது என்றால் மிகையாகாது. எனினும் தினக்குரலிற்கான ஆசிரிய வழிகாட்டலோ நிர்வாகத்தின் நிலைப்பாடோ வெகுசனச் சார்பானது என்று யாரும் மயங்க இடமில்லை.

பத்திரிகைத் தொழிலை ஒரு 'தரும காரியமாக' எந்தப் பத்திரிகை முதலாளியும் கருதுவது இல்லை. அவ்வாறு நாம் எதிர்பார்ப்பதும் நியாயமில்லை. கொள்கைக்காகப் பத்திரிகை நடத்திய சில முதலாளிமாரை தேசிய விடுதலைப் போராட்டங்களின் போது கண்டிருக்கிறோம். அங்கே பத்திரிகை தேசியவாத அரசியலால் வழி நடத்தப்பட்டது. இலங்கையில் கம்யூனிஸ்ட் கட்சி கூட நாளேடுகளை நடத்தியிருக்கிறது. அது லாபத்துக்காகச் செய்கிற காரியமல்ல. தினக்குரல் கொள்கையால் வழி நடத்தப்படுகின்ற ஏடல்ல என்பது எல்லாரும் அறிந்த விடயமே. ஆனாலும் மக்களின் விருப்பு வெறுப்பு அறிந்து செய்திகளையும் கட்டுரைகளையும் வெளியிட்டால் மட்டுமே பத்திரிகை நன்கு விற்பனையாகும் என்பதையும் வீரகேசரியுடன் போட்டி போடுவது என்றால் வீரகேசரியிலிருந்தும் வித்தியாசமான முறையில் பத்திரிகை நடத்த வேண்டும் என்பது தினக்குரல் முதலீட்டாளர்களுக்கு நன்கு தெரியும்.

மிகவும் பாடுபட்டுப் பத்திரிகையை வளர்த்தெடுக்கிற போது ஒட்டாமல் இருந்து வந்த வெளவால்கள் எல்லாம் பத்திரிகை வளர்ந்த பிறகு உரிமை கொண்டாட ஓடி வருவது இயல்பானதுதான். தம்மைப் பெரிய புள்ளிகளாகக் காட்டிக் கொள்ள விரும்புகிற பேர்வழிகள் எல்லாரும் பிரபலமான செய்தி ஏடுகளில் தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ள முயல்வதுண்டு. அதேவேளை, பத்திரிகைகளில் தங்களுக்குப் பாதகமான முறையில் எந்தவிதமான உண்மையும் வெளிவராமல் இருக்கும் படியும் கவனித்துக் கொள்வார்கள். இந்த விடயத்தில், அரசியல் தலைவர்களை விடவும் ஆன்மிகவாதிகள் என்று சொல்லிக் கொள்கிற உருத்திராட்சப் பூனைகள் படு பயங்கரமானவர்கள். இவர்களை விட இலக்கியப் பிரமுகர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், பல்வேறு பதவிகளில் இருப்பவர்கள் எல்லாருக்குமே தம்மைப் போற்றுகிற செய்திகள் வர வேண்டும் என்ற நப்பாசை மிகுதி.

பத்திரிகை நிருபர்கள் பலர் இந்தப் பலவீனங்களை நன்றாகவே பயன்படுத்திக் கொள்வார்கள்.

ஒரு பத்திரிகை வணிக அடிப்படையில் நிலைப்பதற்கு ஒரு வலிய பொருளாதாரத் தளம் தேவை. அந்த ஆதாரத்தை வெறுமனே பத்திரிகை விற்பனையால் மட்டும் தேடிக் கொள்ள முடியாது என்பது பத்திரிகை உலகின் யதார்த்தம். இதனால் ஒவ்வொரு பத்திரிகையும் வணிக நிறுவனங்களுடன் சிறிது சமரசமாக நடந்து கொள்ள முற்படுகின்றன. அதேவேளை, ஒரு பத்திரிகை விற்பனை சிறப்பாக இருந்தால் வணிக நிறுவனங்களும் விளம்பரங்களைச் செய்ய அப் பத்திரிகையை நாடுகின்றன. வணிக நிறுவனங்கள் பத்திரிகைகள் மீது ஆதிக்கம் செலுத்தும் நோக்கை விடப் பத்திரிகை தமது பொருட்களை வாங்குவோரைச் சென்றடைகிறதா என்பதையே கவனிக்கின்றன. இதனால், ஒரு பத்திரிகையால் குறிப்பிட்டவர்களது நலன்களுக்கு முற்றாகவே பணிந்து போகக் கூடிய நிர்ப்பந்தமில்லாமல் இயங்க முடியாது.

பத்திரிகை முதலாளிமார் அளவுக்கு அதிகமாகப் பத்திரிகையின் உள்ளடக்கத்திற் குறுக்கிடுவது பத்திரிகையின் வளர்ச்சிக்கு உதவாது. திறமையான நிர்வாகம் பத்திரிகை ஆசிரியர்களது செயற்பாட்டுக்குக் கணிசமான சுதந்திரம் வழங்குகிறது. இது, மாற்றுக் கருத்துக்களை ஊக்குவிக்கிற நோக்கத்திலல்லாது, பத்திரிகை பற்றிய நன்மதிப்பை ஊழியர்கள் மத்தியிலும் வாசகர் மத்தியிலும் வளர்க்க உதவுகிறது. முதலாளிய சனநாயகத்தில் அரசு எப்போது மக்களுடைய சனநாயக செயற்பாட்டிற் குறுக்கிடுகிறதென்றால், தன் இருப்புக்கு மக்களுடைய செயற் பாடு பாதகமாக அமைகிற போதுதான் என்று நாம் அறிவோம். ஒரு பத்திரிகை நிறுவனமும் அது போன்ற சனநாயகத்தையே கடைப் பிடிக்கிறது.

இலங்கையில் 1960களின் நடுப்பகுதி வரை, லேக் ஹவுஸ் நிறுவனம் இவ்வாறான ஆசிரிய சுதந்திரத்தைப் பெருமளவில் வழங்கிய போதும், தன் பிரசார வலிமையை உரிய நேரத்தில் யூஎன்.பி. க்குச் சாதகமாகவே பயன்படுத்தியது என்பதை யாரும் மறுக்க வியலாது. ஆசிரியபீடத்தில் உள்ளோரின் கருத்துச் சுதந்திரம், சனநாயகம் என்ற தோற்றப்பாடுகள் பத்திரிகைக்கு ஒரு நம்பகத்தன்மையை வழங்குவது ஒரு பத்திரிகையின் நிலைப்புக்கு அவசியமானது.

தினக்குரலில் இத்தகைய சுதந்திரம் உண்டா என விசாரித்தால், தினகரனையும் வீரகேசரியையும் விட அதிகளவில் உண்டு என்று சொல்லலாமே ஒழிய வெளியார் குறுக்கீட்டுக்கு அப்பாற்பட்டு ஆசிரிய பீடத்தினரால் செயற்பட முடியுமென்று சொல்வது கடினம். இதற்கும் மேலாக இப் பத்திரிகையின் ஆசிரியர் தன் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை முன் வைத்து ஒரு வகை நாட்டாண்மை போல நடப்பது நிர்வாகத்திற்கு சிண்டு முடிவது எல்லாத் தமிழ் ஏடுகளிலும் காணக் கூடியது என்று சொல்வது கடினம்.

தமிழ்ச் செய்தி ஏடுகளில் சினிமா, கிளுகிளுப்புச் செய்திகள், பயனுள்ள தகவல்களைக் கூடக் கொஞ்சம் 'மசாலா' சேர்த்து வெளியிடும் போக்கு, அபிப்பிராயத்துக்கும் செய்திகளுக்குமிடையே வேறுபாடு இல்லாத விதமான தகவல் வெளியீடு போன்றவை வாசகர்களின் தரத்தை உயர்த்துவதை விடுத்து மலிவான வியாபார உத்திகட்கே முக்கியம் தருவன. இவ் விடயங்களில் தினக்குரல் விலக்கான ஒன்றல்ல. இது பற்றிய கூச்சமில்லாமல் தினக்குரல் ஆசிரியர் பகிரங்கமாகவே பேசியுமிருக்கிறார். பொறுப்பான செய்தி வெளியீடு மூலம் வாசகர்களை வென்றெடுக்க முடியாது என்பது சமூகம் பற்றி ஒருவர் கொண்டிருக்கும் மிகத் தாழ்வான மதிப்பீடு என்றே கூற வேண்டும். சுவைபடச் சொல்வதற்கு உண்மைகளைத் திரிக்கவும் பயனற்ற விடயங்களுக்கு மினுமினுப்பு வழங்கவும் தேவை இல்லை.

வீரகேசரியில் இருந்து வெளியேறியோர் எல்லாரும் வீரகேசரியின் சில முக்கியமான குறைபாடுகளை முன்னிட்டே வெளியேறினார்கள். என்றாலும், வீரகேசரியில் பழகிய சில குறைபாடான நடத்தைகளை அவர்களிற் பலரால் களைய முடியாமைக்கு அவர்களது சமூகப் பார்வையும் பத்திரிகைத் தொழில் பற்றிய கண்ணோட்டமும் மாறவில்லை என்பதே காரணம். இதன் விளைவாகப் பலவாறான சமரசங்கள் செய்யப்பட்டுள்ளதை எந்த வாசகரும் காணலாம்.

வெளியில் ஆன்மிகம் பேசிக் கொண்டு, பழம் பண்டிதர் என்ற பேரில் மிகவும் கீழ்த்தரமான அவதூறுகளை ஒருவரால் ஞாயிறு தினக்குரலில் எழுத முடிந்தது. அது பற்றிய கடும் எதிர்ப்புகளைச் சந்திக்க முடியாமல் பின்வாங்கிய அதே போலி ஆன்மிகவாதியின் கருத்துக்களும் நடத்தையும் தினக்குரலில் விமர்சிக்கப்பட்ட போது மேலிடம் அந்தப் போலிக்குச் சாதகமாகக் குறுக்கிட்டதையும் அதன் விளைவாக அவ் விவாதம் (இப்போது நின்றுவிட்ட) ஒரு வார ஏட்டுக்கு இடம் பெயர்ந்ததையும் நம்மிற் சிலராவது அறிவோம்.

இது போலவே, தமிழ்த் தேசியவாதிகளின் அரசியல் வறுமை அம்பலமாகும் விதமாகக் கட்டுரைகளும் கடிதங்களும் வரும் போதெல்லாம் மேலிடத்தில் முறையிடுவதும் மேலிடம் குறுக்கிடுவதும் வழமையாகி விட்டன என்றே தோன்றுகிறது.

குறிப்பாக, தினக்குரலை வீரகேசரியினின்று சிறப்பாக வேறுபடுத்திக் காட்டுகின்ற சில பத்திகள் தமிழ்த் தேசியவாதப் பத்தாம் பசலிகளுடைய எரிச்சலைச் சம்பாதித்த போதும், வாசகர்களால் விரும்பி வாசிக்கப்பட்டவை. இவற்றுள் ஒன்றான சித்திரகுப்தனுடைய புதன் கிழமைகளில் வெளிவரும் அரசியல் குறிப்பேடு பத்தி எந்தவிதமான முன்னறிவிப்போ விளக்கமோ இல்லாமல் மூடு விழாக் கண்டது.

தினக்குரலில் வரும் அயல் விவகாரக் கட்டுரைகளும் சில செய்தி ஆய்வுகளும் தினக்குரலை மற்ற இரண்டு அகில இலங்கைத் தமிழ்ச் செய்தி நாளேடுகளினின்றும் வேறுபடுத்திக் காட்டினாலும் தினக்குரல் இன்னமும் பழமைவாதக் கண்ணோட்டங்களினின்று விடுபடாத ஒரு ஏடு என்பதற்கு அதன் பக்கங்களை நிரப்புகிற பகுத்தறிவுக்கு ஒவ்வாத விடயங்கள் இன்னமும் சான்று கூறுகின்றன.

தினக்குரலின் வளர்ச்சியும் செல்வாக்கும் அது தமிழ் மக்களுடைய பிரச்சனைகள் தொடர்பான விடயங்களில் மற்ற நாளேடுகளை விடத் துணிவாக எழுதியதால் விளைந்தவையே ஒழிய அதில் வருகிற சமூகப் பயனற்ற விடயங்களால் அல்ல. இது பற்றித் தினக்குரல் நிர்வாகமும் ஆசிரிய பீடமும் கவனமாக ஆலோசித்துப் பத்திரிகையின் தரத்தை முன்னேற்றுவதற்கு முயல வேண்டும்.

பத்திரிகையில் வருகிற விமர்சனங்களுக்கு முகங்கொடுக்க முடியாத அரசியல் வாதிகளுக்கு அஞ்சி விவாதங்களை முடக்கிப் போடுவது பத்திரிகையின் வளர்ச்சிக்கு உதவாது என்பதோடு நாளடைவில் மக்கள் மனதில் நம்பிக்கையீனத்தையே ஊட்டும்.

ஒரு பத்திரிகையின் வலிமை எவ்வளவு தூரம் மக்களுக்குப் பயனுள்ள விதமாகப் பணியாற்றுகிறது என்பதிலேயே தங்கியுள்ளது. பிழைப்புவாதிகள் ஒரு ஏட்டில் முக்கிய பொறுப்புகளில் உள்ளளவும் பயனுள்ள விடயங்கள் அவர்களது வசதி கருதித் தட்டிக் கழிக்கப்படுவது இயல்பானது. இது பற்றித் தினக்குரல் நிருவாகம் கவனிக்குமா?

தினக்குரல் நிச்சயமாக இன்னொரு வீரகேசரியில்லை. ஆனால் அது தன்னை வலுவான ஒரு மாற்றுப் பத்திரிகையாக நிறுவத் துணியாவிட்டால், அது இன்னொரு வீரகேசரியாகச் சீரழியலாம்.

**- தேசபக்தன் -**

# இலங்கையில் அமெரிக்காவின் திருப்பணி

இலங்கையில் அமெரிக்கா புதிய திருப்பணி ஒன்றினை ஆரம்பித் திருக்கிறது. அதற்குப் பெயர் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்பதாகும். அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் சர்வதேசப் பயங்கரவாதத்தை எதிர்ப்பதற்கான உதவிகளை உலக நாடுகளுக்கு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதன் கீழ் பயங்கரவாதம் எனப்படுவதற்கு எதிரான உளவறியும் முறைகளை மேம்படுத்துவது. சட்ட நடைமுறைகளைச் சீர்திருத்துவது. இராஜதந்திர ரீதியில் பரிமாற்றங்களை மேற்கொள்வது போன்றவற்றுக்கு அமெரிக்கா நேரடி உதவிகளை வழங்கி வருகின்றது. இந்த நடைமுறை கடந்த வருடம் செப்டம்பர் 11 தாக்குதலுக்குப் பின் வேகமாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது.

இலங்கையில் அண்மைய மாதங்களில் அமெரிக்கா பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை எனக்கூறி பல்வேறு செயற்பாடுகளில் இறங்கியுள்ளது. ஆயுதப் படைகளுக்கான பயிற்சி இவற்றில் மிக முக்கிய இடத்தை வகிக்கிறது. ஏற்கனவே அதிரடிப் பொலீஸ் பிரிவில் இருந்து விஷேச பயிற்சிக்காக அமெரிக்காவிற்கு ஒரு தொகுதியினர் அனுப்பப்பட்டுள்ளனர். இந்த அதிரடிப் பொலீஸ் கிழக்கிலும் மன்னாரிலும் எவ்வாறு நடந்து கொண்டது என்பது உலகறிந்தவைகளாகும்.

தற்போது இலங்கையின் தெற்குக் கடற்பரப்பில் தங்காலைப் பகுதியில் இலங்கைக் கடற்படையினருக்கு அமெரிக்க கடற்படைக் கமாண்டோக்கள் பயிற்சி வழங்கி வருகின்றனர். இதனை கூட்டுப் பயிற்சி என்றே கூறப்படுகின்றது. ஏற்கனவே ராணுவத்திலும் கடற்படையிலும் அமெரிக்க உயர் மட்ட ஆலோசகர்கள் இருந்து வழிகாட்டல் பயிற்சிகளை வழங்கி வருவதாக அறிய முடிகின்றது.

மேலும் இப்பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை நேரில் பார்வையிடவும் ஆலோசனை வழங்கவும் அமெரிக்க பயங்கரவாத எதிர்ப்பு திணைக்களத்தின் இணைப்பு அதிகாரியான பிரான்சிஸ் எக்ஸ் ரெய்லர் இலங்கை வரவுள்ளார். இவர் பிறிகேடியர் ஜெனரல் தரத்தைச் சேர்ந்த உயர் ராணுவ அதிகாரியாவார். அவர் இங்கு உள்துறை அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு. உயர் அதிகாரிகள். அமைச்சர்கள் ஆகியோரைச் சந்தித்து விரிவான திட்டங்களை வகுத்து வழிகாட்டுவார் என்றும் செய்திகள் வெளிவந்துள்ளன.

அமெரிக்காவின் பயங்கரவாத எதிர்ப்பு என்பதன் அர்த்தம்தான் என்ன? அதே போன்று இலங்கையில் பயங்கரவாதம் என்று எதனை அர்த்தப்படுத்துவது. தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் புலிகள் இயக்கம் பயங்கரவாத இயக்கமாகக் காட்டப்பட்டு வந்தது. ஆனால் இன்று அவ் இயக்கத்தின் மீதான தடை அகற்றப்பட்டு அதனுடன் பேச்சுவார்த்தையையும் நடாத்தப்படுகின்றது. அமெரிக்காவும் புலிகள் மீதான தடையை அகற்ற இருப்பதாக சமிக்கை காட்டி நிற்கிறது.

அவ்வாறெனில் இலங்கையில் பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் எதற்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. யாருக்கு எதிராகப் போராடுவதற்கு தயார் செய்யப்படுகின்றன. உண்மையாகவே மக்களது ஒவ்வொரு எதிர்ப்பும் போராட்டங்களும் அமெரிக்காவைப் பொறுத்தவரை பயங்கரவாதமேயாகும். தனது உலக ஆதிக்கத்திற்கு எதிராக நாளை கிளர்ந்தெழப் போகும் மக்கள் திரளினரை அடக்கி ஒடுக்குவதற்கே இலங்கை அரசாங்கப் படைகளுக்கு பயிற்சி வழங்கப்படுகின்றது. அத்துடன் புலிகள் இயக்கம் தற்போதைய பேச்சுவார்த்தையில் இருந்து விலகினால் கடுமையான எதிர்விளைவுகளை எதிர்நோக்கவேண்டி வரும் என்ற பலத்த எச்சரிக்கையே அமெரிக்காவின் நடவடிக்கையில் பொதிந்துள்ள அடிப்படையாகும்.

அமெரிக்காவின் இப் பயங்கரவாத எதிர்ப்புத் திருப்பணிக்கு ஐ.தே.முன்னணி அரசாங்கம் முழுமையான விருப்பையும் இடத்தையும் வழங்கி நிற்கிறது. இது பேரினவாத முதலாளித்துவ ஆளும் வர்க்க நிலைப்பாட்டின் பிரதான பாத்திரமாகும். அவர்கள் எக்காரணம் கொண்டும் தமது பேரினவாத ஆளும் வர்க்க ஒடுக்குமுறை நிலைப்பாட்டை ஒருபோதும் தளர்த்த மாட்டார்கள் என்பதையே அமெரிக்காவின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை என்பதனூடான பயிற்சிகளும் செயற்பாடுகளும் மக்களுக்கு உணர்த்தி வருகின்றன. எனவே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஒவ்வொரு நகர்வும் ஒவ்வொரு செயலும் இலங்கை மக்கள் ஒவ்வொருவராலும் உற்று அவதானிக்கப்படல் வேண்டும். அவற்றுக்குப் பின்னால் உள்ள ஆதிக்க சதி நோக்கங்கள் புரிந்து கொள்ளப்படல் வேண்டும். அல்லாதுவிடின் விரைவில் நமது நாடும் மக்களும் இலகுவாகவே அமெரிக்காவின் பிடிக்குள் அகப்பட்டு அதன் தென்ஆசியக் கொலனியாக்கப்பட்டு விடும் அபாயம் வந்து சேர்ந்து விடும்.

**- நமன் -**

படிப்பகம்

www.padippakam.com



# மக்களை ஏமாற்றிப் பிழைக்கும் ஆன்மீகப் பெருச்சாளிகளின் மடங்கள், ஆதீனங்கள்

"திரைப்பட நடிகை மாதுரி விபச்சாரத்தில் ஈடுபட்டதாகக் கைது, திருவாவடுதுறை ஆதீனத்தைக் கொல்ல முயற்சி! இளைய சன்னிதானம் தற்கொலை முயற்சி!"

அடுத்தடுத்து வந்த செய்திகளால் மக்கள் அதிர்ச்சியானார்களோ இல்லையோ, அதிர்ச்சி தரும் செய்திகளை வாரி வழங்கும் பத்திரிகைகள் தங்களது நிருபர் பட்டாளத்தை எந்தப் பக்கம் அனுப்புவது என்று நிலை குலைந்து போய்விட்டன.

ஒரு நடிகையையும், மதத்தலைவர்களையும் இணை வைத்துப் பேசுவது சரியா என்று பக்திமான்களின் குரல் எங்களுக்குக் கேட்காமலில்லை. என்ன செய்ய? ஒரு நடிகையின் ஆபாசப் படச்சுருளில் ஆதீனத்தின் சிவஞானபோதம் சிக்கிக் கிடக்கிறதே!

நாம் சொல்வது ஒரு புறமிருக்கட்டும். இவர்களே ஒரு மதத்தலைவரை அறிமுகப்படுத்தும்போது, 'வானத்திலிருந்து இறங்கி வந்த தேவதை' என்று ஒரு நடிகையை மார்க்கெட்டுக்குள் இறக்கி விடுவது போலத்தானே ஜகஜோதியாய்க் காட்டுகிறார்கள். விசயம் வெளியே வந்து நாறும்போதுதான் 'அவள் ஏற்கெனவே அப்படி' என்று 'இவர் ஏற்கெனவே இப்படி' என்று நதிமூலம், ரிஷிமூலத்துக்குள் இறங்குகிறார்கள்.

இவர்களது குலம் என்ன? கோத்திரம் என்ன என்ற விசாரணையே அப்புறம் தானே தொடங்குகிறது! இளைய தம்பிரான் பெரிய தம்பிரானைக் கொலை செய்யும் முயற்சியில் இறங்காவிட்டால் நம்மில் எத்தனைப் பேருக்குப் பெரிய தம்பிரான் மதுரா கோட்ஸில் மாஜி ஊழல் பேர்வழி என்ற விபரம் தெரிய வந்திருக்கும்?

ஒழுக்கக் கேட்டிலும், சமூக விரோதத் தன்மையிலும் நவீன மதமான சினிமாவிற்கும் புராதன மதமான இந்து மதத்திற்கும் உள்ள இணைப்பை விலக்கிப் பார்ப்பது இந்து மதத்தின் வீரியத்தைக் குறைத்து மதிப்பிடும் குற்றமாதலால் நாம் இணைத்தே பார்க்க வேண்டியுள்ளது. அப்படியானால் இரண்டும் ஒன்றுதானா?

இந்தக் கேள்விக்கு நம்மைவிட ஆதி சங்கரர் அடித்துப் பதில் சொல்கிறார். "பராமாத்மா ஒன்றுதான், அது பலவாகக் காணப்படுவதற்குக் காரணம் மாயை, மெய்ஞானம் தோன்றியவுடனேயே அந்த மாயை அழிந்துவிடும்" என்கிறது அவரது அத்வைதம். அந்த மாயை மாதுரி வடிவத்தில் வந்தால் பரிசீலிக்கக் கூடாதா என்ன?

எந்தத் தம்பிரான்களும் கழனியில் இறங்கி நாத்துநட்டு, ஊர் ஊராய்ப் போய் அறுப்பறுத்து எந்த மடத்தையும் உருவாக்கிவிடவில்லை. "மன்னனே இறைவன், அவனைச் சார்ந்தும் அவனுக்கே அடங்கியும் அவனது கருணையை எதிர் பார்த்தும் வாழ்வதுமே இவ்வுலக வாழ்க்கை" என்று மக்களை அடிமைப் படுத்தியும், சிறுமைப்படுத்தியும் சமயப் பணி என்ற போர்வையில் "பதி, பசு, பாசம்" என்று சைவ சித்தாந்தம் பரப்பித் திரிந்த சைவக் கைக் கூலிகளுக்கு மன்னர்கள் கைம்மாறாக ஊர் மக்களின் விளை நிலத்தை நூறு வேலி, ஆயிரம் வேலி என்று அபகரித்துக் கொடுத்தது தான் இந்த மடங்களும், பேராலயங்களும்.

ஒவ்வொரு மடத்துக்கும் அதன் கட்டுப் பாட்டிலுள்ள கோயில்களும், மன்னர்களும், பட்ட மகரிஷிகளும், வணிகர்களும், தங்க வைடூரியங்களையும் தங்களுக்கு கீழ் வேலை செய்த கூலி



விவசாயிகளுடன் சேர்த்தே கொடுத்து நிலங்களையும், 'குடிநீங்கா தேவதானம்' என்ற பெயரில் அடிமைப்படுத்தினர். பருவநிலை பொய்த்தாலும் மேல்வாரம். கீழ்வாரம் என்று கடுமையான வரிகளைப் போட்டு, குத்தகை பாக்கி அளக்காத கூலி விவசாயிகளைக் கொன்று புதைத்த இடத்தில் தென்னங் கன்றை நட்டுவிட்டு மடங்களின் 'சைவத் தொண்டை' இன்றும் மக்கள் வாய்வழிக் கதையாகப் பேசி வருகின்றனர்.

திருப்புகழைப் பாடப்பாட வாய் மணக்கும் எனும் இந்தச் சைவசிகாமணிகள் தான். தெய்வக் கட்டளைக்கு அடிபணிந்து "உழுகுடி" வரியை அளிக்க இயலாத விவசாயிகளைப் பார்த்து "உன் பொண்டாட்டியை என் மடத்துக் கோவிலுக்கு தேவரடியாளாக்கு!" என்று வாய் மணந்தார்கள். ஊரே எறும்புப் புற்றிலும், எலி வளையிலும் அரிசியெடுத்து பசி போக்கிய நேரத்திலும் குகைக்குள் தானியங்களையும், செல்வங்களையும் பதுக்கி வைத்து, வரி போட்டுக் கசக்கிப் பிழிந்த இந்த மடங்களின் கொடுங்கோன்மையை எதிர்த்து மக்கள் கலகம் செய்த வரலாறு திருத்துறைப்பூண்டிக் கல்வெட்டில் "குகையிடிக் கலகம்" என்று குறிப்பிடப்படுகிறது.

"சிவன் சொத்து குல நாசம்" என்று மிரட்டுகிறார்களே, அந்தச் சிவன் மடங்களுக்கும் ஆதீனங்களுக்கும் சேர்த்துக் கொடுத்திருக்கும் சொத்து இருக்கிறதே, அதுதான் பல குலங்களை நாசம் செய்து பிடுங்கிய சொத்து. இப்படி ஊர்த்தாலி அறுத்துச் சேர்த்த சொத்தை நிர்வாகம் செய்ய சின்ன ஆதீனமாகப் பட்டினத்தாரையா நியமிக்க முடியும்?

இவனை மடத்தில் சேர்த்தால் ஊழலுக்கு உடந்தையாக இருப்பான்.

## புராதன மதமான இந்து மதமும் நவீன மதமான சினிமாவும் மக்களை ஏமாந்றிப் பிளைக்கின்றன

இங்கு நடக்கும் ஒழுக்கக் கேடுகளை வெளியே கசிய விடமாட்டான் என்ற கிரமினல் பயோடேட்டா படிதான் இவர்களின் தேர்வே நடக்கிறது. அப்படியிருக்கையில் இப்படிப்பட்ட கிரிமினல்கள் எந்தப் பஞ்சமா பாதகத்தையும் செய்யாமல் இருந்தால்தான் நாம் அதிர்ச்சியடைய முடியும்.

நூறு கோடி மக்கள் கொண்ட இந்தியாவில் இந்த ஆள்தான் ஜகத்துக்கே குரு என்றால், இத்தனை கோடிப் பேரையும் சல்லடையில் போட்டுச் சலித்து இந்த ஆள்தான் 'பெஸ்ட்' என்று பொறுக்கி எடுத்தார்களா? இல்லை இவர்தான் ஜகத் குரு என்றால் ஜகத் குருவைத் தேர்ந் தெடுக்கும் வழிமுறையைச் சொல்லுங் களய்யா மடாதிபதிகளே என்றும் கேட்கும் உரிமை பக்தனாகிய உங்களுக்கு உண்டா? பத்திரிக்கைகள் தான் கேட்டதுண்டா?

வேத ஆகமங்கள் உபநிடதங்கள், சாத்திரங்களை ஐயந்திரிபறக் கற்றவர்கள் அத்யயனம். பாராயாணத்தில் கரை கண்டவர்கள் மெய்கண்ட சாத்திரங்களையும் சிவஞான போதத்தையும், பதிகங்களையும், புராணங்களையும் கசடறக் கற்றவர்கள்தான் மடத்துக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் என்று நீங்கள் நினைத்துக் கொண்டிருந்தால் அது உங்கள் அறியாமை.

செத்துப் போன சீனியர் சங்கராச்சாரியாரை ஹைஸ்கூலிலிருந்து கன்னுக்குட்டியைப் போல மடத்துக்கு ஓட்டி வந்து ஜகத் குருவாக அடையாளப் படுத்திய பிறகுதான் வாத்தியார்களை வைத்து வேத உபநிடதங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன.

தற்போதைய இரண்டு சங்கராச்சாரிகளின் 'பயோடேட்டா' நமக்குத் தெரியாது. இந்த பிரம்ம ரகசியத்தைத் தெரிந்து கொள்ள முயல்பவர்கள் ஏதாவதொரு போலீசு ஸ்டேசனில் தலை வெடித்துச் சாகக் கூடும்.

திருவாவடுதுறை ஆதீனம் சிவப்பிரகாச பரமாச்சாரியார் 'உத்தமர் உய்ய வழி காட்டும் சிவத்தொண்டி'ன் காரணமாகத் தீட்சை பெற்று வரவில்லை. மதுரா கோட்ஸில் மாமூல் விவகாரத்தில் மாட்டிக் கொண்டுதான் சித்த நெறி காட்டும் சிவப்பணிக்குத் தலைமையேற்க வந்துள்ளார்.

சின்ன ஆதீனம் இந்த ஆன்மீகத் தரகு வேலைக்கு நியமிக்கப்படு முன் ரியல் எஸ்டேட் தரகராக இருந்தவராம்.

தேர்தலில் நிற்கும் ஓட்டுச்சீட்டு அரசியல்வாதியை தேர்தல் கமிசன் 'நீ கிரிமினலா? சொத்து விவரம் என்ன, காவல் நிலையத்தில் வழக்கு உண்டா?' என்று விளக்கம் கேட்க வேண்டும் என்கிறது தேர்தல் கமிசன். இது வாக்காளர்களின் தகவல் பெறும் உரிமை என்கிறது உச்ச நீதி மன்றம். ஆனால் ஜகத்துக்கே குரு என்பவரிடம் இந்தியாவில் இத்தனைக் கோடி இந்துக்கள் இருக்கும் போது நீங்கள்தான் முதல் ஆள் என்றால் அது எந்த வகையில் உங்கள் தேர்வு என்று யாராவது கேள்வி கேட்பதுண்டா?

அம்பானி, டாட்டா, பிர்லாக்கள் கூட தங்களது பங்குதாரர்களிடம் இந்த ஆண்டு கம்பெனி இலாபத்தில் ஓடியிருக்கிறது அல்லது நட்டத்தில் போயிருக்கிறது என்று விளக்கமளிக்க வேண்டிய அவசியம் உள்ளது.

கோடிக்கணக்கில் சொத்துக்களைப் புரட்டும் இந்த மடாதிபதிகள் யாராவது தங்களைப் பின்பற்றும் அல்லது தங்களோடு மதம் என்ற வகையில் இணைந்த பக்த கோடிகள் யாருக்காவது "இவ்வளவு கோடி சொத்து. இன்றைய தேதிக்கு இலாபம் இவ்வளவு" என்று கணக்குக் காட்டுவதுண்டா? நிலைமை இப்படியிருக்க இராம. கோபாலன் போன்ற வீரத் துறவிகள் இந்துக்கள் உரிமையில் அரசு தலையிடக் கூடாது என்று கூப்பாடு போடுகின்றனர். ஆதீன விவகாரத்தில் அவுரங்கசீப்பா தலையிட்டான்?

இந்துக்களின் உரிமை என்று பொதுவாகப் பூசி மெழுகுவதை விட, கோயில், சங்கராச்சாரி, மடாதிபதிகளின் சொத்தில் கை வைக்காதே என்று வீரத்துறவி நேரடியாக விசயத்திற்கு வருவது நல்லது.

"இந்தியாவின் தகுதி தேவைப்படாத ஒரே தொழில் புரோகிதத் தொழில்" என்றார் அம்பேத்கர். சங்கரமடத்தில் பரமாச்சாரியாரையும், சைவ மடத்தில் ஆதீனத்தையும் தெரிவு செய்ய முதல் தகுதி சாதி. கிரிமினல் தகுதிகள் வளர்ப்பிலேயே தம் சாதிக்காரனுக்குத் தான் உண்டு என்பதில் அவாளுக்கு அவ்வளவு நம்பிக்கை. இரண்டாவது தகுதி, பத்துக் கொலை செய்தாலும் பதட்டமில்லாமல் முகத்தைப் பராமரிக்கின்ற "தெய்வீகக் களை". மூன்றாவதாக, மடத்தின் மாஃபியா வேலைகள் மற்றும் மடாதிபதியின் பேரின்பம் சாராத லீலைகள் போன்றவற்றின் இரகசியத்தைக் காப்பாற்றும் "பணிவு". நான்காவதாக, பெரியவர் சமாதி அடைந்து அதிகாரம் தன் கைக்கு வரும்வரை அடக்கி வாசிக்கும் "பொறுமை".

இந்த மூன்றாவது, நான்காவது விவகாரங்களில் தோன்றும் முரண்பாட்டில்தான் இளவரசர்கள் மன்னனைக் கொலை செய்கிறார்கள் பெரிய ஆதீனங்களுக்குச் சின்ன ஆதீனங்கள் மருந்து வைக்கிறார்கள். வாழையடி வாழையாக அரண்மனைகளிலும் ஆதீனங்களிலும் நடந்து வருவது இதுதான்.

சரி, இதெல்லாம் அரசுக்கும், ஆளும் வர்க்கங்களுக்கும் தெரியாதா? தெரிந்தே இந்தக் குற்றப் பரம்பரையை குரு பரம்பரையாக அனுமதிப்பது ஏன்?

ஒன்று-மக்களை மடமையில் இருத்தி வைக்க-ஆளும் வர்க்கத்திற்கு மடங்களின் சேவை

11ம் பக்கம் பார்க்க....

# போபால் விஷவாயுப் படுகொலைக்கு காரணமான அமெரிக்கப் பயங்கரவாதி அண்டர்சனுக்கு அத்வானி கும்பல் காட்டும் பரிவு

போபால் விசவாயு படுகொலையை இந்திய நாட்டு மக்களால் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. தொழில் விபத்து எனப் பூசி மெழுகப்படும் இந்தப் படுகொலையின் பொழுது, ஒரே நாள் இரவில், ஒரு சில மணி நேரத்திற்குள், பல ஆயிரக்கணக்கான மக்கள் மூச்சுத் திணறிச் செத்துப் போனார்கள். தப்பிப் பிழைத்தவர்களோ புற்று நோய் போன்ற கொடிய நோயினால் பாதிக்கப்பட்டும், உடல் ஊனமுற்றும் நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இப்படுகொலை நடந்து ஏறத்தாழ பதினெட்டு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஆனாலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நட்ட ஈடும், முறையான மருத்துவ வசதியும் வழங்கப்படவில்லை. படுகொலைக்குக் காரணமான குற்றவாளிகளுள் ஒருவரும் தண்டிக்கப் படவில்லை. இதுவே, பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் மிகப் பெரும் அநீதி. இந்த நிலையில், அமெரிக்க அடிவருடியான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு, போபால் விசவாயு வழக்கு முழுவதையும் நீர்த்துப் போகச் செய்யும் சதியில் இறங்கியிருக்கிறது.

யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைவராக இருந்த லாரன் ஆண்டர்சனும், அந்நிறுவனத்தின் இந்தியக் கூட்டாளிகளும் "போபாலில் இயங்கி வந்த யூனியன் கார்பைடு தொழிற்சாலையில் பாதுகாப்பு அம்சங்கள் குறைபாடு உடையதாக இருந்ததையும், இதனால் வாயு கசிவு ஏற்பட்டால் பலரின் உயிரைக் காவு கொண்டு விடும் என்பதையும் அறிந்திருந்தனர்.

இதற்கான ஆதாரங்களைத் திரட்டிய மைய புலனாய்வுத் துறை யூனியன் கார்பைடு நிறுவனம், இப்படுகொலை நடந்தபொழுது அதன் தலைவராக இருந்த ஆண்டர்சன், அந்நிறுவனத்தின் இந்தியக் கூட்டாளிகள், அதிகாரிகள் உள்ளிட்டு 12 பேர் மீது, "தெரிந்தே மனிதர்களின் அகால மரணத்திற்குக் காரணமாக இருப்பவர்களை"த் தண்டிக்கும் இந்தியத் தண்டனைச் சட்டம் "304-பிரிவு எண் 2"ன் கீழ் 1987ஆம் ஆண்டு வழக்குத் தொடுத்தது. இச்சட்டத்தின் கீழ் இக்குற்றவாளிகளுக்குப் பத்து ஆண்டு கடுங்காவல் தண்டனையும் அபராதமும் விதிக்க முடியும்.

இவ்வழக்கை ஏற்றுக் கொண்ட போபால் நகர முதன்மைக் குற்றவியல் நடுவர் மன்றம், 1992-ஆம் ஆண்டு ஆண்டர்சனுக்கு எதிராகப் பிணையில் வெளிவர முடியாத கைது ஆணையைப் பிறப்பித்ததோடு, ஆண்டர்சனை அமெரிக்காவில் இருந்து பிடித்துவர வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

இந்தப் பிடிவாரண்ட் உத்தரவாகி கடந்த பத்தாண்டுகளில், எத்தனையோ இந்திய தலைவர்களும், அதிகாரிகளும் எத்தனையோ முறை அமெரிக்காவிற்குப் போய்விட்டு வந்திருக்கிறார்கள். அதே போல அமெரிக்க தலைவர்களும், அதிகாரிகளும் இந்தியாவிற்கு வந்து சென்றிருக்கிறார்கள். ஆனாலும், ஒருமுறை கூட இந்தியா ஆண்டர்சனை ஒப்படையுங்கள் என அமெரிக்காவிடம் கோரவில்லை.

"பாகிஸ்தானில் தஞ்சமடைந்திருக்கும் இருபது முசுலீம் தீவிரவாதிகளைத் தன்னிடம் ஒப்படைக்க, பாகிஸ்தானை அமெரிக்கா நிர்ப்பந்திக்க வேண்டும்" என மூச்சுக்கு முன்னூறு தடவை அமெரிக்காவிடம் கோரிக்கை வைக்கும் வாஜ்பாயிக்கும், அத்வானிக்கும் ஆண்டர்சன் விவகாரம் மட்டும் மறந்து போய் விடுகிறது.

இந்தியாவிற்கும் அமெரிக்காவிற்கும் இடையே குற்றவாளிகளைப் பரிமாறிக் கொள்ளும் ஒப்பந்தம் இருந்தும், ஆண்டர்சனை ஒப்படைக்க இந்திய அரசு கோர மறுக்கிறது என்றால், அந்த ஒப்பந்தம் நாக்கு வழிப்பதற்கா என்று தெரியவில்லை.

இதனிடையே போபால் விச வாயு கிரிமினல் வழக்கில் மூக்கை நுழைத்த உச்ச நீதிமன்றம், "யூனியன் கார்பைடு நிறுவனத்தின் இந்தியக் கூட்டாளிகளுக்குத் தெரிந்தே போபால் விச வாயு நடந்ததாகக் கூற முடியாது: இது தொர்பாக மைய புலனாய்வுத் துறை தந்துள்ளவை அனைத்தும் அனுமானங்களே தவிர, ஆதாரங்கள் இல்லை" எனக் கூறி இந்தியத் தரகு முதலாளி கேசுப் மஹிந்திரா உள்ளிட்ட 9 இந்தியர்களின் மீது இந்தியத் தண்டனைச் சட்டம் "304-பிரிவு எண்:2" ன் கீழ் மைய புலனாய்வுத் துறை தொடுத்திருந்த வழக்கைத் தள்ளுபடி செய்தது: அதே சமயம், இந்த 9 பேரின் மீது இந்திய தண்டனைச் சட்டம் "304-பிரிவு ஏ" ன் கீழ் வழக்கு நடத்த உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை எதிர்த்து பாதிக்கப்பட்டவர்கள் தொடுத்த வழக்கையும் உச்ச நீதிமன்றம் தடாலடியாகத் தள்ளுபடி செய்தது.

இந்தக் குற்றவாளிகள் "304-பிரிவு ஏ" ன் கீழ் தண்டிக்கப்பட்டால், அந்த தண்டனையும் உயர் நீதிமன்றத்தாலும். உச்ச நீதிமன்றத்தாலும் தள்ளுபடி செய்யப்படாமல் உறுதி செய்யப்பட்டால், அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய தண்டனை வெறும் இரண்டு ஆண்டுகள்தான். நாலாயிரம் பேரைக் கொன்ற, பல ஆயிரம் பேரை முடமாக்கிய, நடைபிணமாக்கிய குற்ற வாளிகளுக்குத் தண்டனை வெறும் இரண்டு ஆண்டுகள் என்றால், இந்தத் தண்டனையும் எப்போது கிடைக்கும் எனக் கூற முடியாது என்றால், இதன் பெயர் நீதியா? மோசடியா?

ஒன்பது இந்தியக் குற்றவாளிகளின் மீதான வழக்கை நீர்த்துப் போகச் செய்துவிட்ட உச்ச நீதிமன்றம், அமெரிக்கக் குடிமகனும், யூனியன் கார்பைடு நிறுவனத்தின் முன்னாள் தலைவருமான ஆண்டர்சனுக்கு இந்தச் சலுகையை வழங்கவில்லை. இதற்கு உச்ச நீதிமன்றத்தின் நல்லெண்ணம் எதுவும் காரணமல்ல. மாறாக, ஆண்டர்சன் தனது இந்தியக் கூட்டாளிகளைப் போல, மையப் புலனாய்வுத் துறை தொடுத்திருந்த வழக்கை எதிர்த்து தன் பேரில் மனு செய்யவில்லை.

ஆண்டர்சனுக்காக அந்தத் திருப்பணியை இந்து மதவெறிக் கூட்டணி அரசு செய்யத் தொடங்கிவிட்டது

10ம் பக்கம் பார்க்க..

படிப்பகம்

www.padippakam.com






## மாக்ஸியமா? தலித்தியமா?

தேசியமே அடிப்படையானது என்ற விதமாகத் தேசியவாதிகள் பேசி வந்திருக்கிறார்கள். ஏறத்தாழ அதே விதமாக தலித்திய வாதிகள் எனப்படுவோர் அண்மைக்காலமாகப் பேசி வருகிறதை நாம் கேட்கிறோம். இந்த வகையான தலித்தியம் சாதிய அரசியலை வளர்த்துத் தாழ்த்தப்பட்ட சாதியினரை, அதாவது 'தலித்துகளை', மேலும் பிளவுபடுத்தியுள்ளது என்பதைக் கவனிக்கும் போது, இவர்களிடம் சமூக முரண்பாடுகள் பற்றிய தெளிவு போதாமையும் வலிந்து மாக்ஸியத்தை எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் காரணமாக வலிந்து சில தவறான முடிவுகளைச் சென்றடையும் அவலமும் மிகுதி என நாம் காணலாம். சில சமயங்களில், மாக்ஸிய விரோதமான தீவிர தலித்தியம், பச்சையான சந்தர்ப்பவாதத்தின் விளைவானது.

தாழ்த்தப்பட்ட மக்களது உரிமைக்காகப் போரிட்ட அம்பேத்கர், ஈ.வெ.ரா. போன்ற தலைவர்கள் மாக்ஸியத்திடமிருந்து மாறுபட்டிருந்தாலும் மாக்ஸியத்தை நிராகரித்தவர்கள் என்று கூற முடியாது. அவர்களது பார்வையில் எந்த முரண்பாடுகள் அவர்கட்கு முக்கியமாக இருந்தனவோ அவற்றில் அவர்களது கவனங் குவிந்தது உண்மை. அதற்கும் இன்றைய தீவிர தலித்தியர்கள் சிலர் மாக்ஸியத்தை மறுப்பதற்கான ஆய்வு முறைகளை வலிந்து தேடித் தாங்கள் அரை குறையாக விளங்கிக் கொண்ட பின் நவீனத்துவம் போன்ற கோட்பாடுகளிலும் நீட்ஷே போன்ற பிற்போக்குச் சிந்தனையாளர்களிடமும் தஞ்சம் புகுவதற்கும் மிகுந்த வேறுபாடு உண்டு.

தங்களுக்கு வசதியாக மாக்ஸியத்தால் சாதிப் பிரச்சனைக்குத் தீர்வு தேட முடியாது என்று மொட்டையாகச் சொல்லிவிட்டு எங்கெங்கெல்லாம் தங்களுக்கு உடன்பாடான தகவல்கள் கிடைக்குமோ அவற்றின் முழுமையை மற்றவர்கள் விளங்க வாய்ப்பளிக்காமல் அவற்றைத் துடைத்தழித்துத் தம் "உண்மைகளை" வழங்க முற்படுவார்கள்.

மாக்ஸ் இந்திய சாதி முறை பற்றிய விரிவான ஆய்வுகளை நடத்தியவரல்ல. ஆயினும் இந்தியா பற்றிய அவரது வரையறைக்குட்பட்ட ஆய்வில் சாதி முறை பற்றி அவர் அறிந்தே இருந்தார். சாதியத்துக்கெதிரான போராட்ட முறையை மாக்ஸ் முன் வைக்கவில்லை என்று வாதிக்கிறவர்களை விட மாக்ஸ் அணு ஆயுத ஒழிப்புப் பற்றிப் பேசவில்லை என்போர் அறிவிற் குறைந்தவர்களல்லர்.

நம் முன்னுள்ள கேள்வி, மாக்ஸியம் சாதியத்துக்கும் சாதிய ஒடுக்குமுறைக்கும் எதிரானதா என்பது மட்டுமல்ல சாதியத்துக்கு எதிரான போராட்டத்திற்கு வலுவும் வளமும் தரவல்லதா என்பதே. மாக்ஸியம் மனித விடுதலை சார்ந்த சிந்தனை முறை. அது உலகை இயங்கியல் முறையிலும் அதன் வரலாற்றுக் கண்ணோட்டத்திலும் நோக்குவது. எனவே, மாக்ஸியம், புதிய அறிவை உள்வாங்குவதும் சிந்தனையை விருத்தி செய்வதும் நடைமுறையிற் சோதிப்பதுமாகத் தொடர்ச்சியாக வளரும் ஒரு சிந்தனை முறையாக, ஒரு போராட்ட நடைமுறையாக, ஒரு சமூக இலட்சியமாகவே இருக்க முடியும். மாக்ஸியம் உலகின் மாற்றங்களுக்கு எவ்வாறு முகங்கொடுத்துத் தன்னைச் செழுமைப்படுத்திக் கொண்டது என்பதை அறிந்தவர்கள் இதை மறுக்க மாட்டார்கள்.

வரட்டு மாக்ஸியமும் சந்தர்ப்பவாதப் போக்குகளான திரிபுவாதமும் இடது தீவிரவாதமும் திரும்பத் திரும்பத் தமது சீரழிவைப் பகிரங்கப்படுத்தி வந்துள்ளன. மாக்ஸிய லெனினிசம் எப்போதும் சமூக நீதி, சமூக விடுதலை, மக்கள் போராட்டம் என்ற விதமாக உறுதியுடன் செயற்பட்டு வந்துள்ளது.

மாக்ஸியம் தேசியவாதத்தையும் நிற வேறுபாட்டையும் மறுக்கிறது. அதனாலேயே தேசிய இன ஒடுக்கலுக்கும் நிற அடிப்படையிலான ஒடுக்குதலுக்கும் எதிராக மாக்ஸியத்தால் குரல் கொடுக்கவும் போராடவும் இயலுமாக இருந்துள்ளது. இந்த அடிப்படையிலேயே, மக்களுடைய சகல சமூக உரிமைகளையும் அது மதிக்கிறது. எனவே, நிற வெறியையும் தேசிய இன வெறியையும் விட எந்த வகையிலும் குறையாத கொடுமையான சாதியம் பற்றி மாக்ஸியம் எவ்வாறு வேறு விதமான நிலைப்பாட்டை எடுக்க முடியும்?

நிலவுடைமை உற்பத்தி முறை தகரும் போது சாதி முறையின் உற்பத்தி உறவுத்தளம் தகருகிறது. ஆயினும் சாதியம் ஒழிந்து விடுவதில்லை. ஏனெனில் தென்னாசியாவில் உற்பத்தி உறவுகள் முழுமையான முதலாளிய உற்பத்தி உறவுகளாக மாறவில்லை. நிலவுடைமைச் சமூகச் சிந்தனை இன்னமும் சமூகத்திற் பல மட்டங்களில் இறுக்கமாக உள்ளது. அதற்கு மேலாக, ஒரு பண்பாட்டு அடையாளமாகச் சாதி இருப்பது சாதி அடையாளத்தை மொழி, மத, பிரதேச வேறுபாடுகளை ஊடறுத்துச் செயற்படவும் அனுமதிக்கிறது.

எனவே சாதியத்திற்கு எதிரான போராட்டம் சாதியத்தின் இயங்குதளம் எதுவோ அதற்கேற்ப பொருளாதாரம், மனித உரிமை, சமூக நீதி, சமத்துவம் என்ற பல்வேறு பரிமாணங்களைக் கொண்டிருக்கும். சாதியத்துக்கு எதிரான போராட்டத்துக்கான வரட்டுச் சூத்திரம் எதுவும் இல்லை. இதுவே தீவிர தலித்தியத்தை மாக்ஸியத்தினின்று வேறுபடுத்துகிறது.

தலித்துக்கள் தொழிலாளி வர்க்க அடையாளத்தை ஏற்றால் தமது தலித்திய அடையாளத்தை இழந்து விடுவர் என்ற வாதங்கூட தமிழக தலித்துவவாதிகளால் முன் வைக்கப்பட்டுள்ளன. தலித் இலக்கியம் எழுத தலித்துக்களுக்கு மட்டுமே உரிமை உண்டு என்று வாதிக்கிறவர்கள் உள்ளனர். இவர்களால் இன்னமும் பிற சமூக முரண்பாட்டுக்கும் சாதி முரண்பாட்டுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை எவ்வாறு கையாளுவது என்பதில் தெளிவு இல்லாததாலேயே சாதியாற் தாழ்த்தப்பட்ட மக்களைப் பிற ஒடுக்கப்பட்ட மக்களிடமிருந்து தனிமைப்படுத்துவது மட்டுமன்றித் தலித்துக்கள் என்ற அடிப்படையிற் கூட ஒருமைப்பாட்டை உருவாக்க முடியாது சாதிகளாகப் பிளவுபட வழி செய்துள்ளார்கள்.

மாக்ஸிய லெனினிய வாதிகள் சாதியத்துக்கு எதிராகத் தொடர்ந்தும் போராடியே வந்துள்ளனர். இந்தப் போராட்ட வரலாறு இலங்கையில் தேசியவாதிகளால் மறைக்கப்பட்டு வந்துள்ளதில் அதிசயம் இல்லை. ஏனெனில் தமது தேவைகட்காகத் தாழ்த்தப்பட்ட மக்களைத் தங்களுடன் இணைப்பதற்கு அந்த மக்களின் விடுதலைக்காகப் போராடியவர்கள் தேசியவாதிகளல்ல என்ற உண்மையை மறைக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறே, தமிழகத்திற் கூட இடதுசாரி இயக்கம் சாதிய ஒடுக்குமுறைக்கெதிராக ஆற்றிய பங்கைப் புறக்கணித்துப் பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலிலும் தொழிற்சங்க அரசியலிலும் சீரழிந்துள்ளவர்களது தவறுகளை முதன்மைப்படுத்துவதே சில 'பெரியாரிய', தலித்திய புத்தி சீவிகளது தொழிலாகிவிட்டது.

மாக்ஸியவாதிகள், சாதியம் தானாகவே அழியும் என்று சும்மா இருக்க முடியாது. வர்க்கப் போராட்டம் அடிப்படையானது என்பதால் மற்றப் போராட்டம் எதுவும் தனது முக்கியத்தை இழந்துவிடாது. இது பற்றி மாக்ஸியத்தை வளர்த்தெடுத்த ஒவ்வொரு முன்வரிசைப் போராளியும் சிந்தனையாளரும் தெளிவாகவே இருந்து வந்துள்ளனர்.

நியாயமான போராட்டங்களை ஏதாவது சாக்குப் போக்குக் காட்டி நிராகரிப்பது சந்தர்ப்பவாதமே ஒழிய மாக்ஸியமல்ல. இலங்கையின் திரிபுவாதிகள் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் போது நடந்து கொண்ட முறை அவர்கள் பாட்டாளி வர்க்கச் சிந்தனையைக் கை விட்டதன் ஒரு அடையாளமே.

சாதியத்துக்கு எதிராக ஒரு பரந்துபட்ட வெகுசன இயக்கத்தை நடத்தி வெல்ல முடியும் என்பது வரலாற்று முக்கியமான ஒரு விடயம். இவ்விடயத்தில் இலங்கையின் மாக்ஸிய லெனினிசக் கம்யூனிஸ்ட்டுக்களது போராட்ட அனுபவம் முன்னுதாரணமானது. எனினும் மிகவும் வருந்தத்தக்க முறையில் இந்த அனுபவத்தை மறைக்கவும் திரிக்கவும் தேசியவாதிகளும் சில புதிய 'தலித்தியர்களும்' முனைப்பாக நிற்பதை நாம் காணலாம்.

இது தற்செயலானதல்ல. வரலாறு பற்றிய எந்த மறைப்பும் திரிப்பும் மழுப்பலும் என்றுமே தற்செயலானதல்ல. மாக்ஸிய - லெனினிச வாதிகளால் மட்டுமே வர்க்க நிலைப்பாட்டை விட்டுக் கொடாமல் சாதியத்துக்கு எதிரான போராட்டத்தை எதுவிதமான சமரசமுமின்றி முன்னெடுக்க முடியும் என்பதே இலங்கையின் போராட்ட வரலாறு தரும் பாடம். இது அவர்களுடைய பிழைப்பில் மண்ணைப் போட்டுவிடும் என்று அவர்கள் அஞ்சுகிறார்கள். அவர்களது நோக்கம் சாதியாற் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான அரசியல் ஆதிக்கத்தைத் தமது கைகட்குள் வைத்திருப்பது மட்டுமே. மற்றப்படி சாதிக் கலவரங்களில் கோஷமெழுப்புவதை விட இவர்களிடம் ஒரு விதமான போராட்ட அணுகுமுறையும் இல்லை.

சாதியமும் சாதிய ஒடுக்குமுறையும் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தின் வெற்றியால் மட்டும் இல்லாமற் போய்விடமாட்டா. ஒரு சமூகத்தில் புரையோடிக் கிடக்கிற நாற்றமெடுக்கும் சிந்தனை அச் சமூகத்தின் சீரழிவில் ஒரு பகுதியாகவே உள்ளது. எனவே சாதியத்துக்கும் சாதிய ஒடுக்குமுறைக்கும் எதிரான போராட்டம் பல வேறு தளங்களில் தொடர்ச்சியாக நடத்தப்பட்டாக வேண்டும்.

சாதியாற் தாழ்தப்பட்ட மக்கள் தமது வரலாற்றை மறக்கலாகாது. தமது ஒவ்வொரு போராட்டத்தையும் மீளவும் நினைவுபடுத்தி அதிலிருந்து புதிய பாடங்களைக் கற்க வேண்டும். சாதியத்தின் பிரச்சனைகட்கான ஒரே தீர்வு சாதி ஒழிப்பேதான். அது சமூக நடைமுறையில் சாதிப் பாகுபாடு, தீண்டாமை, ஒடுக்குமுறை, ஆதிக்கம் என்பனவற்றை எதிர்த்துப் போரிடுவதாகவும் சிந்தனைத் தளத்தில் சாதியத்தை நியாயப்படுத்தும் சமூகச் சிந்தனைகள் அனைத்தையும் மறுப்பதாகவும் அமைய வேண்டும். இதனைச் செய்வதற்கு மாக்ஸியத்தை விட்டால் வேறு வழி உண்டா என்று யாராலும் கூற முடியுமா?

தமிழகத் தலித்தியர்களது இயலாமையும் தடுமாற்றமும் மாக்ஸிய மறுப்பும் சாதியாற் தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டத்துக்கு என்ன செய்துள்ளது என்பதைக் கவனித்தால் வேறு விளக்கம் தேவைப்படாது.

# தமிழ்த் தேசியமும் குறுநலப் பித்தும் (8)

தமிழ்த் தேசியத்தின் முளையிலேயிருந்து தன்முனைப்பு என்பது மேலோங்கி வளர்ந்து விஷ விருட்சமாகியது. இத்தகைய தமிழ்த்தேசியம் என்பது சமூகரீதியிலே ஒடுக்கப்பட்ட மக்களைத் தனது கடைக்கண்ணால் கூடப் பார்ப்பதைத் தவிர்த்துக் கொண்டது.

ஏழ்மை, எளிமை, கருணை, அன்பு, தன்னடக்கம் என்பவற்றை மக்கள் மீது கொண்ட தலைவர்களையும், தொண்டர்களையும் காண்பது அரிதாகவே இருந்தது. மாறாக பண வருவாய், ஆடம்பரம், அடங்காத்தன்மை, அடியார் கூட்டம் என்பவற்றுடன் கூடிய ஆணவம் மிக்க தன்முனைப்பே தமிழ்த்தேசியத் தன்னடையாளமாகத் தன்னை முன்னிலைப்படுத்தியது.

இத்தன்முனைப்பின் தவிர்க்கவியலாப் பண்பாக அழுக்கற்ற - கசங்கலற்ற - ஆடை அணி பூண்டவர்களும் பட்டு வஸ்திரம் பூண்ட நகையலங்காரம் மிக்க நெஞ்சர்களுமாக விளங்கிய பண முதலைகளே தமிழ்த் தேசிய ஆத்மார்த்தத் தொண்டர்களாகவும் தலைவர்களாகவும் விளங்கினர்.

தமிழ்த் தேசியத்தின் தெரிவாக அலங்காரப் பிரியர்களும் ஆடம்பரத்தாசர்களும் அந்நியப் போகர்களுமே தேறினர் என்பதற்கு மேலால் அத்தகையவர்களால் புடைசூழப்பட்ட தோர் கூடாரமாகவே வளர்ச்சி பெற்றமை வரலாறாகும்.

'தொழிலாளி' என்ற அடையாளம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. 'தொழிற்சங்கம்' என்பது மேற்கத்தியச் சிந்தனை வெளிப்பாடு எனக்கருதி 'ரஷியாவில், சீனாவில் மழைபெய்தால் யாழ்ப்பாணத்தில் குடைப்பிடிப்பார்கள்' என்று தொழிலாளி, தொழிற்சங்கம் என்ற பதங்களை கேட்டதுமே துடித்தார்கள் பண முதலைகள்.

'முதலாளி' என்போரே சுத்தத்தமிழர் என வரைவிலக்கணப் படுத்தப்பட்டனர். பாராளுமன்ற சந்தர்ப்ப அரசியலில் முதலாளிமாரே ஆசனங்களைத் தீர்மானிக்கும் வல்லமை பெற்றோராவர்.

வட- கிழக்குப் பிரதேசமெங்கும் 1950களின் பின்னர் தொழிற்சாலைகள் உருவாகி வளர்ச்சி பெற்றபோது தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைக்கவும், இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள தொழிலாளர்களின் உரிமைகளை அனுபவிக்கவும் அனுமதிக்கப்படாமல் முதலாளிமார் தமிழ்த் தேசியத்தின் அரவணைப்பில் அடாவடித்தனம் புரிந்த வரலாறு மறக்கப்பட்டு விடக் கூடியதல்ல.

வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை, திருகோணமலைத் துறைமுகம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வல்வை நெசவாலை, யாழ் மாநகரசபை மில்க்வைற் சோப் தொழிற்சாலை, இலங்கை போக்குவரத்துச்சபை, பீடித் தொழிற்சாலைகள், சுருட்டுத் தொழிற்சாலைகள், சினிமாத் தியேட்டர்கள் எனத் தொழிலாளர் கூட்டம் வளர்ச்சி பெறத் தொடங்கியது.

தோழர்கள் தர்மகுலசிங்கம், துரைராஜசிங்கம் ஆகியோர் தனியார் பஸ் கம்பனித் தொழிலாளர் சங்கம், சுருட்டுத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றை அமைத்து அரும்பணியாற்றிய லங்காசமசமாஜக் கட்சியின் இடதுசாரியினராவர்.

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைமையில் தொழிலாளர்கள் அணி திரட்டப்பட்டனர். தோழர் நா. சண்முகதாசன் தலைமையில் சகல தொழிற்சாலைகளிலும் தொழிற்சங்கங்கள் அமைக்கப்பட்டுப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் தொழிற்சங்க உரிமை உட்படத் தொழிலாளர் கோரிக்கைக்கான போராட்டங்களில் தோழர்கள் நா. முத்தையா, சந்தியாப்பிள்ளை கே.ஏ.

**பணம் படைத்த முதலாளிகளே சுத்தத்தமிழர்கள்!**
**ஏழைத் தொழிலாளர் தமிழர் ஆகார்!**
**ஆதிக்கமே தமிழ்த்தேசிய ஆதார சுருதி!**

சுப்பிரமணியம் ஆகியோர் தமது தொழிலை இழந்தனர்.

வல்வை நெசவாலைத் தொழிற்சாலையில் தொழிலாளர் கோரிக்கைமீது நடந்த தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தை தடுத்து நிறுத்துவதற்காக தமிழ் முதலாளி அப்பகுதியின் நியாயாதிக்கத்துக்குரிய வல்வெட்டித்துறைப் பொலிசாரின் உதவியை நாடினர். அது மறுக்கப்படவே கே.கே.எஸ். பொலிசாரின் அடாத்தான நுழைவுடன் வல்வை நெசவாளர் போராட்டத்திற்கெதிராக தொழிலாளர் மீது தாக்குதல் ஏவப்பட்டது. இத்தாக்குதலில் தோழர் சி.கா. செந்திவேலும் வேலைநிறுத்த தொழிலாளர்களும் தாக்கப்பட்டனர். அப்போது வயல்களில் வேலை செய்த விவசாயிகள் திரண்டு

**செண்பகன்**

பொலிசாரைத் தாக்கி விரட்டியதைத் தொடர்ந்து அத்துமீறித் தலையிட்ட கே.கே.எஸ். பொலிஸ் சார்ஜன்ட் தனது துப்பாக்கியைப் பறிகொடுத்ததுடன் தற்கொலை செய்துகொண்ட சம்பவமும் நேர்ந்தது. வல்வை நெசவாலைத் தொழிலாளர் தமது உரிமைகளைப் பெற்றுக்கொண்டனர்.

மில்க்வைற் முதலாளியின் திருக்குறள் பிரச்சாரமும், பகவத்கீதை சுலோகங்களும் தொழிலாளரின் கடமைகளை வலியுறுத்தினவே தவிர தொழிற்சங்கத்தை அங்கீகரிக்க மறுத்ததுடன் தொழிற்சங்க உரிமைகளும் நிராகரிக்கப்பட்டன. இதற்கெதிராகவும் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் போராடி வெற்றிபெற்றமை வரலாறாகும். மில்க்வைற் முதலாளியின் 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்ற ஒற்றைவழிப் பிரச்சாரமே தமிழ்ப்பணியாகக் கணிக்கப்பட்டதே தவிர தொழிலாளர் என்ற சமூகத்தை தமிழ்த்தேசியம் கண்டுகொண்டதாகவே காட்டிக் கொள்ளவில்லை. இம்முதலாளிக்கே யாழ் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கியது.

யாழ் மாநகரசபைத் தொழிலாளரின் தொழிற்சங்க உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்தபோது தோழர்கள் சண் எம்.ஏ.சி.இக்பால், சி.கா. செந்திவேல், கா. பஞ்சலிங்கம் ஆகியோர் முன்னின்று வழி காட்டினர். அப்போது யாழ் மேயராக இருந்த அல்பிரட் துரையப்பா, நாகராஜா, விஸ்வநாதன் வரை தொழிலாளர்களை உதாசீனம் செய்தே செயற்பட்டனர். ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் வேலைநிறுத்தம் காரணமாக ஆஸ்பத்திரியிலிருந்தபடி தொழிலாளரின் கோரிக்கைக்கு உடன்பட்டு ஒப்பமிட நேர்ந்ததே தவிர தமிழ்த் தேசியத்தின் நிகழ்ச்சி நிரலிலே தொழிலாளர் என்ற வர்க்கத் தினரின் நலன் கவனத்துக் கெடுத்துக் கொள்ளப்படவில்லை.

அரசாங்க லிகிதர் சேவைச்சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம் என்பனவும் மாக்சீயக் கட்சியினரின் செல்வாக்கிலேயே உதயமாகின.

பின்னர் நாளடைவில் தமிழ்த்தேசியம் மத்தியதர வகுப்பாரின் மனோநிலைக்கேற்ப அவர்கள்மீது 'தொழிலாளர்' என்ற வரைவிலக்கணத்துக்குப்பால் 'உத்தியோகத்தர்' என்ற மேலாண்மையை உருவேற்றி ஊழியர், தொழிலாளர் என்ற பதம் வராதபடி 'தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கமாக' புடம்போடப்பட்டது. இலங்கை ஆசிரியர் சங்கத்துக்கு மாற்றீடாக 'தமிழாசிரியர் சங்கம்' உருவானது. இவை தமிழ் என்ற சொல்லை வைத்து சிலம்பமாடப்பட்டதே தவிர தொழிலாளர் என்ற வர்க்க சமூக உணர்வை மறுதலிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியேயாகும்.

தமிழ்த் தேசிய வரலாறு தனது 'உயர் வர்க்க குணாம்சக் கறுப்' களங்கப்படாமல் தன்னைப் பாதுகாத்துக் கொண்டதில் இதுவரை வெற்றி பெற்றுள்ளது.

தொழிலாளர் என தமிழர்களாகப் பிறந்து வாழ்வோரை இனந்தெரியாதவர்களாகவே தமிழ்த்தேசியம் கருதிவருவது இன்றுவரை அனுமன்வால்போல் நீண்டு வருகிறது.

பாராளுமன்ற வாக்களிப்பு முதல் சமகாலப் போராட்டம் வரை தமிழ்த் தேசியத்தின் முதுகெலும்பாக வர்த்தகர்சங்கங்களே விளங்குகின்றன.

வர்த்தகப் பண முதலாளிகளின் வாகனமும் காசும் கையாட்களுமே தமிழ்த் தேசியத்தின் காப்பாளர்களாகத் தம்மைக்காட்டி வருவதே நடைமுறையாகும்.

தொழிலாளர் என்போர் இன்னும் தமிழர்களாக அங்கீகரிக்கப்படவில்லை!

சமூகப்பற்று, மொழிப்பற்று, தேசியப்பற்று, நாட்டுப்பற்று, என்பவற்றுக்கு மேலாக பணத்தின் மீதான பற்றே சுத்தத் தமிழ் முதலாளிமாருக்குரியது. இச்சுத்தத் தமிழர்களிடம் சமூக-மானுட விடுதலையை எதிர்பார்க்கலாமா?

படிப்பகம்

www.padippakam.com



# தேசிய இனப்பிரச்சினைத் தீர்வில் மலையக மக்களின் தேசிய அபிலாஷைகள்

இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு மிடையில் சமாதான பேச்சுவார்த்தை களின் முதற்கட்டம் நிறைவேறியுள்ளது. மலையகத் தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் அவர்களுடைய சுயநிர்ணய உரிமை, சுயாட்சி, சமத்துவம் பற்றி நடைபெறுகின்ற பேச்சுவார்த்தையில் ஒரு அம்சமாக எடுக்கத் தேவையில்லை என்றும் மலையகத் தமிழ் மக்களின் இனத்துவ உரிமைகள் பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேசிக்கொள்ள முடியும் என்றும் சரளமான நிலைப் பாட்டை இ.தொ.க. கொண்டுள்ளது.


மலையகத் தமிழ் மக்களுக்கு தனியான மாகாணசபை வேண்டுமென்று கோரிக்கை விடுத்து வந்த ம.ம.மு மலையகத் தமிழர்களின் பிரச்சினை பற்றிய விடயங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமை பேச்சு வார்த்தையில் முன்வைக்க வேண்டு மென்று வேண்டுகோள் விடுத்துள்ளது. இது மிகவும் அடக்கமான நிலைப்பாடு.

மலையகத் தமிழ் மக்களின் மீதான இன ஒடுக்கலை பொத்தாம் பொதுவான தாகவோ மிகவும் சாதாரணமான தாகவோ கொள்ள முடியாது. ஆயுதப் போராட்டம் இலங்கைத் தமிழ்மக்களின் சார்பில் இலங்கை அரசிற்கு எதிராக நடத்தப்பட்டது என்பதால் தேசிய இனப்பிரச்சினை என்பது இலங்கை தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு மட்டும் வரையறுக்க முடியாது. மலையகத் தமிழ் மக்கள் யுத்தத்தின் நேரடியான கொடூரங்களைத் தவிர ஏனைய எல்லாவிதமான இன ஒடுக்கல் களுக்கும் முகம் கொடுத்தவர்களாவர். அவற்றுக்கு எதிராக குரல் எழுப்பியும் போராடியும் வந்துள்ளனர். அவர்களின் சார்பில் ஆயுதப்போராட்டமொன்று நடத்தப்படவில்லை என்பதற்காக அவர்களின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படக்கூடாது என்பது சரியான அணுகுமுறையாகாது.

இலங்கையில் தீர்க்கப்படவேண்டியது அடக்கப்படும் தேசிய இனங்களின் பிரச்சினையாகும். அவ்வாறெனின் இலங்கைத் தமிழர்கள். முஸ்லிம்கள் ஆகியோரின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பது நியாயமானதாகும். அதனைத் தீர்ப்பதற்கு தற்போது நடைபெறும் பேச்சுவார்த்தையில் பல விடயங்கள் முடிவெடுக்கப்பட வேண்டும். அந்தவகையில் நான்காவது தேசிய இனமான மலையகத் தமிழ் மக்கள் பற்றியும் பேச்சுவார்த்தையில் பேசப்பட வேண்டும் என்பதில் என்ன தவறு இருக்கிறது.

இனப்பிரச்சினை தீர்வுக்காக கடந்த காலத்தில் எடுக்கப்பட்ட முயற்சிகளில் மலையகத் தமிழ் மக்களுடைய பிரச்சினை பிரஜாவுரிமை பிரச்சினையாக மட்டுமே பார்க்கப்பட்டது. தற்போது நிலைமைகள் வளர்ச்சியடைந்துள்ளதால் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை யின் பகுதியாக அவர்களின் பிரச்சினை களும் மேலெழுந்து நிற்கின்றன என்ற யதார்த்தத்தை வலிந்து மறைக்க முற்படுவது நியாயமாகாது.

அவ்வாறான நிலைப்பாட்டை ஏற்காது சில தமிழ் அரசியல் தலைவர்கள் மலையகத் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை இப்பேச்சுவார்த்தையில் கதைப்பதற்கில்லை என்ற மேலாதிக்க பழமைவாத கருத்துக்களை வெளிப் படுத்தி வருகின்றனர். சில பத்திரிகை களும் ஆதிக்க நிலைச் செய்திகளை வெளியிட்டுள்ளன.



'என்ன உங்கட தலைவர் தாய்லாந்துல மலையக தமிழர் பிரச்சினை பற்றிப் பேசத்தேவையில்லை என்று கூறியிருக்கிறாரே'

'பின்ன என்ன அவரு சொன்னது சரிதானே. பிரச்சனை உள்ளவன் பேசுவான். காட்டுக்கையிருந்து உரிமைக்குப் போராடி 60.000 உயிர்களுக்கு மேல் இழந்த சமூகத்துக்கு நீதி கிடைத்தா எமக்குப் பெருமைதானே! சும்மா நாம அதுல போய் சொருக என்னகிடக்கு!!

## மலையக மக்களின் கோரிக்கைகள் ஆதிக்க நோக்கில் பார்க்கக்கூடாது

மலையகத் தமிழ் மக்களுடைய பிரச்சினையும் பேச்சுவார்த்தையில் இடம்பெற வேண்டும் என்பதை கேலி செய்யும் வகையில் சில பத்திரிகைகள் கேலிச்சித்திரங்களை பிரசுரித்துள்ளன. இது மலையகத் தமிழ் மக்களையும் அவர்களது பிரச்சினைகளையும் கேவலப்படுத்தும் நடவடிக்கை ஆகும். மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் பேச்சு வார்த்தை சந்தர்ப்பமாகக் கொள்ளப்பட வேண்டும் என்பது மலையகத் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கை ஆகும். அந்நியாயத்தை தற்போது பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கம் புரிந்து கொள்வதற்கு தடைகள் ஏதும் இருக்க முடியாது. மலையகத் தமிழ் மக்களுடைய பிரச்சினை என்பது வடக்கு கிழக்கிற்குள் உள்ளடக்கிவிட முடியாது. அது யதார்த்தமுமில்லை. உதாரணம் திம்புக் கோரிக்கைகளில் நான்காவது மலையக மக்கள் பற்றியதேயாகும்.

முன்பு, ஆரம்பத்திலிருந்து முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளும் கலந்துரை யாடப்பட வேண்டும் என்பது தட்டிக் கழிக்கப்பட்டே வந்தது. முஸ்லிம் மக்களின் உரிமைகள் பற்றியும் கதைக் கப்பட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கை தேசிய இன விடுதலை போராட்டத்திற்கு எதிரானதாகக்




காட்டப்பட்டது. தற்போது முஸ்லிம் மக்களுடைய பிரச்சினைகளை கதைக் காமல் விட முடியாது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது போன்ற நிலைதான் மலையக மக்கள் பற்றிய பிரச்சினையும் என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

பேரினவாதத்துடன் சமரசம் செய்து சரணடைந்து வாழ நினைப்பவர்களுக்கு மலையகத் தமிழ் மக்களின் பிரச்சினை பற்றி பேசக்கூடாது என்ற நிலைப் பாட்டுடன் இருப்பார்கள். மலையகத் தமிழ் மக்கள் மீது மேலாதிக்கம் செய்ய விரும்புவோரும் மலையகத் தமிழ் மக்களை இரண்டாம் தரமாகக் கருதும் தமிழ் ஆதிக்க அரசியல் பழமை வாதிகளும் அவர்களுக்கு ஆமாம் போடும் ஊடகங்களும் அவர்களைப் பொருட்டாகக் கொள்ளவில்லை என்பது கண்டிக்கத்தக்கதாகும்.

இந்நிலைப்பாடுகள் நடைமுறையில் இருக்கும் அரசியல் தலைமைகளுடன் சம்பந்தப்பட்ட விடயம். ஆனால் இத் தலைமைகள் மக்கள் நலன் மக்களின் அபிலாஷைகள் என்பதுடன் மக்களின் நேரடிப் பங்களிப்புடன் எப்போதும் முரண்பட்டே இருப்பார்கள். அதற்குப் பதிலாக சரியான கொள்கையைக் கையேற்று முன்செல்ல காலத்திற்கு காலம் மக்கள் நடவடிக்கையாளர்களும் நேர்மையான அரசியல் சக்திகளும் முன்வருவார்கள் என்பது திண்ணம்.

இன்றைய நிலையில் மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை உறுதி செய்துகொள்வதற்கான வேலைத்திட்டம் ஆகக்கூடிய பொது உடன்பாட்டுடன் முன்வைக்கப்பட்டு பாராளுமன்ற. தொழிற்சங்க சந்தர்ப்ப வாதங்களுக்கு அப்பால் அவற்றை வென்றெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நடைபெறுகின்ற பேச்சுவார்த்தையில் மேற்படி வேலைத்திட்டம் பற்றி கதைக்கப்பட வேண்டும் என்பதும் தேசிய இனப்பிரச்சினை தீர்வில் மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை உறுதி செய்யக்கூடிய திட்டங்களாக அவை சேர்க்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் காலம் தாழ்த்தாது எடுக்கப்பட வேண்டும். நாம் முன்பிருந்து வலியுறுத்தி வரும் சுயநிர்ணய உரிமை அடிப்படை யிலான சுயாட்சி உள்ளமைப்புக்கள் என்பதன் ஊடாக மலையகத் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகள் தீர்வாகக் கொள்ளப்படலாம் என்பது நமது கருத்தாகும். அவை விவாதித்து விரிவாக்கப்படலாம் என்பதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதேயாகும்.

# சோக்கலோ சண்முகநாதனின் உலக சாதனை

## ஒரு ஏழைக் கலைஞனை வாழ்த்துகின்றோம்

**பூமிதாசன்**



சோக்கல்லோ சண்முகநாதன் நாடறிந்த பல்துறைக் கலைஞர். சமூக அக்கறை மிகுந்தவர். சாதாரண மக்களை நேசிப்பவர். பாரதி பக்தனான அவரது வாழ்வும் சாதாரண ஏழை வாழ்வுதான். ஆற்றல் மிக்க அவருக்கு ஒரு ஆசை பிறந்தது. அதாவது தொடர்ச்சியாக ஏழரை மணித்தியாலங்கள் பேசி ஓர் உலக சாதனையை நிலைநாட்ட வேண்டும் என்பதாகும். ஏற்கனவே உலக கின்னஸ் புத்தகத்தில் நாலரை மணிநேரம் தொடர்ச்சியாகப் பேசியதாகவே பதிவு உண்டு. அவ்வாறு பேசியவர் கியூபாவின் தலைவர் பிடல் காஸ்ரோ. அப்பேச்சை அவர் சாதனைக்காகப் பேசவில்லை. காஸ்ரோ அதைவிட எட்டு, பத்து மணிநேரங்கள் கூட பேசியுள்ளார். ஆனால் கின்னஸ் குறிப்பு நாலரை மணிநேரத்தையே பதிவுசெய்து வைத்துள்ளது. சோக்கல்லோவின் நோக்கம் கின்னஸ் குறித்து வைத்துள்ள நேரத்தை விடக் கூடுதலாகப் பேசி பதிவு பெற வேண்டும் என்பதேயாகும்.

சோக்கல்லோ கடந்த 20-09-2002 காலை 9 மணி முதல் பி.ப. 4.40 வரை நின்ற நிலையில் 'நானும் தமிழும்' என்ற தலைப்பில் தொடர்ச்சியாகப் பேசி சாதனை நிகழ்த்தியிருக்கிறார். தனது பேச்சின் நாலரை மணித்தியாலம் சென்ற பின்பே சில சொட்டு நீர் அருந்தியிருந்தார். அன்றைய தினம் மூன்று பிரிவாக ஐந்து, ஐந்து நடுவர்கள் அவரது தொடர் பேச்சை அவதானித்தனர். பெருந்தொகையான பார்வையாளர்கள் அவரது கருத்தாள மும் நகைச்சுவையும் கொண்ட பேச்சை சலிக்காது செவிமடுத்தனர். ஊடகங்கள் கண்காணித்து சாதனையை ஒப்புக் கொண்டு பரப்புரை செய்தன. இந்நிகழ்வு கொழும்பு பெண்கள் கல்வி ஆய்வு நிலைய மண்டபத்தில் இடம் பெற்றது. தேசிய கலை இலக்கியப் பேரவை அனுசரனை வழங்கியது.

## கொழும்பு தமிழ்ச் சங்கம் தனது முகத்தில் கரி பூசிக் கொண்டது

அதன் இணைப்பாளர் சட்டத்தரணி சோ. தேவராஜா இதற்கு தலைமை தாங்கினார். சமூக. கலை. இலக்கிய. அரசியல் பிரமுகர்கள் கலந்து கொண்டு உற்சாகமளித்து சிறப்பித்தனர்.

இருந்தபோதிலும் சோக்கல்லோவின் உலக சாதனைக்கு குழி பறிக்க சில பிரகிருதிகள் 'திருமணத்தை நிறுத்த சீப்பை ஒழித்தது' போன்று நடந்து கொண்டமையை வெளிக்கொணராது விடமுடியாது. குறிப்பாக இச்சாதனை க்கு அனுசரணை வழங்கும்படியும் மண்டபத்தைத் தந்து உதவுமாறும் சோக்கல்லோ சண்முகநாதன் கொழும்பு தமிழ்ச் சங்கத்தை வேண்டிக் கொண்டார். முறைப்படி விண்ணப்பித் தார். அவரது விண்ணப்பப் பரிசீலனை இழுத்தடிக்கப்பட்டது. இறுதியில் அவரின் விண்ணப்பம் ஆட்சிக் குழுவில் பரிசீலிக்கப்பட்டது. அவர் ஏற்கனவே தமிழ்ச்சங்க ஆட்சிக் குழுவில் ஒரு உறுப்பினராக இருந்து வருபவர். ஆனாலும் அவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்ட வேளை அவரை வெளியே போகும்படி கேட்கப்பட்டது. அவரும் வெளியே சென்று தனது சாதனை முயற்சிக்கு தமிழ்ச்சங்கம் அனுசரணை. ஆதரவு வழங்கும் என்றே நம்பி இருந்தார். ஆனால் யாவும் ஏமாற்றம் தான். விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. நிராகரிப்பில் சற்சொருபமான அம்மையார், திருவான சுந்தரம், டாக்டரான ஜின்னா மூவரும் மும்முரம் காட்டினார்களாம். ஏதோ ஏதோ கேள்விகள் நியாயங்கள் கிளப்பி அவற்றுக்கு உரியவரிடம் மறுமொழி எதுவும் பெறாமலே விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. அனுபவம் கொண்ட தலைவர்கூட அந்த ஏழைக் கலைஞனுக்கு கருணை காட்டாது ஆதிக்க திமிர் கொண்டவர்களது கூற்றுக்கு தலை ஆட்டிக் கொண்டார். கொழும்புத் தமிழ்ச் சங்க மண்டபத்தை வாடகைக்குக் கூடக் கொடுப்பதற்கு நிர்வாகம் மறுத்துக் கொண்டது. என்னே ஆதிக்கம்! என்னே திமிர்த்தனம்!

இத்தனைக்கும் வசதி வாய்ப்பு அந்தஸ்து கொண்ட ஒரு மேட்டுக்குடித் தமிழர் இப்படி ஒரு உலக சாதனைக்கு முன் வந்திருந்தால் தமிழ்ச் சங்கத் தலைமை என்ன செய்திருக்கும். தலைகால் தெரியாத வேகத்தில் நின்று தடல் புடல் அனுசரணை ஆதரவு வழங்கி நடாத்தி யிருக்கும். மாலை தோரணங்கள் கட்டி பதாகைகள் தொங்கியிருந்திருக்கும். பட்டுவேட்டிகளும் காஞ்சிபுரம் சேலை களும் சலசலத்திருக்கும். பொட்டுப் பூச்சுகளும் பொங்கி வழிந்திருக்கும். அத்தர் பன்னீர் அமளியாய் மணத் திருக்கும். என்ன செய்வது சோக்கல்லோ சாதாரண ஏழைக் கலைஞராயிற்றே. தமிழ் என்றால் தமிழர் என்றால் சாதனை என்றால் அதற்குரியவர்கள் மேட்டுக்குடியினராக இருந்தால் மட்டுமே கொழும்புத் தமிழ்ச் சங்க கனவான்களும் சீமாட்டிகளும் ஆராத்தி எடுத்து நடத்து வார்கள். ஏனையோர் தமிழர் என்ற பதத்திற்குள் அடங்கமாட்டார்கள் என்பதை அந்த தமிழ்ச்சங்கம் மீண்டும் ஒருமுறை நிரூபித்து விட்டது.

இத்தகைய நிராகரிப்பின் பின்னணியி லேயேதான் தேசிய கலை இலக்கியப் பேரவை ஆற்றல் மிக்க அந்தக் கலைஞனின் முயற்சிக்கு கை கொடுத்து அனுசரணை வழங்கி உலக சாதனைக்கு ஒத்துழைப்பு வழங்கியது. தமிழ் ஊடகங்கள் இச்சாதனை பற்றி மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே செய்திகளை வெளியிட்டன. ஆங்கில சிங்கள ஊடகங்கள் கவனத்தில் கொள்ளவே இல்லை. ஒரு சிங்களவர் இதனை நிகழ்த்தியிருந்தால் அதன் பிரசாரம் மிகவும் பரந்ததாக இருந் திருக்கும். தமிழுக்காக மாய்வதாகக் கூறும் கனவான்களும் சீமாட்டிகளும் காண மறுக்கும் போது மற்றை யோரைக் குறை கூறிப் பயன் இல்லை. ஆனால் ஒரு விடயம் மட்டும் தெளிவா கியது. இன்றைய சமூக அமைப்பில் அந்தஸ்து. பணம், பதவி, இனம், சாதி, ஊர் என்பனவற்றைக் கொண்டுதான் யாவுமே அளக்கப்படுகின்றன என்பதைக் காண முடிந்தது.

எவ்வாறாயினும் உறுதியும் விடாமுயற்சி யும் கொண்ட கலைஞர் சோக்கல்லோ சண்முகநாதனின் உலகசாதனை நிலைநாட்டல் வரவேற்கத்தக்கதாகும் பாராட்டப்பட வேண்டியதாகும். சமூகப் பயன்பாடு மிக்கப் பணிகளில் அவரது ஆற்றல்கள் மேலும் பயன்பட வேண்டும் எனப் புதியபூமி வாழ்த்துகின்றது.

## போபால்.....

8ம் பக்க தொடர்ச்சி..

"யூனியன் கார்பைடு நிறுவனம். ஹாங்காங் நகரில் உள்ள அதன் கிளை நிறுவனம் மற்றும் ஆண்டர்சன் உள்ளிட்ட மூன்று வெளிநாட்டுக் குற்றவாளிகளின் மீது மையப் புலனாய்வுத் துறை இந்தியத் தண்டனைச் சட்டம் "304-பிரிவு எண்:2" ன் கீழ் தொடுத்த வழக்கை. உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு ஏற்ப "304-பிரிவு ஏ" ன் கீழ் மாற்ற வேண்டும்" என்ற மனுவை அத்வானியின் கீழ் இயங்கும் மைய புலனாய்வுத் துறை போபால் நகர முதன்மை நீதிபதியிடம் கொடுத்துவிட்டது.

"உலக வர்த்தக கட்டிடம் தகர்க்கப்பட்ட பின் உலகமே மாறிவிட்டது: மேலும். ஆண்டர்சன் மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்கின் கடுமையைக் குறைத்தால் தான். அவரை இந்தியாவிற்குப் பிடித்து வர முடியும்" என இந்தச் சமரசத்திற்கு சாக்கு போக்கு சொல்லுகிறது இந்து மதவெறிக் கும்பல்.

உலகில் உள்ள 'பயங்கரவாதிகளை எல்லாம் ஈவு இரக்கமற்ற விதத்தில் தண்டிக்க வேண்டும் என்பதுதான் செப்.11-க்குப் பிறகு இவர்கள் எடுத்துள்ள சபதம். ஆண்டர்சன் கூட பயங்கரவாதிதான். ஹிட்லர் விசவாயுவைச் செலுத்தி யூதர்களைக் கொன்றது போல, ஆண்டர்சன் விச வாயுவைக் கசிய விட்டு நாலாயிரம் போபால் நகரத்து மக்களைக் கொன்றிருக்கிறான்.

ராஜீவ் காந்தி என்ற தனி மனிதன் கொல்லப்பட்ட வழக்கில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள பிரபாகரனுக்குக் காட்டப்படாத சலுகை. போபால் விச வாயு படுகொலை வழக்கில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ள ஆண்டர்சனுக்கு மட்டும் காட்டப்படுவது ஏன்? பிரபாகரனை பிடித்து வர வேண்டும் என தேசபக்தக் கூச்சல் போடும் ஜெயா. இந்து நாளிதழ் போன்ற 'தேசிய' வாதிகள், ஆண்டர்சன் விசயத்தில் அடக்கி வாசிப்பது ஏன்?

இந்த 'தேச' பக்தர்கள் அனைவரும் அமெரிக்க அடிவருடிகள் என்பது தவிர. இதற்கு வேறு காரணம் எதுவும் கிடையாது. ஆண்டர்சன் மீதான வழக்கை நீர்த்துப் போகச் செய்ய முயலுவதன் மூலம். இந்த அமெரிக்க அடிவருடிக் கும்பல். இந்திய மக்களின் சுயமரியாதைக்குச் சவால் விட்டுள்ளது. எந்தவொரு பன்னாட்டு நிறுவனமும் இந்திய மக்களைச் சோதனைச்சாலை எலிகளாகப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனப் பச்சைக் கொடி காட்டியிருக்கிறது.

நன்றி : புதிய ஜனநாயகம்
ஆகஸ்ட் 2002.

படிப்பகம்

www.padippakam.com



# ‘கம்பவாரி’ ஜெயராஜ் பழமைவாதத்தின் புதிய வார்ப்பு

- ச. சுந்தரேசன் -




உலகம் பற்றிய கவலை இல்லாது, சமூக அக்கறையற்றவர்களாக இருந்த தமிழ்ப் பண்டிதர்கள் முற்போக்கு இலக்கிய வாதிகளின் கூழ் முட்டை அடியை தாங்க முடியாது அவர்களின் பழமை வாதத்தை பெட்டி கட்டி அண்மைக் காலம் வரை ஒதுங்கி யிருந்தனர்.

கூழ் முட்டைக்கெல்லாம் அஞ்ச மாட்டேன். அதெல்லாம் என்மீது மழை பெய்ததாகும் என்று கூறிக் கொண்டு தமிழ் பிற்போக்குத்தனம், பழமைவாதம், நிலப்பிரபுத்துவம் என்பவற்றின் இன்னொரு வார்ப்பாக முளைத்திருப்ப வர்தான் பழம் பண்டிதர் எனும் அகில இலங்கை கம்பன் கழக ஸ்தாபகர் ஜெயராஜ். அவர் கூறுவது போன்று பழைய தமிழ்ப் பண்டிதர்கள் போலன்றி கொழும்புக்கு இடம் பெயர்ந்து, யாழ்ப்பாணத்து சைவ-தமிழ் பழமைவாதம், பிற்போக்குத்தனம், நிலப் பிரபுத்துவம் போன்ற தனது கருத்துக் களுக்கு ஆவரணமாக பல கொழும்பு வாழ் வியாபாரிகள், உள்நாட்டு, வெளி நாட்டு பிற்போக்குவாதிகள் என்போரை யும் ஊதுகுழல் ஊடகங்களையும் கொண்டு மக்கள் கலை இலக்கியத் துடன் மோதுவதற்கு ஜெயராஜ் தயாராகியுள்ளார்.

போலி முற்போக்கு இலக்கியவாதிகள், முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ற பதாதையுடன் மிஞ்சி இருந்த சிலர், குறிப்பாக டொமினிக் ஜீவா, பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆகியோருடன் மோதி முற்போக்கு இலக்கியத்தையும் இடதுசாரிகளையும் அடித்து விட்டதாக ஜெயராஜ் உவகை கொண்டார்.

இவ்வகை ‘முற்போக்கு’ கலை இலக்கிய வாதிகளை தாக்குவதும் அதேவேளை அவர்களுடன் உறவு கொண்டாடுவதும் ஜெயராஜிற்கு இலகுவாக இருந்தது. இவ்வகை செத்த பாம்புகளை அடிப்பதையும், அவற்றுடன் உறவு கொண்டாடுவதையும் வழக்காக்க முயற்சித்த ஜெயராஜிற்கு உயிர்ப்புடன் இருக்கும் மக்கள் கலை இலக்கிய வாதிகள் பெரும் பிரச்சனையாக இருந்து வருகின்றனர். தேசிய கலை இலக்கியப் பேரவையினரும், அதன் ஆதரவாளர்களும், புதிய-ஜனநாயகக் கட்சியினரும் அதன் ஆதரவாளர்களும் அவர்களது நிகழ்ச்சிகளினூடாகவும், எழுத்துக்களினூடாகவும் ஜெயராஜின் கருத்தியல்களுக்கு பதிலிறுத்து வருவதால் ஜெயராஜ் முக்கித் திணறுகிறார்.

## கூழ் முட்டை அடியுடன் பெட்டி கட்டிய தமிழ்ப் பழைமைவாதம் மீண்டும் தலை நீட்டுகிறது.

ஜெயராஜின் பழமைவாத கருத்துக் களைச் சாடி புதிய பூமி வெளியிட்டிருந்த கட்டுரையிலிருந்து சில விடயங்கள் தினக்குரலில் பிரசுரிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து தினக்குரல் அதிபர் சாமியிடம் சென்றதுமல்லாமல், பழமைவாத கருத்தியலுக்கு ஆதரவான கொழும்பு வாழ் சில வியாபாரிகளுடன் தினக்குரல் ஆசிரியர் பீடத்திற்கு படை எடுத்து ஆசிரியர் பீட உறுப்பினர்களை மிரட்டும் வகையில் நடந்து கொண்டார். புதிய பூமியில் வெளிவந்த கருத்துக் களுக்கு சரியான பதிலெழுதவோ, தொடர்ச்சியாக அவை பற்றி விவாதிக்க வோ முடியாத ஜெயராஜ் தினக்குரலில் பிரசுரிக்கப்பட்ட புதிய பூமியில் வெளியான கருத்துக்களுக்கு தனது மறுப் பொன்றை மட்டுமே தினக்குரல் வெளி யிட வேண்டும் என்றும், அம்மறுப்புக்கு மீண்டும் யாரும் பதிலெழுத அனுமதிக்கப்படக் கூடாது என்றும் தினக்குரல் கம்பெனி அதிபர்கள் சபையி னூடாக தடை விதிக்கச் செய்தார். இது சரியான நேர்மையான முற்போக்கு வாதிகளின் கருத்திற்கு அவர் தொடை நடுங்கிப் போனதற்கு மட்டுமன்றி அவரின் ஜனநாயகப் பண்பாடற்ற அடா வடித்தனத்திற்கு எடுத்துக் காட்டாகும்.

இப்படியான பழம் பண்டிதர் ‘முற்போக்கு அடாவடித்தனம்’ பற்றி கூழ் முட்டை அடி பற்றியும் விமர்சிப்பது அர்த்தமற்றது. அவரது கருத்துக்கு எதிராக புதிய பூமியில் எழுதப்பட்டமைக்கு ‘வேறு விதமான நடவடிக்கைகளையும்’ தன்னால் எடுக்க முடியாமல் இல்லை என்று பகிரங்கமாகவே கூறியதிலிருந்து பழம் பண்டிதரின் கருணை உள்ளம் பறை சாற்றப்பட்டது.

பிழைப்பிற்காகவும் இருப்பிற்காகவும் கம்பராமாயணத்தையே சுற்றி சுற்றி வருபவருக்கு இலங்கை மக்களின் பண்பாட்டு யதார்த்தமாகிவிட்ட மக்கள் கலை இலக்கியம் பற்றி எதுவுமே தெரியாது, தரமான இலக்கியத்தைப் படைக்கும்படி மக்கள் எழுத்தாளர் களுக்கு சவால் விடுவது அற்பமானது.

ஜெயராஜ் தினக்குரல் பத்திரிகையில் பழம் பண்டிதரின் பகிரங்க கடிதங்கள் என்ற பத்தியை ஏறக்குறைய ஒரு வருட காலமாக எழுதினார். அவ்வெழுத்துக்களின் மூலம் அவரது நச்சுக் கருத்துக்களை வெளிப்படுத் தினார். யாழ்ப்பாண-சைவத் தமிழ் பழமைவாதத்தின் இன்னொரு வார்ப் பாக தன்னைப் பதித்துக் கொண்டார்.

அவர் தனது கம்பெனியின் பெயரில் தெரு விழாக்கள் நடத்துவதுடன் தற்போது எழுத்திலும், வெளியீட்டிலும் நாட்டம் கொண்டுள்ளார். அவர் தினக்குரலில் எழுதிய பழம் பண்டிதரின் பகிரங்க கடிதங்களை ஒரு நூலாக வெளியிட்டுள்ளார்.

சென்னையைச் சேர்ந்த பாலகுமாரன் என்பவர் அந்நூலுக்கு முன்னுரை எழுதியுள்ளார். அந்நூலில் இடம் பெற்றுள்ள கடிதங்களினூடே ஈழத்து மக்களின் வேதனைகளை அறிவதாக அந்த மனிதர் கூறியுள்ளார். அவ்வாறு கூறுவது கட்புலனில்லாத ஒருவர் யானையைப் பார்த்த கதையாகவே இருக்கிறது. இந்தியாவிலுள்ள முற்போக்கு எழுத்தாளரிடம் இருக்கும் தேடலை பிற்போக்கு எழுத்தாளர் களிடம் எதிர்பார்க்க முடியாதுதானே. இந்தியாவிலுள்ள பிற்போக்கு எழுத்தாளர்கள் எப்போதும் அவர்களது முடிபே சரி என்றும் அவர்களிடமிருந்தே நாம் எப்போதும் அனுபவங்களைப் பெற வேண்டுமென்றும், இலங்கையிலிருந்து அவர்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய அனுபவங்கள் எதுவுமே இல்லை என்ற இந்திய தேசிய அகங்காரத்தை கொண் டவர்களாவர். பாலகுமாரன் அவரது முன்னுரையில் அரிக்காத அல்லது கடிக்காத முதுகை சொறிந்திருக்கிறார்.

இந்தக் கடிதக் கட்டுரைகளில் உங்க ளுக்கு ஏதேனும் மாறுபாடான கருத்து

4ம் பக்கம் பார்க்க..

---

### போரும்....

6ம் பக்க தொடர்ச்சி..

கான முயற்சியைக் குழப்ப எடுக்கிற முயற்சிகளை அப்படியே அலட்சியம் செய்ய முடியாது. அவர்களது விஷமத்தனத்துக்கு எதிரான போராட்டம் பல்வேறு முனைகளில் மேற் கொள்ளப்பட்டாக வேண்டும்.

தென்னிலங்கையில் சனாதிபதியும் பொது சன முன்னணியும் ஜே.வி.பி.யும் செய்கின்ற காரியங்களின் தேசத் துரோகத் தன்மையை அம்பலப்படுத்து கிற அதேவேளை, யூஎன்.பி. ஆட்சி, அமைதியின் திரை மறைவில் நாட்டை அமெரிக்காவுக்கும் பன்னாட்டுக் கம்பெனிகட்கும் அடமானம் வைப்பதை தடுக்கிற போராட்டங்களிலும் முன்னிற்க வேண்டும். இதற்கு நேர்மையான இடதுசாரிகளும் ஜனநாயக சக்திகளும் அணி திரள வேண்டும்.

அமைதியை ஆதரிப்பதிலும் குழப்புவதிலும் அந்நிய மேலாதிக்கத் தலையீடும் உள்ளூர் கூலிப் படைகள் மூலமான சதி வேலைகளும் பற்றி மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டிய காலம் இதுவே.

நாட்டின் புனரமைப்புப் பணிகள் அமைதி வரும் வரை காத்திருக்கக் கூடாது என்ற நோர்வீஜிய பரிந்துரையை நாம் வரவேற்கும் அதேவேளை, புனர்வாழ்வு, புனர்நிர்மாணம், சமூகப் பணிகள் என்ற பேரில் பாதிக்கப்பட்ட மண்ணை ஊடுருவி மக்களை ஏய்த்து நாட்டை அந்நியருக்கு அடிமையாக்கக் காத்திருக்கிற பல்வேறு புல்லுருவிகள் பற்றி நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக, அந்நிய முதலீட்டாளர்கள் உதவி என்ற பேரில் கடனாக வழங்குவதைக் களவாகக் கொண்டு போகிற காரியம் பற்றியும் அரசு சாரா நிறுவனங்கள் என்ற பேரில் இயங்குகிற ஒட்டுண்ணி நிறுவனங் களையும் அவற்றின் உள்ளூர் முகவர்களையும் பற்றி நாம் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். ●

---

### மக்களை

8ம் பக்க தொடர்ச்சி..

தேவையாயிருக்கிறது. இன்னொன்று- ஓட்டுப் பொறுக்கிகள்-அதிகார வர்க்கம் -மடாதிபதிகளின் இவர்கள் ஒரு மா:ஃ பியா கும்பல் போல அத்வைத ஒன்று கலப்பில் சேர்ந்தே இயங்குகிறார்கள்.

திருவாவடுதுறை இளைய மடாதிபதி யைக் கைது செய்து காவல் நிலையத் தில் வைத்திருந்த எஸ்.பி. அடுத்து என்ன செய்வது என்று மேலிடத்தில் கேட்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏன் வந்தது? இந்த மடாதிபதி யோடு எந்த ஐ.ஏ.எஸ். அமைச்சர்கள் தொடர்பு இருக்குமோ என்று இயல்பிலேயே அந்த நட்பு வட்டத்தைப் புரிந்து கொண்டு நடவடிக்கை எடுக்கத் தயங்குகிறார். விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஈரோட்டு கூலித் தொழிலாளி புஷ்பாவுக்கோ உடனே பாலியல் பலாத்காரம் வரை போலீசு தண்டனையாக வழங்கி விடுகிறது. ஏன்? கிரிமினலாய் இருந் தாலும் ஆதீனம் ஆளும் வர்க்கத்திற்குக் கூட்டாளி. குற்றமற்றவராய் இருந்தாலும் புஷ்பம் கூலித் தொழிலாளி. அதுதான் பதி, பசு, (வர்க்க) பாசம்.

வர்க்க பாசம் மட்டுமா, சாதிப் பாசமும் கலந்து வருகிறது. பிரச்சனைகளுக் குள்ளான திருவாவடுதுறை மடத்தை சைவப்பிள்ளைமார் மடம் என்று எழுதும் பத்திரிகைகள், காஞ்சி மடத்தை பார்ப்பன மடம் என்று எழுதுவதில்லை யே ஏன்? அதுதான் ‘கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே’.

காசு செலவானாலும் நல்ல பிராண்டா போடு என்று கள்ளச் சாராயத்தை விடுத்து நல்ல சாராயத்திற்குத் தாவும் கும்பல் போல, சில பக்திமான்கள். அதுக்குத்தான் சார் என்ன இருந்தாலும் காஞ்சி சங்கராச்சாரி தான் கரெக்ட் என்று பிரமையில் ஆழ்ந்து போகிறார்கள். காஞ்சிமடம் இயக்கும் கல்லூரிகளில் பார்ப்பனார். பார்ப்பனாரல்லாதோருக்குத் தனித்தனிப் பந்தி போட்டு தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் சமூக விரோதிக்குப் பெயர் ஜகத்குரு.

இந்து சமயப் பணி என்ற பெயரில் இந்தியாவில் உள்ள அரசியல்வாதிகளும் தரகு வேலையில் ஈடுபட்டு ‘உனக்கு மத்திய இணை அமைச்சர், உனக்கு வட்டம், உனக்கு மாவட்டம்’ என்று அரசியல் புரோக்கர் வேலை செய்யும் காஞ்சி மடத்தின் ‘சமயத் தொண்டு’ இண்டியன் எக்ஸ்பிரஸில் மாய்ந்து மாய்ந்து ஆய்வுக் கட்டுரை எழுதும் அம்பிகளுக்குத் தெரியாதா என்ன? இருந்தாலும் தங்கள் சாதி பிராண்டைத் தூக்கிப் பிடிப்பதில் அப்படியொரு பத்திரிகா தர்மம். சங்கர மடத்தின் யோக்யதை என்ன? சொந்த மனைவி யோடு போகிறவருக்கும் ஆசி! அடுத்த வன் மனைவியோடு போகிறவனுக்கும் ஆசி! காமக் கொடூரன் சரவணபவன் அண்ணாச்சிக்கும் ஜயேந்திரர் ஆசி! ஒருவனுக்கு ஒருத்தி உத்தம இந்துவுக்கும் ஜயேந்திரர் ஆசி! மல்லையாவுக்கும் திறப்புவிழா ஆசி! சமஸ்கிருத பாடசாலைத் திறப்பு விழாவுக்கும் ஜயேந்திரர் ஆசி! மக்கள் யாரையெல்லாம் களவாணி, சாராயக் கடைக்காரன், பொறுக்கி அரசியல்வாதி என்று காறித் துப்புகிறார்களோ அனைவரும் சங்கராச்சாரியாரிடம் வரிசையாகப் போய்க் காலில் விழுகிறார் கள். இவர்கள் அனைவருக்கும் ஜயேந்திரர் ஆசி வழங்கும் மர்மம் என்ன?

அம்பானி நோய் வாய்ப்பட்டுக் கிடக்கையில் தனி விமானம் ஏறி அவசர அவசரமாகப் போய் சங்கராச்சாரி ஆசிர்வாதம் வழங்குகிறார். என்ன உறவு? 30 ஆண்டுகளில் குறுக்கு வழியில் பணக்காரனான குற்றவாளி அம்பானியுடன் சுவாமிகளுக்கு என்ன தொடர்போ?

ஜெயலலிதா போன்ற அரசியல் கழிசடை களை முதலமைச்சராக்கி விட்டார்களே என்பதை விட, கராத்தேவுக்கு மேயர் பதவியா என்பதைவிட, பாபா ரஜினிக்கு ரசிகர் மன்றங்களா என்பதை விட, மும்தாஜூக்கு இவ்வளவு செல்வாக்கா என்பதை விடக் கேவலமானது இந்த மடங்களும், மடாதிபதிகளும் நாட்டை ஆள்வது.

துப்பாக்கிகள் புடைசூழ ஆபாசப் படம் பார்த்துச் சிற்றின்பம் தேடுவதற்குப் பதில் பத்திரகிரயார் பாடியது போல "பட்டணம் சுற்றிப் பகலே திரிவோர்க்கு முட்டாக்கு ஏதுக்கடி" என்று பேசாமல் பப்ளிக்கா வந்து விடுங்கள்.

சொத்தின் காரணமாகக் கொலையாகி விடுவோம் என்று உயிர்ப்பயம் கொள்ளும் மடாதிபதிகளுக்கு உயிர் பிழைக்க ஒரே வழிதான் உண்டு. விவசாயிகளிடமிருந்து மடங்கள் பிடுங்கி வைத்திருக்கும் கிராமப்புறத்து நிலங்களை கூலி விவசாயிகளுக்கும், நகர்ப்புற ஏழைகளுக்கும் துறந்துவிட்டு, உண்மையிலேயே துறவி ஆவதுதான் அந்த ஒரே வழி. மறுத்தால் அவர்களை உண்மையான் துறவிகளாக்கும் பொறுப்பும் கடமையும் நம்மீது திணிக்கப்படும்போது நாம் மறுக்க முடியுமா என்ன?

**- சித்தன் -**

நன்றி : புதிய கலாச்சாரம்
ஆகஸ்ட் 2002.

---

### புரட்சிகர....

6ம் பக்க தொடர்ச்சி..

அரசியலில் இருந்து ஒதுங்கி விட்டனர். சிலர் மிகவும் சீரழிந்து விட்டனர். இடதுசாரி இயக்கத்தின் பெரும் பகுதி பாராளுமன்றப் பாதையைத் தெரிந்த தால் அதனோடு ஒட்டிச் சென்றவர்கள் பலர் அரசியலிலிருந்து ஒதுங்கினார்கள் அல்லது சீரழிந்தனர். மறுபுறம் சரியான புரட்சிகர நிலைப்பாட்டை எடுத்த சிலரும் கூட சீரழிந்தது பற்றி ஆழமாகக் கவனிக்க வேண்டிய விடயமாகும்.

இதற்கான காரணங்களுள் முக்கிய மான ஒன்று, இவர்களால் தங்களது புரட்சிகர அரசியலுக்கு ஏற்பட்ட பின்ன டைவுகட்கு முகங்கொடுக்க இயலாது போனமையே. இடதுசாரி இயக்கம் எழுச்சி கொண்ட நேரத்தில் தம்மை முன் வரிசைப் போராளிகளாகக் காட்டிக் கொண்டவர்கள் அதன் நலிவின் போது பின் தங்கத் தொடங்கினார்கள். 1977ம் ஆண்டு யூஎன்.பி. பெற்ற தேர்தல் வெற்றியின் பின் துவளத் தொடங்கியவர்களிற் சிலர் 1983ல் தேசியவாத நிழலில் தஞ்சம் புகுந்தார்கள். பின்னர் வெவ்வேறு காரணங்களால் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை மட்டுமன்றி மாக்ஸிய அரசியலையும் வெறுக்கத் தொடங்கினார்கள்.

இவர்களுக்குத் தாங்க இயலாமல் போன ஒரு விடயம் ஏதென்றால் கட்சிக் கட்டுப்பாடு சமரசமற்ற கொள்கைப் பிடிப்பு என்று உறுதியாக நின்றவர்கள் ஒரு கால் நூற்றாண்டு கடந்தும் அதே உறுதியுடன் அரசியலில் நிலை தடுமாறாமல் நிற்பதுதான்.

புரட்சிகரப் பொதுவுடமை இயக்கம் மறுபடியும் வீறு பெற்று எழுந்து விட்டால் அதில் தங்களுக்கு இடம் இராது என்று அஞ்சுகிற காரணத்தால் புரட்சிகர மாக்ஸியத்துக்குக் குழி பறிப்பதற்குத் தம்மாலான எதையும் செய்ய முற்படுகிற இவர்களது பலவீனம் ஏகாதிபத்தியத்துக்குச் சேவகம் செய்கிற என்.ஜீ.ஓ.க்களுக்கு மிக வாய்ப்பாகி விட்டது. தொன்னைக்கு நெய் ஆதாரம் நெய்க்குத் தொன்னை ஆதாரம் என்கிற மாதிரி என்.ஜீ.ஓ.க்களுக்கு இவர்களது முன்னாள் இடதுசாரி அடையாளம் பயன்படுகிறது. இவர் களுக்கு என்.ஜீ.ஓ. பணம் பயன்படுகிறது.

இந்த விதமாகப் புத்திஜீவிகள் உதிரிகளாகிச் சீரழிய ஒரு முக்கியமான காரணம் அவர்களது தனி நபர் வாதம். கட்சிகளையும் இயக்கங்களையும் சார்ந்தும் பொதுமக்களது நலன்கட்குச் சார்பாகப் பிரச்சனைகளை அணுக இயலாதபோது. புத்திஜீவிகள் பிழைப்புவாதிகளாகவும் முடிவில் உதிரிகளாகவும் சீரழிகின்றனர்.

இதிலின்று மீள்வதனால் விமர்சனம்-சுயவிமர்சனம் என்ற நடைமுறைக்கு இவர்கள் பயிற்றப்பட்டாக வேண்டும். தாங்கள் தவறு என்றுமே செய்யாத வர்கள் என்று நினைக்கிற புத்திஜீவி கட்கு இது இயலாதது. இதை முன்னாள் இடதுசாரிகளிடம் மட்டு மன்றி விடுதலை இயக்கங்களின் முன்னாள் மூளைகளிடமும் காணலாம்.

புத்திஜீவிகளைச் சமூகப் பயனுள்ள வர்களாக உருவாக்குவது இடதுசாரி இயக்கத்தின் பணிகளில் ஒன்று. புத்திஜீவிகளது அணுகுமுறையை ஆரோக்கியமான திசையில் வளர்த் தெடுக்காமல் புத்திஜீவிகளிடமே எல்லா அறிவும் உள்ளது என்ற அணுகு முறையைக் கடைப்பிடிக்கும் போது புத்திஜீவிகளும் நன்மை காணமாட்டார் கள் புரட்சிகர இயக்கமும் நன்மை காணாது. சுரண்டும் வர்க்கச் சிந்தனை யைத் தூக்கியெறிவது என்பது ஏட்டுப் படிப்பாலும் வெறும் வார்த்தை களாலும் இயலுமாவதல்ல. அது தொடர்ச்சியான அரசியற் செயற் பாட்டின் மூலமே இயலுமாவது. புரட்சிகர இயக்கத்தால் புத்திஜீவிகள் வழிநடத்தப் பட வேண்டுமே ஒழிய புத்திஜீவிகளால் புரட்சிகர இயக்கம் வழிநடத்தப்படக் கூடாது. ●

---

### *கல்விப்பணிப்பாளர்*

4ம் பக்க தொடர்ச்சி...

கண்டி கல்விப்பணிமனையில் உட்கார்ந்திருக்கக்கூட ஒரு ஒழுங்கான இடம் இல்லாமல் இருக்கும்.‘மேலதிகக் கல்விப் பணிப்பாளர்’ என்ற ஆதங்கத்தில் பேசுகின்றீர்களோ தெரியாது. அப்படியானால் நீங்கள் பாவம்!

வட்டிக்குக் கடன் கொடுத்து ஏழைத் தோட்டத் தொழிலாளர்களின் வீட்டுத் தோட்டங்களைக்கூட அபகரித்து பண்ணையாளர்களாய், பணக்காரர்களாய் ஆனவர்கள் நாங்கள் இல்லை. நாங்கள் சாதாரண தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள்.

கல்விக்காக ஒதுக்கப்பட்ட காசை களவாடியதும் கிடையாது. யாருடைய வாலையாவது பிடித்து பதவிக்கு வரவும் இல்லை.

யாருக்கும் அடிமை விசுவாசம் காட்ட வேண்டும் என்பதோ யாரினது தயவாலேனும் ஒரு பதவியை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதோ எங்களுக்கில்லை. மானமும் ரோசமும் எங்களுக்குண்டு. காலம் பதில் சொல்லும் காத்திருப்போம் என்போரும் நாமில்லை. இந்த மலைகளில் எங்கோ ஒரு மூலையில் அக்கினிக் குஞ்சுகள் எரியும். சுட்டபின் சொல்லாதீர்கள் இவை பண்பாடற்றவை என. இதை இப்போதே சொல்லிவைக்கிறேன் புரிந்து கொண்டால் சரி.

கோபப்படாமல், பதில் எழுத நினைத்தால் எழுதுங்கள்! உண்மை வெளிவரும். நீங்களும் நன்மையடைவீர்கள். நன்றி

இங்ஙனம் உண்மையுடன்

**மஸ்கெலியா மூர்த்தி**

படிப்பகம்

www.padippakam.com



புதிய பூமி
புதிய பூமி
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
PUTHIYA POOMI
சுற்று 09 ஒக்ரோபர் 2002 பக்கம் 12 விலை 10/- சுழற்சி 51

## தோழர் கார்த்திகேசனின் 25வது வருட நினைவு

இலங்கையின் பொதுவுடமை இயக்க முன்னோடிகளில் ஒருவரும் வடபுலத்தில் பொதுவுடமைக் கட்சியின் முதலாவது அமைப்பு விதையை ஊன்றி, அதனை வளர்த்தெடுக்க தனது வாழ்நாளை அர்ப்பணித்தவர் தோழர் மு. கார்த்திகேசன். அதேவேளை தனது மார்க்சிச, லெனினிச மாஓசேதுங் சிந்தனை நிலை நின்று கல்வி சமூகத்தளங்களில் பங்களிப்பை வழங்கியவர் தோழர் கார்த்திகேசன். அவர் மறைவின் 25வது வருட நினைவு தினம் கடந்த செப்டம்பர் 10ம் திகதியாகும். தோழர் மு. கார்த்திகேசனுக்கு எமது புரட்சிகர நினைவு அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பத்து மாத கால ஐ.தே.மு ஆட்சியில்
# பெருகிவரும் ஊழலும் மோசடிகளும்

பத்து மாத ஆட்சியில் ஐ.தே. மு. அரசியல்வாதிகளின் பலவிதமான மோசடிகள் அம்பலத்துக்கு வந்துள்ளன. அமைச்சர்கள். எம்பிக்கள் பொதுப் பணத்தை விரயம் பண்ணுவது தொடக்கம் பலவிதமான பிறழ்வு நடவடிக்கைகள் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

பெருந்தோட்ட அமைச்சர் லக்ஷ்மன் கிரியல்ல அவரது பாவனைக்கென வாடகைக்கு வாகனமொன்றை தனியாரிடமிருந்து பெற்றுள்ளார். அதற்காக 90 ஆயிரம் ரூபாவை மாதாந்த வாடகையாக செலுத்துவதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு இன்னும் சில அமைச்சர்களும் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி பெருந்தொகையான அரச பணத்தை வாடகையாக செலுத்தி வருவதாகவும் தெரியவந்துள்ளது. அவர்களுக்கென அரசாங்கம் கொடுக்கும் வாகனங்களைப் பாவித்தால் இவ்வாறு பெருந்தொகைப் பணத்தை கைவிடவேண்டி வராது.

வர்த்தக. நுகர்வோர் விவகார அமைச்சின் இறக்குமதி நடவடிக்கைகளாலும் சில வர்த்தகர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளாலும் அவர்கள் பெருந்தொகையான பணத்தை லாபமாகப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மோசமான நடவடிக்கைகளினாலேயே அவ்வாறு லாபம் சம்பாதிக்கப்பட்டதாக தெரிகிறது.

யாழ்ப்பாணத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொலைபேசி இணைப்புக்களை வழங்குவதிலும் மோசடி நடப்பதாக பேசப்படுகிறது. அதாவது தொலைபேசி இணைப்புக்களை பெறவிருப்பவர்கள் மேலதிகமாக கொடுப்பனவுகளை அரசாங்க 'அரசியல்வாதிகளுக்குக் கொடுக்க வேண்டி இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடமாகாண புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான ஒப்பந்த வேலைகள் அமைச்சரின் உறவினர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கும் முல்லைத் தீவுக்குமான பிரதான வீதியை அமைப்பதற்கான ஒப்பந்தவேலை அமைச்சரது உறவினரின் கம்பனிக்கு எவ்வித கேள்வியறிவித்தலுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று மதுபான நிலையங்களை நடத்துவபவர்களிடமிருந்து பெருந்தொகைப் பணத்தை கமிஷனாக சில அரசியல்வாதிகள் பெற்றுவருகின்றனர். கொழும்பில் சில மதுபான நிலையங்கள் பௌர்ணமி தினங்களிலும் திறந்து வைக்கப்பட்டுள்ளன. தடையையும் மீறி எந்நாளும் திறந்து வைத்திருக்கும் மதுபான நிலைய உரிமையாளர்கள் ஒரு நிலையத்திற்கு ஒரு மாதத்திற்கு ஒரு லட்சம் வீதம் ஒரு ஆளுங்கட்சி அரசியல்வாதிக்கு கமிஷனாகக் கொடுத்துவருகின்றனராம். அரசாங்கக் காணி விற்பனையில் நடந்த மோசடிகளில் அமைச்சர் ஜீ.எல். பீரிசின் பெயரும் அடிபட்டது தெரிந்ததே.

இவை ஐ.தே.மு அரசாங்க காலத்தில் மட்டும் நடப்பவைகள் அல்ல. ஆளும் கட்சியாக வந்தவுடன் எல்லா கட்சி அரசியல்வாதிகளும் மோசடிகளில் ஈடுபடுவதும் பிழையான வழிகளில் பணத்தைச் சம்பாதிப்பதும் வழக்கமானதே. முதலாளித்துவ ஆட்சியின் பிரிக்க முடியாத அம்சங்களாக இவை இருக்கின்றன.

ஆனால் ஒரு கட்சியின் மோசடிகள் பற்றி இன்னொரு கட்சி பேசுவதும் மோசடிகளில் ஈடுபடுவதாக ஒரு கட்சியினர் இன்னொரு கட்சியினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதும்தான் வேடிக்கையாக இருக்கிறது.

நூறு நாட்கள் துரித அபிவிருத்திகள் போன்று நூறு நாட்களில் நடைபெற்ற மோசடிகளையும் பட்டியலிடக்கூடிய சாதனைகளாகக் கொள்ளமுடியும்.

பொதுமக்களுக்குச் சொந்தமான அரச சொத்துக்களையும் அரச பணத்தையும் தனிப்பட்டவர்கள் அபகரித்து சுகபோகமாக வாழ்வதும் முதலாளித்துவ அரசியல் பண்பாடாகும்.

அவற்றிற்கு எதிராக சரியான அரசியல் ரீதியாக மக்களின் எதிர்ப்பியக்கங்களை முன்னெடுப்பதன் மூலமே அவ்வாறான மோசடிகளைத் தடுத்து நிறுத்தலாம்.

ஏற்கனவே 17 வருட ஆட்சியில் மக்கள் பட்ட கஷ்டங்களை மீண்டும் ஞாபகப் படுத்திப் பார்ப்பது அவசியமாகிறது. ஐ.தே.மு அரசாங்கம் சமாதான முயற்சிகள் முன்னெடுத்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் என்றுமில்லாதவாறு எரிபொருட்கள். அத்தியாவசியப் பொருட்கள் என்பவற்றின் விலைகள் அதிகரித்திருப்பதும் போக்குவரத்து கட்டணங்கள் அதிகரித்திருப்பதும் மக்களை மேலும் மேலும் கஷ்டத்திற்குள்ளாக்கி விடுகிறது.

அபிவிருத்தி நடவடிக்கைகள் என்று கூறியபோதும் அரசாங்கத்திடம் பணமில்லை அடுத்த வரவு செலவுத் திட்டம் மேலும் சுமைகளை மக்கள் மீது சுமத்தப் போவதை முன்னுணர முடிகிறது. இவ்வாறான நிலைமைகளில் மோசடிகளும் அதிகரித்து வருவது மக்களுக்கு விமோசனந் தரக்கூடியதாக இராது.

### சிறையில் உள்ளோரை

1ம் பக்க தொடர்ச்சி...

காரணமான பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படல் வேண்டும். இச்சட்டம் தமிழர்களுக்கு மட்டுமன்றி சிங்கள மக்களுக்கும் ஏற்கனவே கொடுமையிழைத்த சட்டமாகும். அவசரக்காலச் சட்டம் அற்றுப்போன நிலையில் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடக்கூடியதாக இருந்தது. அவ்வாறு பயங்கரவாத தடைச்சட்டமும் நீக்கப்பட்டால் மக்களுக்குப் பெரும் ஆறுதலாக அமையும். ஆனால் பேரினவாத ஆளும் வர்க்கம் அவ் அடக்குமுறைச் சட்டத்தை நீடிக்கவே விரும்புகிறது. மக்கள் இயக்கத்தால் மட்டுமே அதனை நீக்குவிக்க முடியும்.

### இந்தியா

1ம் பக்க தொடர்ச்சி..

இணைந்ததாகவும் பாதுகாப்பைப் பலப்படுத்துவது என்ற பெயரில் ராணுவ உதவி. ஒத்துழைப்பு பயிற்சி என்பனவற்றை வழங்குவதில் துரிதப்பட்டு நிற்பதை அவதானிக்க முடிகின்றது. ஒரு புறத்தில் பேச்சுவார்த்தை மூலம் சமாதானம் வருவதை ஆதரிப்பதாகக் கூறுகிறது அமெரிக்கா. மறுபுறம் ராணுவத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது. இன்றைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அமெரிக்கா இலங்கைக்குள் புகுந்து தன்னை நிலைப்படுத்திக் கொள்வதில் அதிக அக்கறைக் காட்டி வருகின்றது. பலாலி படைத்தளமும், திருகோணமலைத் துறைமுகமும், மற்றும் நாட்டின் கேந்திர நிலையங்களும் அமெரிக்கப் பார்வையில் நிலைக்குத்தியுள்ளன. இதன் மூலம் முழு இலங்கை மக்களின் சுதந்திரம் சுயாதிபத்தியத்திற்கு அபாயம் ஏற்பட்டுள்ளது. அதேவேளை குறிப்பாக சுயநிர்ணய உரிமைக்காகப் போராடி வரும் தமிழ் மக்களை மறைமுகமாக அச்சுறுத்தி அடிபணிந்து போகச்செய்யும் உள்ளார்ந்த செயலை அமெரிக்கா செய்து வருகின்றனதக் காண இயலுமாகிறது. எனவே நடைபெற்று வரும் பேச்சுவார்த்தை அமெரிக்காவின் விருப்பு வெறுப்புக்கும் அதன் தேவைகளுக்குமாக அமைந்து கொள்ளக் கூடாது என்பதில் தமிழ் மக்கள் முன்னெச்சரிக்கையாக இருப்பது அவசியம். இவ்விடயத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தூரநோக்குடன் இருப்பது தேவையாகும். ●

### 19வது

1ம் பக்க தொடர்ச்சி..

போடு வதற்காக அவருக்கு ஆத்திர மூட்டி பாராளுமன்றத்தைக் கலைக்கச் செய்வதை நோக்கமாகக் கொண்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன்பு பாராளுமன்றத்திலே ஐ.தே.மு தீர்மானத்தை கொண்டு வந்து கலைப்பதற்கு சாத்தியமான வழிவகைகள் பற்றி ஐ.தே.கட்சி ஆராய்வதாக ஒரு சில மாதங்களுக்கு முன்பே செய்திகள் வெளியாகி இருந்தன. ஐ.தே.முன்னணியே கலைத்தால் அதன் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பகைமையைத் தேடவேண்டி வரும் என்பதாலும் நாட்டு மக்களிடம் எதிர்ப்புணர்வு ஏற்படும் என்பதாலும் அந்த யோசனையை கைவிட்டிருந்தது.

இதனோடு 19வது திருத்தச்சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதையும் தொடர்புபடுத்தி பார்க்கின்ற போது, பாராளுமன்றத்தைக் கலைக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை ஜனாதிபதியை ஆத்திரமூட்டி செய்வித்துக்கொள்ள ஐ.தே.மு தலைமை விரும்புவதாகவே தெரிகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் சில எம்.பிக்களின் ஆதரவையும் பெற்று 19வது திருத்தச் சட்டத்தை நிறைவேறுமாக இருந்தால் ஆட்சியை நீடிக்கும் ஐ.தே. கட்சியின் நோக்கம் நிறைவேற்றப்படும். அதனால் இலங்கையை தொடர்ச்சியான ஐ.தே. கட்சியே ஆளும். இருண்டயுகத்தை மீண்டும் தோற்றுவிக்கும் ஐ.தே. கட்சி தலைமையின் தேவை நிறைவேறும்.

### துண்டுப் பிரசுர விநியோக இயக்கம்

தாய்லாந்து பேச்சுவார்த்தை ஆரம்பித்த செப்டம்பர் 16ம் திகதி அன்று புதிய ஜனநாயகக் கட்சி வடபுலத்தில் துண்டுப் பிரசுர விநியோக இயக்கத்தை நடாத்தியது. "தாய்லாந்துப் பேச்சுவார்த்தையை வரவேற்போம்! நியாயமான அரசியல் தீர்வை வற்புறுத்துவோம்! அமெரிக்காவின் தலையீட்டை எதிர்ப்போம்!" என்னும் தலைப்பிலான பத்தாயிரம் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இவ் இயக்கத்தை கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல். வடபிரதேச செயலாளர் கா. கதிர்காமநாதன். அரசியல்குழு உறுப்பினர் சி. நவரத்தினம். அரசியல்குழு உறுப்பினரும் 'தாயகம்' சஞ்சிகையின் ஆசிரியருமான க. தணிகாசலம் ஆகியோர் யாழ் நகர பஸ் நிலையத்திலிருந்து ஆரம்பித்து வைத்தனர். பெருமளவிலான கட்சி வாலிபர் இயக்க உறுப்பினர்கள் இத்துண்டுப் பிரசுரங்களை மக்கள் மத்தியில் விநியோகித்து ஏனைய பிரதேசங்களுக்கும் விரிவுபடுத்தினர். இவ் இயக்கத்திற்கு முதல் நாள் கட்சியின் யாழ்ப்பாணச் அலுவலகத்தில் 'சமாதானப் பேச்சுவார்த்தையும் மக்களின் நிலைப்பாடும்' என்னும் தலைப்பில் கருத்தரங்கும் கலந்துரையாடலும் இடம்பெற்றது. பிரதான உரையை தோழர் சி.கா. செந்திவேல் நிகழ்த்தினார். தோழர் கா. கதிர்காமநாதன் தலைமை தாங்கினார்.

## தோட்டங்களை மீண்டும் அரசாங்கம் பொறுப்பேற்குமா?

அண்மையில் ஒப்புக்கொள்ளப்பட்ட சம்பள உயர்வை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கினால் தமக்கு நட்டம் ஏற்படும் என்றும் அவைகள் நிர்வகிக்கும் தோட்டங்களை அரசாங்கம் மீண்டும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்றும் நான்கு தோட்டக் கம்பெனிகள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்கு கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிய வருகிறது.

கஹவத்தை. மத்துரட்ட. எல்பிட்டிய. உடப்புஸ்ஸலாவை தோட்டக் கம்பெனிகளே மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளதாக தெரிய வருகிறது. இக்கம்பெனிகள் 96 தேயிலை. றப்பர் தோட்டங்களை நிர்வகித்து வருகின்றன.

அத்துடன் இன்றுவரை மக்கள் பெருந்தோட்ட சபை, அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் என்பவை நிர்வகித்து வரும் தோட்டங்களில் 41ஐ தனியார் கம்பெனிகளுக்கு ஒப்படைக்க கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதும் இதுவரை ஒரு தனியார் கம்பெனியும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவில்லை. இதன் மூலம் தனியார் தோட்டக் கம்பெனிகள் அரசாங்கத்திற்கும் அழுத்தம் கொடுக்க முன் வந்துள்ளன.

மேலே குறிப்பிட்ட 4 கம்பெனிகளும் அண்மையில் ஒத்துக்கொள்ளப்பட்ட சம்பளத்தை வழங்க முடியாது என்றும் கருத்து தெரிவிக்கின்றன.

தோட்டத் தொழிலாளர்களுக்குரிய சம்பள உயர்வை வழங்கி தோட்டங்களை நடத்த முடியாவிட்டால் மீண்டும் அவற்றை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விட்டு வெளியேற வேண்டும் என்ற நியாயமான கோரிக்கை தொழிலாளர்களின் சார்பில் விடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய நிலையில் அக் கோரிக்கையை பலமான குரலாக்கி தோட்டங்களை கூட்டுறவு முறையில் நிர்வகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அதாவது அரசாங்கமும். தொழிலாளர்களும் சிறிதளவு முதலிடக் கூடிய அக்கறையுள்ள தனியாரும் பங்களிக்கும் வகையில் கூட்டுறவு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு தோட்டங்களை நிர்வகிக்க முடியும். கூட்டுப் பண்ணை அடிப்படையில் தோட்டங்களை நிர்வகித்து பெருந்தோட்டத் தொழிலையும். தொழிலாளர்களையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

பெருந்தோட்டங்களை தனியார் கம்பெனிகளிடமிருந்து மீட்டெடுத்து கூட்டுறவு அமைப்புகளின் கீழ் தோட்டங்களை நிர்வகிக்க அழுத்தங்களை கொடுக்கும் மக்கள் இயக்கங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

## மின்சாரசபை தனியார் மயமாகும் அபாயம்!

இலங்கை மின்சாரசபை அரசாங்க உடமையாக இருந்து வந்தது. இதனைத் தனியார் மயப்படுத்துவதன் மூலம் அந்நிய பல்தேசியக் கம்பனிகளின் கைகளில் ஒப்படைக்க ஐ.தே.மு. அரசாங்கம் முன்வந்திருக்கிறது. நஷ்டம் என்பதைக் காரணம் காட்டியே இத் தனியார் மயத்திற்கு முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு தனியார் காரணங்கள் நஷ்டம். ஊழல். நிர்வாக் சீர்கேடு என்றே காரணப் பஜனைப் பாடப்படுகிறது. மின்சார சபையைக் கலைத்து தனித்தனியான எட்டு கம்பனிகளாக்கும் சட்டமூலம் கொண்டுவரப்படவிருக்கிறது. அதன் மூலம் இந்த எட்டுக் கம்பனிகளையும அந்நிய பல்தேசியக் கம்பனிகளுக்கு ஒப்படைக்கலாம். அதன்மூலம் மின்சாரம் பெருகி வழிந்தோடும் எனச் சிலர் கனவு காண்கின்றனர். அக்கம்பனிகள் சுற்றுச் சூழலையும் மனிதர்களது வாழ்வு ஆரோக்கியத்தையும் கணக்கில் கொள்ளாது அனல்-நீர் மின்னுற்பத்தித் திட்டங்களைக் கட்டிக் கொள்வர். அதன்மூலம் மின்சாரத்தை மக்களுக்கு கொள்ளை விலையில் கட்டணமாக விற்று பெற்றுக்கொள்வார்கள். தனியார் மயத்தின் அடிப்படை நோக்கு எங்கும் எதிலும் கொள்ளை லாபம் என்பதேயாகும். இதற்கு மின்சாரசபை பலியாக்கப்படுகிறது. தனியார் மயமாக்கலுக்கு இணங்கினால் ஆசிய அபிவிருத்தி வங்கி 3 பில்லியன் ரூபாவினை மின்சார சபைக்கு வழங்க முன்வந்துள்ளது என்றும் அறிய முடிகின்றது. உலக மயமாதல் திட்டத்திற்கு ஏற்றவாறு சகலவற்றையும் தனியார் மயமாக்கும் திட்டத்திற்கு சர்வதேச நாணய நிதியம். உலக வங்கி. ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன வழகாட்டி நிற்கின்றன. ஏகாதிபத்திய விசுவாச அடிவருடி நிற்கும் ஐ.தே.மு. அரசாங்கம் அதற்கு ஆமாம் போட்டு செயல்பட்டு வருகின்றது., இவற்றின் சகல விளைவுகளும் பாரச்சுமைகளும் அழிவுகளும் நாட்டுக்கும் மக்களுக்குமே.

### மேல் கொத்மலை....

1ம் பக்க தொடர்ச்சி..

பட்டியல் எம்.பி.யு.மான யோகராஜன் கூறியதாக பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனவே மேல் கொத்மலைத் திட்டம் பற்றி ஆறுமுகம் தொண்டமான் கூறியிருப்பது என்பது சரியா? யோகராஜன் கூறியிருப்பது என்பது சரியா?

ஆனால் அமைச்சரவையில் எடுத்த முடிவு பற்றி எமக்கு நம்பகமாகத் தெரியும். மேல் கொத்மலைத் திட்டம் நடைமுறைப்படுத்த முடிவு செய்யப்பட்டது. அத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு எதிராக எவரும் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சாதகமாக இருக்கும் இலங்கை சூழலியல் அதிகார சபை சட்ட ஏற்பாடுகளை திருத்தியமைக்கும்படி பிரதமர் சூழலியல் அமைச்சருக்கும். அவரின் அதிகாரிகளுக்கும் பணிப்புரை வழங்கியுள்ளார் என்பதும் எமக்குத் தெரிந்த விடயமாகும். அதாவது மேல் கொத்மலைத் திட்டத்தை எல்லாவித எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது ஐ.தே.மு. தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்ஹவின் முடிவாகும்.

இந்நிலையில் இ.தொ.கா.வின் நிலைப்பாடென்ன? ம.ம.மு. தலைவர் ஆதரிக்கிறார். பெரும்பாலான மலையகத் தமிழ் மக்களும் அதனை எதிர்க்கின்றனர். ஆதரிப்பது போல் எதிர்க்கவும். எதிர்ப்பது போல் ஆதரிக்கவும் இ.தொ.கா.ற்கு எவ்வளவு காலத்திற்கு சாத்தியமாகும்?

ஆனால் வழமையான வழிமுறை போன்று ஆரம்பத்தில் எதிர்த்து பின்பு அடிபணிந்து போவதற்குப் பதிலாக இறுதிவரை இ.தொ.கா. எதிர்ப்பு நிலை நின்று மேல் கொத்மலைத் திட்டத்தை தடுத்து நிறுத்த மலையக மக்களுடன் உறுதியாக நிற்பார்களா? பொறுத்திருந்து பார்ப்போம். ● ●

வெளியிடுபவர் : இ. தம்பையா. இல. 47. 3ம் மாடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட். கொழும்பு 11. அச்சுப்பதிப்பு யூகே. பிரின்டஸ் 98A. விவேகானந்தா மேடு. கொழும்பு 13.

படிப்பகம்